Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனத்தை உழுத மகான்

சேயோன்

முரளி பதிப்பகம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனத்தை உழுத மகான்

7759

சேயோன்

"FORWARDED FREE OF COST
AND WITH THE COMPLIMENTS OF
THE Dept OF Ed'n. Govt. OF INDIA
NEW DELHI"

T-6, மஹாலக்ஷ்மி,
80-82, நாட்டுசுப்பராய முதலி தெரு,
மயிலாப்பூர், சென்னை-600 004

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

BIBLIOGRAPHICAL DATA

1.	Title of the Book	: MANATTHAI UZHUDHA MAHAN
2.	Author (Pseudonym)	: 'Seyone'
3.	Name and Occupation of the Author	N. MURUGAN, M.A., B.Sc., B.Ed, A.M.A. P.D.J., Programme Executive, All India Radio, MADRAS
4.	Date of Birth	: 29—12—1952
5.	Place of Birth	: Tirunelveli
6.	Language	: Tamil
7.	Edition	: First Edition
8.	Date of publication	: December, 1989
9.	Copyright Holder	: Author
10.	Paper Used	: 11. 6 K. G. D/Cr. White printing
11.	Size of the Book	: 18. 5 × 12. 5 cms.
12.	Printing point used	: 10 Point
13.	No. of Pages	: 152 Pages
14.	No. of Copies	: 1,000 Copies
15.	Artist	: Maruthi
16	Printer	: Sri Parameswari Press, Ms-4
17.	Binding	: Card Board Binding
18.	Price	: Rs. 15-00
19.	Publisher (with full address)	: M. NATARAJAN, : T—6, Mahalakshmi, 80-82, NattuSubbaraya Mudali st., Mylapore, Madras-4
20.	Subject	: Research articles on Tamil Literature and Thoughts of Saints.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாழ்த்துரை

பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்,
நிறுவனர், வள்ளியம்மாள் கல்வி அறம்,
அண்ணா நகர், சென்னை— 102.

வானுலகில் அரசோச்சும் முருகன் தமிழ்த் தலைவன்— வானொலியில் பணியாற்றும் முருகன் எனும் சேயோன் தமிழ்த் தொண்டன். ஆம்! தமிழ் இலக்கியங்களை நன்கு பயின்றவர். இவர்தம் தெய்வத் தமிழ்த் தொண்டு சிறக்க என வாழ்த்துகிறேன்!

இந்த நூலில் எட்டுக் கட்டுரைகளை— ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் அமைய எழுதியுள்ளார். முதல் கட்டுரையில் பாரதியின் பாடல்களுக்குப் புதுப்பொருள் களைக் கண்டு களிக்கின்றார். மணிமேகலையினை இரண்டாம் கட்டுரையில் ஆய்ந்து, பத்துத் தலைப்புக் களில் சாத்தனார் காட்டும் கருத்துக்களைத் தெளிவு படுத்துகிறார்.

மூன்றாவதில் குருநானக் உபதேச மொழிகள் பல தமிழ் அறநெறிகளுடன் ஒத்துள்ளதைத் தொட்டுக் காட்டுகிறார். நான்காவதில் நாவரசரையும், ஏழாவதில் விவேகானந்தரையும் நமக்கு விளங்க வைக்கிறார். ஐந்தாவதில் பிற்கால அவ்வையாரின் ஆத்திசூடியினையும் ஆறாவதில் கலிங்கத்துப் பரணியின் சிறப்பினையும் இறுதியில் பண்டைத் தூது இலக்கியம் இன்றைய திரைப் படப் பாடல்களில் எவ்வாறு ஏற்று— போற்றப்படு கின்றது என்பதையும் விளக்கியுள்ளார்.

ஆக, இந்நூல் முழுவதும் வடக்கும் தெற்கும் இணைந்த தெய்வ நெறியும், தமிழ் இலக்கிய வளனும் நன்குக் காட்டப் பெறுகின்றன. பயில்வார் இவ்வுண்மை யினை நன்கு அறிவர்.

அன்பர் சேயோன் இதுபோன்ற நூல்கள் இன்னும் பல தமிழ்உலகுக்கு அளித்துச் சிறந்து விளங்க இறைவன் அருள்வானாக! வளர்க அவர்தம் தமிழ்த்தொண்டு!!

அ. மு. பரமசிவானந்தம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அணிந்துரை

டாக்டர் கே. வி. காழியப்பன்,
மருத்துவ உளவியல் பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

உடல், மன நலம் பேணப் பயன்படுத்தும் அனுபவ அறிவு மிகவும் நமக்குத் தேவை. இத்தகையதொரு சீரிய முயற்சிக்கு நம்மை ஊக்குவிப்பதே 'மனத்தை உழுத மகான்'— என்ற இந்நூல். சேயோனின் நடை தேனருவி; ஆனால் தெவிட்டாதது.

புதுமைக் கவி பாரதியின் பல்வேறு சிந்தனை முத்துக்களை ஆசிரியர் தொகுத்து மாலையாக்கி நம்மிடம் அளித்திருக்கிறார்.

மனத்தின் நிலைகள் பல 'முழுமையான ஆளுமையைப் பெறுவதுதான் மனித வாழ்க்கை' என்பர் உளவியல் அறிஞர். பண்படப் பண்பட மனம் உன்னத நிலைக்குச் செல்கிறது; சீரிய புலன்காட்சி கிட்டுகிறது. இக்கருத்தினை ஆசிரியர் மிக அழகாகத் 'தாமரை மலர்' படக்காட்சி மூலம் நன்கு சித்தரித்துள்ளார். தாமரை மலரின் இதழ்கள் மனநிலைகள் என்ற உருவகமும், மனித வாழ்க்கை பல மனநிலைகளைக் கொண்டது என்ற ஒப்பீடும் ஆசிரியரது புதுமை படைக்கும் ஆக்கத்திறனுக்குச் சான்று!

நாவரசர், அவ்வையார், குருநானக், செயங்கொண்டார், விவேகானந்தர் முதலான மகான்களின் சிந்தனைகளைத் திரட்டி நம்முன் வைத்திருக்கிறார் சேயோன். பயன்படுத்திச் சீரிய ஆளுமை பெறுவது நம் கையில். நண்பர் சேயோன் மனத்தை உழுத மகானாகப் பரிணமிக்க வாழ்த்துவோம்!

கே. வி. காழியப்பன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிறப்புரை

டாக்டர் பொற்கோ,
தமிழ் இலக்கியத்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

'மனத்தை உழுத மகான்'— என்ற தலைப்பில் நண்பர் திரு. சேயோன் அவர்கள் உருவாக்கியுள்ள இந்த நூல் அவரது படைப்புக்களில் ஆறாவது நூலாக வெளி வருகிறது. பொருளைத் தேர்ந்தெடுப்பதிலும், கருத்துக் களை எடுத்துப் பேசுவதிலும், கட்டுரைகளுக்கும், நூல் களுக்கும் பெயர் சூட்டுவதிலும் இவருக்கென்று ஒரு புதுமையான தனிப் பாங்கு உண்டு. இந்தப் புதுமைப் பாங்கினை வழக்கம்போல இந்த நூலிலும் காண்கிறோம்.

'தாலாட்ட மறந்த தமிழ்க்கவிஞன்' என்ற ஒரு நூல், 'இளமையின் குரல்' என்று இன்னொரு நூல், 'புலமைப் புறா' என்ற பெயரிய மூன்றாவது நூல், 'காவியமும் ஓவியமும்' என்ற பெயரில் இன்னொரு நூல். இப்படிச் சிந்தனையைத் தூண்டி நெஞ்சைக் கவரும் கட்டுரைகளை எழுதிய சேயோன் 'அம்மா எப்ப நீ பாட்டியாவ?' என்ற தலைப்பில் ஒரு நாடகத் தொகுப்பையும் உருவாக்கி யுள்ளார்.

இவருடைய நூல்கள் எல்லாவற்றிலும் அறிவுக்கு விருந்தளிக்கும் கருத்துக்களைக் காணலாம். அன்றாட வாழ்வில் நாம் காணும் எளிய பொருள்களைக் கூடப் பல புதிய கோணங்களில் கண்டு, தான் கண்டதை எடுத்துக் கூறும் முறையால் இறவா இலக்கியம் படைக்கும் கவிஞனைப்போல நண்பர் சேயோன் 'மனத்தை உழுத மகான்' என்ற பெயரில் கருத்துக்கினிய சிந்தனைக்கோலம் தீட்டியுள்ளார்.

சிறந்த இலக்கியங்களையும், உயர்ந்த சான்றோர் களையும் உணர்ச்சி பொங்கும் இலக்கிய நடையில் வாசிப்பாளர்களுக்கு அறிமுகப்படுத்தும் சேயோன், பல

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முறை காதில் கேட்ட திரையிசைப் பாடல்களைப் பற்றி யும் புதிய நோக்கில் சிந்திக்க வைக்கிறார்.

எப்போதும் இன்முகத்தோடு சுறுசுறுப்பாக செயல் படும் சேயோனின் இயல்புகள் அவருடைய எழுத்துக்களி லும் பின்னணியாகவும் அடித்தளமாகவும் அமைந்து கிடப்பதை நம்மால் நன்றாக உணர முடிகிறது.

சேயோனின் இலக்கியப் பணி புதுமையானது; தேவை யானது; போற்றத்தக்கதும் ஆகும். இவருடைய பணி களின் சிறப்பினை உணர்ந்து தமிழ் உலகம் இவருக்கு ஊக்கம் அளித்து வலுவூட்டும் என்று நம்புகிறோம். சேயோனின் இலக்கியப் பணிகள் மேலும் மேலும் சிறப்புப் பெற்றுத் தொடர வேண்டும் என்று விரும்புகிறோம்.

'பொற்கோ'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்னுரை

உலகத்தார் அனைவரும் ஏற்றிப் போற்றும் உன்னதக் கருத்துக்களை— நீதி மொழிகளைப் பலர் நெஞ்சில் பதியச் செய்யும் ஆழ் சிந்தனையாளர்கள் படைத்த இலக்கியங்கள் காலங்கடந்து, மொழி கடந்து, இனங்கடந்து பொதுமைச் சிந்தனைகளை வளர்க்கின்றன. அவற்றையெல்லாம் அனைவரும் அறியச் செய்தல் வேண்டும் என்ற வேணவாவில் வெளிவருவதுதான் இந்த மனத்தை உழுத மகான்!'

'திருக்கோயில்', 'புதிய உமா', 'வாழும் தமிழ் உலகம்', 'அமுதசுரபி தீபாவளி மலர்' முதலான இலக்கிய இதழ்களில் இடம் பெற்ற எனது கட்டுரைகளையும் இத்துடன் இணைத்துள்ளேன். எட்டுக் கட்டுரைகளைத் தாங்கிய எழிலோவியமாக மலர்வதே இந்த மனத்தை உழுத மகான்!

இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய கல்விக்காவலர் பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் அவர்களுக்கும், அணிந்துரை அளித்த மருத்துவ உளவியல் அறிஞர் டாக்டர் K. V. காழியப்பன் அவர்களுக்கும், சிறப்புரை நல்கிய மொழியியல் வல்லுநர் டாக்டர் பொற்கோ அவர்களுக்கும் யான் என்றும் நன்றியுடையன்.

இந்நூலின் முகப்போவியத்தைச் சிறப்புற வரைந்தளித்த ஓவியக் கலையின் வித்தகர் மாருதி அவர்களுக்கும், அழகுடன் அச்சிட்ட ஸ்ரீ பரமேஸ்வரி அச்சகத்தாருக்கும் என் நன்றி உரித்தாகுக.

எனது இலக்கிய ஆய்வு நூல்களை விரும்பி ஏற்றுப் படிக்கும் தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் ஆறாவது படைப்பாக முகிழ்த்துள்ள 'மனத்தை உழுத மகான்'— நூலையும் ஏற்று மகிழ்வார்கள் என நம்புகிறேன்.

சேயோன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளே...

1. மனத்தை உழுத மகான் 6
2. மனிமேகலையின மணிமொழிகள் 42
3. பிஞ்சிலே பழுத்த பெம்மான் 73
4. அஞ்சல்! அஞ்சல்! 84
5. நீதிவானில் ஒரு நித்திலம் 97
6. தரணி போற்றும் பரணி 110
7. வீரமுரசு விவேகானந்தர் 128
8. திரையில் தூது 137

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1

மனத்தை உழுத மகான்

நிலத்தை உழுதால் நெல்மணிகள், நவதானியங்கள் கிடைக்கும். அவை உழுபவனுக்கும் அவனைச் சார்ந்த வருக்கும் உதவும். மனத்தை உழுதால் சிந்தனை முத்துக்கள், கவிதைக் கொத்துக்கள் விளையும். அவை உழுபவனுக்கும், அவனைச் சார்ந்தவருக்கும் மட்டுமன்றி, எக்காலத்தவருக்கும், எந்நாட்டவருக்கும், எம்மொழியின ருக்கும் பயன்படும் ஏற்றமிகு சிந்தனைப் பேழைகளாய் ஒளிரும்!

நிலத்தை உழுவதைப் பிறரும் பார்க்கலாம். உழுபவ னுக்கும், அவனைச் சார்ந்தவருக்கும் அதன் வளர்ச்சியும், மலர்ச்சியும் புலப்படும். மனத்தை உழுவதைப் பிறரால் பார்க்க முடியாது. ஆனால் மனத்தை உழுபவனின் மகோன்னதமான சிந்தனைகளின் வளத்தையும், நலத்தை யும் ஊகித்து உணர முடியும்.

நிலம் கண்ணுக்குப் புலப்படும் பருப்பொருள். மனம் கண்ணுக்குப் புலப்படா அகப்பொருள் பருப்பொருளான நிலத்தை உழுது பயிர் வைத்து, விளைச்சலைப் பெறுவது எளிய செயலே! ஆனால் அகப்பொருளான மனத்தை உழுது, மாட்சிமிகு கருத்துக்களையும், நீதிநெறி முறை களையும் உலகுக்கு உணர்த்துவதுதான் மகத்தான செயல்! அத்தகைய செயற்கரிய செயல்களைச் செய்த சான்றோர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களைத்தான் மனத்தை உழுத மகான்கள் என மானுடம் போற்றிப் பரவுகின்றது.

நினைப்பவரது நெஞ்சத் தாமரையில் நீங்காது நிறைந்து உறைபவன் இறைவன். இதனை,

நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்

என்ற நாவுக்கரசரின் நற்றொடர் வலியுறுத்தும்.

தொண்டை நாட்டில் திருநின்றவூரில் வாழ்ந்த பூசலார் நாயனார் இறைவனுக்குத் திருக்கோயில் கட்ட விழைந்தார். பக்தி இருந்தாலும் பரமனுக்குக் கோயில் எழுப்பப் பணம் இல்லை. அதனால் மனந்தளர்ந்து மாற்றம் பெற்றாரா? இல்லை. நினைத்ததை முடிக்கும் மனஉறுதியோடு மனத்தில் கோயில் கட்ட எண்ணினார். அந்தத் திருப்பணியை நல்ல நாளில் தொடங்கி, அஸ்திவாரம் எழுப்பினார்; கோயிலில் என்னென்ன அமைப்புக்கள் இருக்குமோ அனைத்தையும் நிறுவினார்; இறைவனைப் பிரதிட்டை செய்ய நல்ல நாளும் குறித்தார். அதே நாளில் காடவர் நாட்டரசன் காஞ்சியில் கைலாயநாதர் திருக்கோயிலினை நீண்டகாலமாகக் கட்டி கும்பாபிடேகம் செய்ய உறுதி செய்திருந்தார். பூசலார் நாயனார் கட்டிய மனக்கோயில் அவரன்றி வேறொரு வருக்கும் தெரியாது. காடவர்கோன் கட்டிய கைலாய நாதர் திருக்கோயிலை அனைவரும் அறிவர். பக்தன் எழுப்பிய மனக்கோயிலுக்குத்தான் இறைவன் முதலில் சென்றான்; அரசன் கட்டிய புறக்கோயிலுக்கு அல்ல. எனவே ஆண்டவனும் ஆட்சி கொள்ள விரும்புவது புறக் கோயிலில் அல்ல— அகக்கோயிலில்தான்!

மனம் என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? அதன் செயல்பாடுகள் என்னென்ன? முதலான வினாக் கணைகள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் தோன்றும். மனிதர் என்ற சொல்லே மனம் உடையவர் என்பதைக் குறிக்கும். உயிரை இயக்கும் ஆற்றல் உடையது என்கிறார் வான் புகழ் வள்ளுவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனத்தானாம் மாந்தருக்கு உணர்ச்சி [1]

ஆறாவது அறிவை மனிதர் பெறக் காரணமாக இருப்பதே மனம் என விளக்கியுள்ளார் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனார்.

ஆறறி வதுவே அவற்றொடு மனனே [2]

எண்ணங்களின் திரண்ட நிலையை மனம் என்பதைப் பல மனவியல் வல்லுநர்கள் கூறியுள்ளனர். அறிவால் அறியப் படுவன அறிவியல்; மெய்யுணர்வால் உணரப்படுவன மெய்ஞ்ஞானம். மனம் அறியப்படுவதாகவும் உணரப் படுவதாகவும் உள்ளது. [3]

மனம் ஓரிடத்தில் நில்லாது அலைபாயும் இயல்பினை உடையது; நுண்ணிய ஆற்றல் வாய்ந்தது; ஒருவனின் உயர்ச்சிக்கும், தாழ்ச்சிக்கும் வித்தாய் விளங்குவது. மனம் அடிக்கடி அலைந்து புறநிலைப்படுவதால் வெளியுலகு பற்றித் தெளிவாக அறிய முடிகிறது. அவ்வாறு மனம் புறநிலைப்படும்போது அது தீயவழி களில் செல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதே மனம் இதயத்தில் தங்கி அகமுகப்படும்போது மெய்ஞ்ஞான உணர்வு தோன்றும். அவ்வாறு மெய்ஞ்ஞான உணர்வி னால் வெளிப்படுத்தும் சிந்தனைகளே காலங்கடந்து— இனங்கடந்து— மொழிகடந்து அனைவருக்கும் பயன் படும் பொதுமைக் கருத்துக்களாக உருப்பெறுகின்றன. இறவாத தமிழ் இலக்கியங்களைப் படைத்த கவிஞர்களும், சித்தர்களும் தம் மனத்தை இதயத்தில் இருத்திப் பாடிய தால்தான் அவை உலகம் போற்றும் உன்னதப் படைப்புக் களாக ஒளிர்கின்றன.

---

1. திருக்குறள் 453
2. தொல்காப்பியம் 1526
3. டாக்டர் கரு. நாகராசன், 'தமிழரின் மனம் பற்றிய கோட்பாடு', அன்புப் பதிப்பகம், செங்கல்பட்டு, பக்கம்— 43

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனம், நெஞ்சம், உள்ளம், சிந்தை, சித்தம், அகம், இதயம் ஆகிய ஏழு சொற்களும் மனத்தின் தன்மைகளைக் குறிக்கின்றன. திட்ப நுட்பஞ் செறிந்த இந்தச் சொற்கள் உணர்த்தும் பொருள் மனத்தின் வெவ்வேறு நிலைகளைத் தெள்ளிதின் விளக்குகின்றன. மனத்தைக் குறிக்கும் அத்துணைச் சொற்களையும் செந்தமிழ்ப் புலவர்கள் தக்க வகையில் பயன்படுத்தியுள்ளனர்.

தமிழ் இலக்கியங்கள் பல இதயத்தைத் தாமரை மலரோடு ஒப்பிட்டுக் காட்டுகின்றன. மனவியல்



வல்லுநர்கள், அறிவியல் ஆய்வாளர்கள், மெய்ஞ் ஞானிகள்— இவர்கள் அனைவரும் மனத்திற்குக் கொடுக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கும் விளக்கமும், மனம் செயல்படும் முறைகளுக்கு அளிக்கும் பெயர்களும், மனம் வெளிப்படுத்தும் உணர்வுகளுக்கு வழங்கும் முக்கியத்துவமும் இதயத்தைத் தாமரை மலராகப் படம் பிடித்துக் காட்டும் உணர்வு மேலிடுகிறது.

ஆம்! நம் இதயம் சிறந்ததொரு தாமரை மலரே! மனமும், நெஞ்சமும் புறமனத்தைக் குறிக்கின்றன; உள்ளமும், சிந்தையும் நடுமனத்தைச் சுட்டுகின்றன; அகமும், சித்தமும் அடிமனத்தை உணர்த்துகின்றன.

மனத்தைக் குறிக்கும் ஆறு சொற்களின் அமைவிடமாகத் திகழும் புறமனம், நடுமனம், அடிமனம் மூன்றும் தங்குவதற்கு நிலைக்களனாகத் திகழ்வது இதயமே! அதனால்தானோ என்னவோ இளம் காதலர் இருவர் பேசிக் கொள்ளும்போது 'என் இதயத்தைக் கொடுத்து விட்டேன்' எனக் கூறுகின்றனர் போலும். மனம் ஒரு நுண்பொருள்; இதயம் அதன் உட்பொருள்.

புறமனச் செயல்கள் ஒடுங்கிப் பக்குவப்படுத்தப்பட்டு தூய்மை அடையும்போது, அது நடுமனமாகிறது. அந்த நடுமனம் மேலும் பக்குவமடையும்போது அடிமனமாகிறது. அந்த அடிமனம் இறையருளாகிய உள்ளொளி பெற வழி வகுக்கிறது.

மின்மினிப் பூச்சிதன்னுள் மெய்யொளி கண்டாற் போல
உன்மனம் ஒடுங்கியே உள்ளொளி கண்டால் பின்னை
சென்மனமும் இல்லை அந்தச் சிவத்துளே சேர்வாய் [4]

புறமனத்தால் பெறப்படும் கருத்துக்கள் அடங்கிய நூல் ஆழமில்லாமல் மேம்போக்காக இருக்கும். அதனை ஒருமுறைப் படித்து ஒதுக்கத்தகும் நூல் வகையில் அடக்கலாம். நடுமனத்தால் பெறப்படும் சிந்தனைகள் கொண்ட நூல் ஆழமானதாகச் சிந்தனையைத் தூண்டும்

---

4. கணபதிச்சித்தர், 'சித்தர்பாடல்கள்', (பூம்புகார் பிரசுரம், சென்னை—13) பாடல் 41

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வகையில் அமையும். அதனைப் பலமுறைப் படித்துச் சிந்திக்கத்தகும் சிறந்த நூல் வகையில் சேர்க்கலாம். அடிமனத்தால் அகழ்ந்து பெறப்படும் திட்ப நுட்பஞ் செறிந்த சிந்தனைகள் அடங்கிய நூல் காலங்கடந்து நின்று கற்போரைக் கனிவித்து ஞாலம் புகழும் நிலையில் ஒளிரும்! அதனையே அனைத்து மொழியினரும், நாட்டினரும் ஏற்றிப் போற்றும் ஒப்பற்ற நூல் வகையில் அடக்கலாம். இத்தகு ஒப்பற்ற நூல்களைப் படைத்தவர் களையே மானுடம் போற்றும் மகத்தான சிந்தனைகளை வழங்கியவர்களையே 'மனத்தை உழுத மகான்கள்' எனப் போற்றலாம். மனத்தை உழுத மகான்களில் மணிமுடி யாகத் திகழ்பவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்!

முப்பத்தொன்பது ஆண்டுகளே வாழ்ந்த பாத்தேர் சாரதி பாரதியார் படைத்த இலக்கியங்கள் பலப்பல. தேசீய கீதங்கள், தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், பல்வகைப் பாடல்கள், தனிப்பாடல்கள், சுயசரிதை, வசன கவிதை முதலான பல்வேறு தலைப்புக் களில் எண்ணிறந்த பாடல்களைப் பாடியுள்ளார். கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு ஆகிய முப்பெரும் பாடல்கள் காவியங்களாகவே உள்ளன. தத்துவம், கலைகள், மாதர், சமூகம் முதலான பொருளில் நிறையக் கட்டுரைகளை எழுதியுள்ளார். ஞானரதம், நவதந்திரக் கதைகள், சந்திரகிரியின் கதை, சில வேடிக்கைக் கதைகள், சின்ன சங்கரன் கதை, தராசு முதலான கதைகளைப் புனைந்துரைத்துள்ளார். 'சுதேசமித்திரன்', 'சக்கரவர்த்தினி', 'இந்தியா' முதலான பத்திரிகைகளில் பணியாற்றி வியத்தகு புதுமைகளைச் செய்துள்ளார். அவரது கடிதங்களே சிறந்த இலக்கியங் களாக மலர்ந்துள்ளன. இப்படிப்பட்ட பல்வேறு இலக்கியங்களை— புதுமையும், புரட்சியுமிக்க கருத்துக் களை— புத்தம் புதுச் சொல்லாட்சி கொண்ட புதிய இலக்கிய வடிவங்களை மிகக் குறுகிய வாழ்நாளில் படைத் துள்ளார் பாட்டுக்கொரு புலவர் பாரதியார். அவரது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படைப்புக்கள் 'பாரதி பரம்பரை'யையே உருவாக்கியுள்ளது. இவையனைத்தும் பாரதியாரின் அடிமனத்திலிருந்து வெளியான ஆழமிகு இலக்கியங்கள்!

காலத்தின் கட்டாயத்தால் விடுதலை இயக்கப் பாடல்களை மிகுதியாகப் பாடிய பாரதியார், காலங்கடந்து நிற்கும்— பொதுமைச் சிந்தனைகளைப் புலப்படுத்தும் புதுமைப்— பாடல்களை— புரட்சிப் பாடல்களை எழுச்சியோடு பாடியுள்ளார். மரபுக்கும் புதுமைக்கும் பாலங் கட்டிய பாரதி மானுடம் போற்றும் மகத்தான சிந்தனைகளை வழங்கியுள்ளார். அவற்றை அனைவரும் நாளும் பின்பற்றி நடந்தால் தாம் உயர்வதோடு, தம்மைச் சார்ந்தாரையும் உய்வித்து, நாட்டையும் முன்னேற்றலாம்; சமுதாயவிழிப்புணர்வும் பொறுப்புணர்வும் மேலோங்கும்; தனிமனித மேம்பாடும் பொதுநல வளர்ச்சியும் ஏற்படும்.

மனத்தை உழுத மகானின் மணிமொழிகள் :

1. அறிவைப் பெறு!
2. ஆற்றலை வளர்!
3. இல்லறம் பேணு!
4. இறை உணர்வு கொள்!
5. உடலை உறுதிசெய்!
6. உறுதியோடு உயர்!
7. கடமை ஆற்று!
8. ஒற்றுமை ஒழுகு!
9. நாட்டை உயர்த்து!
10. நானிலம் போற்ற வாழ்!

1. அறிவைப் பெறு!

விலங்குகளினின்று மனிதனை வேறுபடுத்திக் காட்டுவதே ஆறாவது அறிவான பகுத்தறிவு. அந்த அறிவை வேறு எங்கிருந்தாவது பெறவேண்டுமா? இல்லை. அது மானுடப் பிறவி எடுத்தபோதே தோன்றி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விடுகிறது. உள்ளடங்கிக் கிடக்கும் அறிவை வெளிக் கொணர வேண்டும். அதற்குத் துணை செய்வது கல்வி; வளஞ்சேர்ப்பது பட்டறிவு. அதனால்தான் கல்விக்கு விளக்கம் அளித்த விவேகானந்தர் மனிதனில் அடங்கிக் கிடக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவதே கல்வி என்றார்.[5] படிப்பறிவு— ஏட்டுக்கல்வி, அறியாமை இருள் அகற்றி அறிவு ஒளியூட்டும். பட்டறிவு— அனுபவக் கல்வி, அறிவினை விரிவாக்கவும், உலகியல் வாழ்வுக்கேற்ப ஒழுகும் அணுகுமுறைகளைத் தெளிவு படுத்தவும் பயன்படும்.

மனிதன் தன்னை அழிவிலிருந்து காப்பாற்றிக் கொள்ளச் சிறந்ததொரு ஆயுதமாகப் பயன்படுத்துவது அறிவு; உலகிலுள்ள அனைத்தையும் அடைவதற்கு அரியதோர் கருவி அறிவு; பின்னர் நிகழவிருப்பதை முன்னரே அறியச் செய்யும் ஆற்றல்மிகு சாதனம் அறிவு— என அறிவின் பயன்களை அடுக்கி உரைக்கிறார் தெள்ளு தமிழ் வள்ளுவர்.

அறிவு அற்றங் காக்கும் கருவி [6]

அறிவு உடையார் எல்லாம் உடையார் [7]

அறிவு உடையார் ஆவது அறிவார் [8]

அறிவின் ஆற்றலையும், அதற்கு உரமூட்டி ஒளி கொடுக்கவல்லது கல்வி என்பதையும் நன்குணர்ந்த பாரதியார், கல்வியின் இன்றியமையாமையைப் பல பாடல்களில் பாடியுள்ளார். கல்வியை இளமைப் பருவம் முதல் கற்றல் வேண்டும். அப்போதுதான் அது பசுமரத்

---

5. 'Education is the manifestation of the perfection already in man'— Swami Vivekananda.
6. திருக்குறள் 421
7. ,, 430
8. ,, 427

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாணிபோல் பதியும். அதுவும் ஒவ்வொருநாளின் தொடக்கப் பொழுதான காலை நேரத்தில் படிப்பது சாலச் சிறந்தது; உரைநடை— இயல் மட்டுமன்றி, இசையும் கற்பது ஏற்றமுடைத்து என்கிறார். அதனையும் பெரியவர்களிடம் கூறினால் 'இவன் அதிகப்பிரசங்கியாட்டம் அறிவுரை கூற வந்து விட்டான்' என வெறுப்புக் கொண்டு ஏற்க மாட்டார்களோ என நினைத்த கவிஞர் பாப்பாவுக்குச் சொல்கிறார்.

காலை எழுந்த உடன் படிப்பு— பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு— என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா [9]

விளையாட்டுக் கல்வி (Physical Education) உடலுக்கு உறுதியையும், மனதுக்குத் துணிவையும் அளிக்க வல்லது. எனவே குழந்தைகள் ஒவ்வொரு நாளும் தவறாமல் படிப்பு, பாட்டு, விளையாட்டு மூன்றிலும் பயிற்சி பெறவேண்டும். அப்பொழுதுதான் அறிவு பல்துறையில் வளர்ந்தோங்கும்.

கல்வியைப் பெறுபவரும், பெறச் செய்பவரும் பண்பின் நிலைக்களமாய்த் திகழும் அன்புடையவராய் இருத்தல் வேண்டும். அந்த அன்பு கல்வியறிவைப் பெறுவதற்குத் துணை செய்யும். கல்வியைப் பெறும் மாணவர்களுக்கும், கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் இடையில் அன்பு மிகுதியாகப் பரிணமித்தல் வேண்டும். அப்போதுதான் பயமற்ற கல்வியைப் பெறமுடியும்; அவ்வப்போது ஏற்படும் அய்யங்களைத் தீர்த்துத் தெளிவு கொள்ள இயலும்; ஏன்? எப்படி? என்ன? எப்போது? எங்கே? யார்? முதலான ஆறு வினாக்களுக்கு விடைபெற்று ஆழ்ந்த அறிவை வளர்க்க முடியும். இந்த ஆறு வினாக்

---

9. பாரதியார் கவிதைகள், பாப்பாப் பாட்டு—6

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களும் மனிதனைச் சிந்திக்கத் தூண்டி, வாழ்வில் சிறந்தோங்கச் செய்யும் என்கிறார் அறிஞர் கிப்லிங். [10]

அன்பென்று கொட்டு முரசே!— அதில்
யார்க்கும் விடுதலை உண்டு;
பின்பு மனிதர்கள் எல்லாம்— கல்வி
பெற்றுப் பதம்பெற்று வாழ்வார்
அறிவை வளர்த்திட வேண்டும்— மக்கள்
அத்தனை பேருக்கும் ஒன்றாய் [11]

எனவே அறிவை வளர்க்கத் துணைநிற்கும் கருவிகளான அன்பையும், வினாத்தொடுக்கும் திறனையும் மிகுவித்தல் வேண்டும்.

தெய்வத்தை நாளும் வணங்கி வழிபடும் மக்கள் அறிவை வளர்க்க நாளும் படிக்காமல் இருக்கிறார்களே? தெய்வ வழிபாட்டுப் பாடல்களைப் பாராயணம் செய்து மனமுருகிப் பாடும் அளவிற்கு, அறிவை வளர்த்து, ஆற்றலை மிகுவிக்கும் நூல்களைக் கற்காமல் கிணற்றுத் தவளைகளாய் உள்ளனரே? இறைவனைத் துதிப்பதற்காக நாள்தோறும் மலர்தொடுத்து மாலை அணிவித்து அகம் மகிழும் அளவிற்கு, அறிவைச் சீர்திருத்திச் செம்மைப் படுத்தும் சிறந்த நூல்களைப் படித்து, அவற்றின் சுவையில் ஆழ்ந்து திளைக்காமல் இருக்கிறார்களே? வேண்டுதலை நிறைவேற்றுவதற்காக உண்ணா நோன்பு இருந்து ஆண்டவனை வணங்கும் அளவிற்கு, ஆண்டுக்கு இத்தனை நூல்களைப் படித்து அறிவையும் ஆற்றலையும்

---

10. "I keep six honest serving men
They taught me all I knew
Their names are What and Why and When
And How and Where and Who"
—Rudyard Kipling

11. மகாகவி பாரதியார் பாடல்கள், பல்வகைப் பாடல்கள் 3—28 & 29.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெருக்குவேன் என்ற அறிவு நோன்பினை வளர்க்காமல் அறியாமையில் உழல்கின்றார்களே, என எண்ணிய மகாகவி, அறிவைத் தெய்வம் என்று கூறிவிட்டால், அப்பொழுதேனும் அறிவுத் தெய்வத்தைப் போற்றி வளர்ப்பார்களா என்ற வேணவாவில் 'அறிவே தெய்வம்' என்கிறார்.

ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்! பல
ஆயிரம் வேதம் அறிவொன்றே தெய்வம்உண்
டாம் எனல் கேளீரோ? [12]

அறிவைத் தெய்வமாகக் கருதிப் போற்றி வளர்த்தால் அறிவு விரிவடையும்; சிந்தனைத் தெளிவு ஏற்படும்; பரந்த மனப்பான்மை தோன்றும்; வீரமும் தீரமும் விளங்கும்; செல்வமும் செழிப்பும் ஓங்கும்; பல்துறைக் கலைத்திறன் வளரும்; சீர்மையும் சிறப்பும் மலரும். அதனால் கவலை போகும்; சிறுமை ஒடுங்கும்; நோய் நீங்கும்; வறுமை ஒழியும்; துன்பம் தொலையும்; அவலம் அழியும்; அச்சம் அகலும்; அறியாமை விலகும். அன்பின் முதிர்ச்சி அருள் ஆவது போல், அறிவின் முதிர்ச்சி ஞானம் ஆகும். அதனை மெய்யறிவு என்றும் அறிஞர்கள் கூறுவர். அந்த மெய்யறிவையே வேதங்களும் உபநிடதங்களும் வலியுறுத்து கின்றன. அந்த ஞானத்தை அமரகவி பாரதியார் 'ஞானபாநு— ஞானச்சூரியன்' என்றே போற்றுகிறார்.

திருவளர் வாழ்க்கை, கீர்த்தி, தீரம், நல்லறிவு, வீரம்
வருவுபல் கலையின் சோதி, வல்லமை என்பவெல்லாம்
வருவது ஞானத் தாலே வையக முழுதும் எங்கள்
பெருமைதான் நிலவி நிற்கப் பிறந்தது ஞானபாநு

---

12. மகாகவி பாரதியார் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள்—10

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவலைகள் சிறுமை, நோவு, கைதவம், வறுமைத் துன்பம்,
அவலமாம் அனைத்தைக் காட்டில் அவலமாம் புலைமை அச்சம்,
இவையெலாம் அறிவிலாதம் என்பதோர் இருளிற் பேயாம்,
நவமுறு ஞானபாநு நண்ணுக; தொலைக பேய்கள் [13]

2. ஆற்றலை வளர்!

ஒருவன் நிறைந்த அறிவைப் பெற்றால் மட்டும் போதாது. பெற்ற அறிவை பல்துறைத் திறமைகளை வளர்க்கப் பயன்படுத்துதல் வேண்டும். எந்தெந்தத் துறைகளில் ஒருவனுக்குத் திறமை மிகுதியாக இருக்கிறதோ, அந்தந்தத் துறையில் முழுக்கவனம் செலுத்தி உழைக்க வேண்டும். உழைப்பே உயர்வின் வித்து. உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ? பாடுபடுபவர்க்குத்தானே இந்தப் பாருலகம் சொந்த மாகும்.

'உழைப்பு எப்போதும் உண்டு. தெய்வமே சரண் என்றிருப்போர் உள்ளத்திலே தாபமில்லாமல் உழைப்பார் கள்; ஆனபடியால் அவர்களுடைய செய்கைக்கு வலிமை அதிகம்— வேகம் அதிகம்— உயர்வு அதிகம்— அழகு அதிகம்— பயன் அதிகம் என்பது சொல்லாமலே விளங் கும். 'நாம் கவலை, பயம் இரண்டு நாய்களுக்கும் உள்ளத்தை இரையாக்காமல் சந்தோஷமாகப் பாடிக் கொண்டு நிலத்தை உழுவது நல்லது. அழுதுகொண்டே உழுதால் உழவுக்குக் கெடுதி. உழைக்கும்போது நான் என்ற பாரத்தை நீக்கிவிட்டு உழைத்தால் வேலை கிறுகிறுவென்று வேகமாகவும், பிழையில்லாமலும் நடக்கும். தன்னைத் தலையிலே வைத்துக்கொண்டு வேலை செய்தால் வேலை குழம்பும்!'

---

13. பாரதியார் கவிதைகள், தோத்திரப் பாடல்கள்—71

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி
அஞ்சி உயிர் வாழ்தல் அறியாமை— தஞ்சமென
வையமெலாங் காக்கு மகாசக்தி நல்லருளை
ஐயமறப் பற்றல் அறிவு [14]

புஸ்தகாலய
7759

ஆற்றலை எப்படி வளர்க்க வேண்டும் என வரையறுத்த மகாகவி எந்தெந்தத் துறைகளில் ஆற்றலை வளர்க்க வேண்டும் என்பதையும் பட்டியல் போட்டுக் காட்டுகிறார்.

இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
எந்திரங்கள் வகுத்திடு வீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே!
கடலில் மூழ்கிநல் முத்தெடுப் பீரே!
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந்தொழில் செய்திடு வீரே!
பெரும்பு கழ்நுமக் கேயிசைக் கின்றேன்.
பிரமதேவன் கலையிங்கு நீரே!

மண்ணெடுத்துக் குடங்கள் செய்வீரே!
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே!
உண்ணக் காய்கனி தந்திடு வீரே!
உழுது நன்செய் பயிரிடு வீரே!
எண்ணெய் பால்நெய் கொணர்ந்திடு வீரே!
இழையை நூற்றுநல் ஆடைசெய் வீரே!
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்!
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே!

பாட்டும் செய்யுளும் கோத்திடு வீரே!
பரத நாட்டியக் கூத்திடு வீரே!
காட்டும் வையப் பொருள்களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்திடு வீரே!

---

14. பாரதியார் கட்டுரைகள், 25. உழைப்பு, பக்கம்— 117 & 118 (வானதி பதிப்பகம்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாட்டி லேயறம் கூட்டிவைப் பீரே!
நாடும் இன்பங்கள் ஊட்டிவைப் பீரே!
தேட்டமின்றி விழியெதிர் காணும்
தெய்வமாக விளங்குவிர் நீரே! [15]

நாட்டில் உள்ள பல்வேறு தொழில்களில் ஏதேனும் ஒன்றினைச் செய்ய முனைந்து, அதனைத் திறம்படச் செய்ய வேண்டும். ஒரு தொழிலில் வல்லுநராகத் திகழ்ந்த பின் அவரே வேறு சில தொழில்களிலும் ஈடுபடலாம். அதில் வெற்றி பெறுவது அவரவரின் முயற்சியையும் உழைப்பையும் பொருத்தே அமையும். இப்படி வாழ்வின் இன்றியமையாத் தேவைகளை நிறைவு செய்வதற்காக உழைப்பவர்கள், மனம் கவலையின்றி மகிழ்வோடிருக்கக் கலைகளிலும் ஈடுபடலாம். கவிதை புனையலாம்; கட்டுரை வரையலாம்; நடனம் ஆடலாம்; அறம் புரியலாம். இவ்வாறு உடல் உழைப்பிலும் உள மகிழ்ச்சியிலும் சிறந்து, வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவர்களே கண்ணெதிரில் தெய்வமாக விளங்குவர் என்பதைத் தெளிவுறுத்துகிறார் பாட்டுக்கொரு புலவர் பாரதியார். இதனை,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் [16]

என்னும் குறட்பா வலியுறுத்துகிறது.

3. இல்லறம் பேணு!

மனித வாழ்க்கை முழுமை அடைவதே இல்லறத்தில் தான். எனவே இல்லறம் என்னும் நல்லறத்தைப் போற்றி வளர்த்தல் வேண்டும். அறிவைப் பெறுவதற்

15. பாரதியார் கவிதைகள், பல்வகைப் பாடல்கள் —8 தொழில்.
16. திருக்குறள்—50

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காகக் கல்வி கற்று, அதன் பயனால் ஆற்றலை வளர்த்து தொழிலில் ஈடுபட்ட பின் ஒருவன் வாழ்க்கைத் துணையை நாடுகிறான். அந்த வாழ்க்கைத்துணையும் அவன் விரும்பியபடி அமைந்தால், பெருமகிழ்வு கொண்டு இல்லறம் பேணுகிறான். அதன் நற்பயனாய் மகப்பேறு அடைந்து, பிள்ளைகளை வளர்த்து சமுதாயம் தழைக்கச் செய்கிறான். இப்படி இல்லற வாழ்க்கை ஒரு சக்கரமாக— காலச் சக்கரமாகவே சுழலுகிறது.

காலம் என்பது கறங்குபோல் சுழன்று
மேலது கீழாய் கீழது மேலாய்
மாற்றிடும் தோற்றம் [17]

அத்தகைய இல்லறத்தினை நல்லறமாக்கும் நாயகன்— நாயகி இருவரும் உயர்வு தாழ்வின்றிச் சமமெனக் கருதி, கருத்தொருமித்தவராய் மனம் பொருந்திய மணம்— திருமணம் புரியவேண்டும். வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும் வழக்கம் ஒழியவேண்டும். வரதட்சிணைக் கொடுமை அழியவேண்டும். நாயை விற்பதுபோல் பெண்களையும் வரதட்சிணை எனும் விலை மூலம் விற்கும் வழக்கம் வேரறுக்கப்பட வேண்டும். ஒரு பெண்ணைக் கொல்லுவதற்குத் துணிவில்லாமல் வேரொருவரிடம் விலை பேசிக் கொடுப்பதற்குச் சமமே வரதட்சிணை என்பதை மகாகவியின் பாடல்கள் உய்த்துணரச் செய்கின்றன.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ் வையம் தழைக்குமாம் [18]

நல்லவிலை கொண்டு நாயை விற்பார், அந்த
நாயிடம் யோசனை கேட்ப துண்டோ ?

---

17. பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, 'மனோன்மணீயம்' முதல் அங்கம், முதற்களம், வரி 94—96
18 மகாகவி பாரதியார் பாடல்கள், பல்வகைப் பாடல்கள்—4

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொல்லத் துணிவின்றி நம்மையும் அந்நிலை
கூட்டிவைத் தார்பழி கூட்டி விட்டார் [19]

அறிவில் சிறந்து, அன்பில் உயர்ந்து, அறத்தில் மேம்பட்டு, வீரசுதந்திரத்தில் மிக்கோங்கியிருப்பதே பெண்ணின் குணங்களாகும். அதுவே பெண்ணறமாகும். அதேபோல் அறியாமை எனும் பெரிய இருட்டினை அறிவொளியால் போக்குதலும், பெண்ணடிமை எனும் பெருவழக்கத்தைத் தவிர்த்தலும், கலையுணர்ச்சியும், அழகுணர்ச்சியும் இல்லாமல் வாழ்கின்ற பழக்கத்தை அறவே ஒழித்தலும் பெண்ணறமாகும்.

ஞானம் நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம் [20]

அமிழ்ந்து பேரிருளாம் அறியாமையில்
அவலம் எய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணறமாகுமாம் [21]

பெண்ணறத்தினை ஆண்மக்கள் போற்றுதல் வேண்டும். கற்பு பெண்களுக்கு மட்டுமன்று ஆண்களுக்கும் தான். விரும்பிய ஒருவனை மணக்கும் உரிமை பெண்ணுக்கு வழங்கப்படுதல் வேண்டும். காதலர் இருவரின் திருமணததிற்கு இசைந்து அவர்களின் இல்லறம் இனிதே நடக்கத் துணைபுரிதல் வேண்டும். அப்போது தான் அங்கே அன்பு பரிமளிக்கும்; இன்பம் இனிதோங்கும்; ஈதல் சிறக்கும்; இல்லறம் தழைக்கும்; நல்லறம் வளரும்; நன்மக்கட்பேறு மலரும்.

பெண்ணறத்தினை ஆண்மக்கள் வீரந்தான்
பேணுமாயின் பிறகொரு தாழ்வில்லை

---

19 ,, ,, ,, ,, 6—4
20. ,, ,, ,, ,, 4—3
21. ,, ,, ,, ,, 4—6

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண்ணைக் காக்கும் இரண்டிமை போலவே
காதலின்பத்தைக் காத்திடு வோமடா [22]

கற்பு நிலையென்று சொல்ல வந்தார். இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம் [23]

காதல் ஒருவனைக் கைப்பிடித்தே அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து
மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி ! [24]

இல்லறம் பேணுதற்கு இன்றியமையாத பெண்களின் அடிமைத்தனத்தை அறவே ஒழிக்கப் புதுமைப் பெண்ணைப் படைத்துப் பெண்ணறத்திற்கு இலக்கணமும் வகுத்த பாரதியார் பாடல்கள் இல்லறத்தின் இருகண் களாக ஆண், பெண் இருவரையும் போற்றுகின்றன; அவர்தம் நல்லுறவை வலியுறுத்துகின்றன; இல்லறத்தின் வாயிலாய் நாட்டுக்கு அவர்கள் ஆற்ற வேண்டிய பணி களையும் உணர்த்துகின்றன!

4. இறை உணர்வு கொள் !

மனிதப் பிறவியில் இறை உணர்வு மிகவும் இன்றியமையாதது. வேறு எந்த உயிரினங்களும் ஆண்டவனைப் போற்றிப் பாடும் வாய்ப்பினைப் பெறவில்லை. ஆறறிவு படைத்த மனிதனே இறைவனைப் பாடித் துதிக்கும் அரியதொரு வாய்ப்பினைப் பெற்றிருக் கின்றான். அத்தகைய நல்ல வாய்ப்பினை இழக்கலாமா? எய்த அம்பு, இழந்த வாய்ப்பு, கடந்த காலம், பேசிய பேச்சு— இவை நான்கும் திரும்ப வராதன. எனவே இறைவனைப் பாடிப் போற்றி மகிழும் பக்தியை

22. பாரதியார் பாடல்கள், பல்வகைப் பாடல்கள்—5
23. ,, ,, ,, —5
24. ,, ,, ,, 6—8

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வளர்த்தல் வேண்டும். அதனால் என்னென்ன பலன்கள் கிடைக்கும் என்பதை மகாகவி பாரதியார் பல பாடல் களில் எடுத்துக் கூறியுள்ளார்.

பக்தியினால் அறிவு தெளிவடையும்; செயல் செம்மை யடையும்; கல்வி சிறப்படையும்; உறவு வலுவடையும்; தத்துவம் விளக்கம்பெறும்; சஞ்சலம் நீங்கும்; காமம் மறையும்; சோர்வு குறையும்; துன்பம் தொலையும்; சோம்பல் ஒழியும்; வல்லமை தோன்றும்; வளமை பெருகும்; வாழ்வு மேலோங்கும்!

பக்தியினாலே— இந்தப்
பாரினில் எய்திடும் மேன்மைகள் கேளடி!
சித்தந் தெளியும்,— இங்கு
செய்கை அனைத்திலும் செம்மை பிறந்திடும்.
வித்தைகள் சேரும்— நல்ல
வீரர் உறவு கிடைக்கும் மனத்திடைத்
தத்துவம் உண்டாம் நெஞ்சிற்
சஞ்சலம் நீங்கி உறுதி விளங்கும். [25]

கல்வி வளரும்— பல
காரியங் கையுறும், வீரியம் ஓங்கிடும்
அல்லல் ஒழியும்— நல்ல
ஆண்மை உண்டாகும், அறிவு தெளிந்திடும்,
சொல்லுவ தெல்லாம்— மறைச்
சொல்லினைப் போலப் பயனுளதாகும்மெய்
வல்லமை தோன்றும்— தெய்வ
வாழ்க்கையுற்றேயிங்கு வாழ்ந்திடலாம் [26]

பக்தியின் சிறப்புக்களையெல்லாம் பட்டியலிட்டுக் காட்டிய பாரதியார் எழுபத்தெட்டு தோத்திரப் பாடல்

---

25. & 26. பாரதியார் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள்—15

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களைப் பாடியுள்ளார். பாரதத் திருநாட்டையே பாரதத் தாயாக உருவகித்துப் பாடிய கவிமுரசு பாரதியார்

வந்தே மாதரம் என்போம்— எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும் என்போம் [27]

—என்றும்

முப்பதுகோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள் இவள்
செப்பு மொழி பதினெட்டுடையாள்— எனிற்
சிந்தனை ஒன்றுடை யாள்
நாவினில் வேத முடையவள் கையில்
நலந்திகழ் வாளுடை யாள்— தனை
மேவினர்க்கு இன்னருள் செய்பவர் தீயரை
வீட்டிடு தோளுடை யாள்
அறுபது கோடி தடக்கைக ளாலும்
அறங்கள் நடத்துவள் தாய்— தனைச்
செறுவது நாடி வருபவரைத்துகள்
செய்து கிடத்துவள் தாய் [28]

—என்றும்

பச்சை மணிக்கிளியே! பாவியெனக் கேயோகப்
பிச்சை அருளியதாய் பேருரையாய்! இச்சகத்தில்
பூரணமா ஞானப் புகழ்விளக்கை நாட்டுவித்த
பாரதமா தேவியெனப் பாடு [29]

—என்றும் பாடியுள்ளார். தேசத்தைத் தெய்வமாகப் போற்றும் மனப்பக்குவத்தைப் பாமர மக்களிடையேயும் பரவும் வகை செய்தவர் புதுமைக் கவிஞர் பாரதியார் தான்!

---

27. பாரதியார் பாடல்கள், தேசிய கீதங்கள்—1
28. ,, ,, —9
29. ,, ,, —13

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. உடலினை உறுதி செய்!

அறிவைப் பெற்று, ஆற்றலை வளர்த்து, இல்லறம் பேணி, இறைவுணர்வு கொள்வதற்கும், உறுதியோடு உயர்ந்து, சுடமை ஆற்றி, ஒற்றுமை ஒழுகி, நாட்டை உயர்த்தி, நானிலம் போற்ற வாழ்வதற்கும் ஒவ்வொரு வரும் உடலைப் பேணிப் பாதுகாத்தல் வேண்டும். சுவரின்றிச் சித்திரம் தீட்ட முடியுமா? உடலின்றி உயிர் இயங்க முடியுமா? எனவேதான்,

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்;
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்;
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே! [30]

உடம்பினை முன்னம் இழுக்கு என்றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யான்இருந்து ஓம்புகின் றேனே! [31]

என்று திருமூலர் பாடியுள்ளார். இதனை நன்குணர்ந்த பாரதியார் புதிய ஆத்திசூடியில்

உடலினை உறுதி செய் [32]

—என வேண்டுகோள் விடுக்கிறார். உடலினை உறுதி செய்வதற்கு ஏற்ற உணவுப் பொருட்களை மிகுதியாக விரும்பி உண்ண வேண்டும் என்றும் பணிப்பதை,

ஊண் மிக விரும்பு [33]

—எனுந்தொடர் வலியுறுத்தும்.

---

30. திருமூலர் திருமந்திரம், பாடல்—708
31. ,, ,, —709
32. பாரதியார் பாடல்கள், புதிய ஆத்திசூடி—5
33. பாரதியார் பாடல்கள், புதிய ஆத்திசூடி—6

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உடல் வலிமைக்கு உரமிடுவது மனவலிமைதான். நாள்தோறும் அதிகாலையில் உடற்பயிற்சி செய்தல் நல்லது. அவ்வாறு உடற்பயிற்சி செய்யும்போது உடலின் தசைகளும், நரம்புகளும், எலும்புகளும் நல்ல வடிவத்தையும், அதற்குரிய அசைவுகளையும், இயக்கங்களையும் பெறுகின்றன. நம்மில் பெரும்பாலோர் பள்ளியில்—கல்லூரியில் பயிலும்போது உடற்பயிற்சி செய்வதுண்டு. ஆனால் படிப்பு முடிந்து பணியில் சேர்ந்த உடன் உடற்பயிற்சியை அறவே விட்டு விடுதலைக் காணலாம். காரணம் அலுவலகப் பணி மிகுதி; குடும்பத் தொல்லை அதிகம்; நேரமில்லை முதலான சாக்குப் போக்குகளைச் சொல்வோம். அவ்வாறன்றி மன உறுதியோடு உடற்பயிற்சி செய்யின் உடல் வலிமையும், மன நலமும் சிறக்கும். 'உடம்பு நாடிகளுக்கு வசப்பட்டது. நாடிகள் மனத்தின் வசமாகும். ஆகையால் உடம்பிலுள்ள நோய்களைத் தீர்த்து வலிமையேற்றுவதற்கு மன உறுதி, நம்பிக்கை, உத்ஸாகம் முதலிய குணங்கள் பிரதானமாகக் கொள்ளத்தகும்.' [34]

இன்றைக்கு உடலினை உறுதி செய்ய வல்ல உடற் பயிற்சிகள் பள்ளி, கல்லூரிகளால் மட்டுமன்றி தனியார் நிறுவனங்களாலும் பயிற்றுவிக்கப்படுகின்றன. உடற் பயிற்சிகளோடு கராத்தே, யோகாசனம், ஜூடோ, முதலானவையும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. ஆனால் அவற்றைப் பயன்படுத்துவோர் மிகக் குறைவே! அதனால் தான் மேலை நாட்டினரை ஒப்பிடும்போது நம்மவர் உடல்நலம் குன்றிக் காணப்படுகின்றனர். ஆயுட்காலமும் குறைவாக உள்ளது. விளையாட்டுத் துறையில் சீனா, ஜப்பான், ரஷ்யா, அமெரிக்க நாட்டு விளையாட்டு வீரர்கள் எண்ணிறந்த தங்கப் பதக்கங்களை உலகளவில் தட்டிச் செல்வதற்குக் காரணமே நல்ல பயிற்சி பெற்ற

---

34. பாரதியார் கட்டுரைகள், (வானதி பதிப்பகம்) பக். 435

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திடமான உடம்புதான். நம்மில் பலர் ஓர் ஆண்டில் சில நாட்கள் உடற்பயிற்சி செய்துவிட்டு, பல நாட்கள் அதனை நேரமில்லை எனக் கூறி தட்டிக் கழிப்பதுண்டு. அதற்குச் சோம்பலும் மனவுறுதியின்மையுமே அடிப்படைக் காரணங்களாகும்.

எனவே சோம்பலைத் தவிர்த்து, உற்சாகத்தை வளர்த்து, சுறுசுறுப்போடு நாளும் தவறாது உடற்பயிற்சி செய்ய உறுதி பூணுவோமாக! அது உடலுக்கு வலிவும் பொலிவும் ஊட்டும்; உள்ளத்திற்கு உரமும் ஊக்கமும் அளிக்கும்; உயிருக்கு நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் வழங்கும். உடலினை உறுதி செய்வது தனிமனித வளத்திற்கும் நலத்திற்கும் மட்டுமன்றி, சமுதாய மலர்ச்சிக்கும், நாட்டு வளர்ச்சிக்கும் பயன்மிக நல்கும்!

6. உறுதியோடு உயர்!

வாழ்க்கையில் மென்மேலும் முன்னேறுவதற்கு இன்றியமையாதது உடலுறுதி மட்டும் அன்று— மன உறுதியும்தான். முன்னேற்றத்தின் முட்டுக்கட்டைகளான அச்சம், ஆணவம், அவநம்பிக்கை, முயற்சியின்மை, சோம்பேறித்தனம் முதலானவற்றை இளமை முதலே தவிர்த்து உறுதியோடு எடுத்த செயலை அடுத்து முடிக்க முனைதல் வேண்டும். முன்னேற்றத்தை அறிவியல் முறைப்படி சமன்பாட்டின் வாயிலாய் விளக்கலாம்.

உற்று நோக்கல் + அறிவார்ந்த சிந்தனை + உண்மையை அறியும் ஆர்வ நாட்டம் → முன்னேற்றம்.

(Keen Observation + Intelligent Thought + Persistent search for Truth → Progress)

நம்மைச் சுற்றி அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சிகளையும், படிக்கும் நூல்களையும், பழகும் மக்களையும் உற்றுக் கவனித்தல் வேண்டும். செய்யத் தொடங்கும் செயல் வெற்றி பெறுமா? அதற்கான வாய்ப்புக்கள் உள்ளனவா? என்பதை ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும். அதன்பின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிடைக்கக் கூடிய தகவல்கள் உண்மைதானா என்பதை உறுதி செய்து அதற்குப் பிறகு பணியை மேலும் தொடங்கலாம். எந்த ஒரு நல்ல செயலிலும் வெற்றி கிடைக்க வேண்டும் என்ற முனைப்போடு இடைவிடாது செய்தால் முன்னேற்றம் கிடைப்பது உறுதி.

மகாகவி பாரதியார் இயற்கையின் இயக்கங்களை உற்று நோக்கினார்; அறிவார்ந்த வினாக்களை எழுப்பினார்; தாம் உணர்ந்த உண்மைகளை உணர்த்தினார்; அவை வசன கவிதையிலும், குயில் பாட்டிலும் மிகுதியாகக் காணப்படுகின்றன. இயற்கையை நோக்கி அவர் விடுக்கும் வினாக்கள் நம்மைப் பெரிதும் சிந்திக்க வைக்கின்றன.

ஞாயிறே! இருளை என்ன செய்துவிட்டாய்?
ஓட்டினாயா? கொன்றாயா? விழுங்கி விட்டாயா?
கட்டிமுத்தமிட்டு நின் கதிர்களாகிய கைகளால் மறைத்து
விட்டாயா?

இருள் நினக்குப் பகையா?
இருள் நின் உணவுப் பொருளா?

அது நின் காதலியா?
இரவெல்லாம் நின்னைக் காணாத மயக்கத்தால்
இருண்டிருந்ததா?
நின்னைக் கண்ட உடன் நின்னொளி தானுங்கொண்டு
நின்னைக் கலந்துவிட்டதா
நீங்கள் இருவரும் ஒருதாய் வயிற்றுக் குழந்தைகளா?
முன்னும் பின்னுமாக வந்து உலகத்தைக் காக்கும்படி
உங்கள் தாய் ஏவி இருக்கிறாளா?
உங்களுக்கு மரணமில்லையா? நீங்கள் அமுதா?
உங்களைப் புகழ்கின்றேன்
ஞாயிறே, உன்னைப் புகழ்கின்றேன். [35]

35. பாரதியார் கவிதைகள், வசன கவிதை— இரண்டாங்கிளை— 5

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாழ்வில் உயர்வடைதற்கு மனதில் உறுதி வேண்டும்; வாக்கினில் இனிமை வேண்டும்; நல்லதையே நினைக்க வேண்டும்; நினைத்தது நடக்கும் வரை ஓயாது உழைக்க வேண்டும். அப்போதுதான் எண்ணியது ஈடேறும்; செல்வமும் இன்பமும் கிடைக்கும்; உலகில் பேரும் புகழும் பெற முடியும்.

மனதில் உறுதி வேண்டும்,
வாக்கினி லேயினிமை வேண்டும்;
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கினபொருள் கைப்பட வேண்டும்;
கனவு மெய்ப்பட வேண்டும்,
கைவசமானது விரைவில் வேண்டும்;
தனமும் இன்பமும் வேண்டும்,
தரணியிலே பெருமை வேண்டும் [36]

—என பாரதியாரும்,

உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல [37]

என வள்ளுவரும் உயர்வானதை எண்ணுவதோடு அதனை அடைய அல்லும் பகலும் முயல வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுகின்றனர்.

முயற்சி திருவினையாக்கும் [38]

ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி
பாலும் தேனும் ஊனுக்குறுதி
வேலும் மயிலும் உயிருக்குறுதி

—என்பது போல்

---

36. பாரதியார் கவிதைகள், வேதாந்தப் பாடல்கள்—5
37. திருக்குறள் 596
38. ,, 616

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளலும் உழைத்தலும் உயர்வுக்குறுதி

எனலாம்.

7. கடமை ஆற்று!

ஒவ்வொருவரும் அவரவரது கடமையை உணர்ந்து அதனைச் செவ்வனே செய்தல் வேண்டும். உலகில் மானுடப் பிறவி எடுத்தது முதல் அது நிறைவுறும் வரையில் வெவ்வேறு பருவங்களில் அதனதற்கேற்ற கடமைகளைச் செய்வதில் தவறிவிடக் கூடாது. தந்தை மகனைப் படிக்க வைப்பார். படிக்க வேண்டியது மகனின் கடமை. கல்வியை மகனுக்குப் புகட்ட வேண்டியது தந்தையின் கடமை. கல்வியைக் கசடறக் கற்று, கற்றோர் போற்றும் பெற்றியைத் தான் அடைவதோடு தந்தையும் மனம் மகிழும் வகைச் செயல்படுவது மகனின் கடமை. இதனை வான் புகழ் வள்ளுவர்,

தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல் [39]

மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ் சொல் [40]

மகாகவி பாரதியார் பாப்பாப் பாட்டில் குழந்தை களின் கடமையை வலியுறுத்துகிறார். தாய் சொல்லைத் தட்டக்கூடாது என்கிறார்.

சோம்பல் மிகக் கெடுதி பாப்பா!— தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா!
தேம்பி அழுங்குழந்தை நொண்டி— நீ
திடங் கொண்டு போராடு பாப்பா! [41]

---

39. திருக்குறள்— 667
40. ,, — 670
41. பாரதியார் பாடல்கள், பல்வகைப் பாடல்கள்— 2

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒரு குடும்பத்தில் பொருளீட்டும் கடமை அந்தக் குடும்பத் தலைவனான தந்தைக்குண்டு, தற்காலத்தில் பெண்களில் மிகுதியானோர் பணிக்குச் செல்லுகின்றனர். இருப்பினும் பொருளீட்டும் இன்றியமையாப் பொறுப்பு கணவனுக்குத் தான். மனைவி பிள்ளைகளை நன்குப் பேணி வளர்க்க வேண்டும். அதுவே தாயின் கடமை. காலத்தின் கட்டாயத்தால் ஆண், பெண் இருவரும் வேலைக்குச் செல்லும்போது அவர்களது கடமைகள் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. தந்தை ஏவிய பணிகளைச் செய்ய வேண்டுவது மகனின் கடமை. இம் மூவரும் ஒன்று சேர்ந்து அந்தக் குடும்பம் தழைக்கப் பாடுபடுவது மூவரின் கடமை ஆகும் என்கிறார் பாத்தேர் சாரதி பாரதியார்.

ஒற்றைக் குடும்பந் தனிலே— பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை;
மற்றைக் கருமங்கள் செய்தே— மனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை
ஏவல்கள் செய்பவர் மக்கள்— இவர்
யாவரும் ஓர்குலம் அன்றோ
மேவி அனைவரும் ஒன்றாய்— நல்ல
வீடு நடத்துதல் கண்டோம் 42

பாரதநாட்டுக் குடிமகன் ஒவ்வொருவரும் தன்னையும் தன் குடும்பத்தையும் பாதுகாத்து முன்னேற்றுவதோடு, நாடு நலம்பெறப் பொதுப்பணிகளில் ஈடுபடும் கடமையையும் மேற்கொள்ள வேண்டுமென்கிறார், நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலாவான பாரதியார்.

பாரதப் பூமி பழம் பெரும் பூமி;
நீரதன் புதல்வர் இந் நினைவகற்றாதீர்!
பாரத நாடு பார்க்கெலாம் திலகம்
நீரதன் புதல்வர் இந் நினைவகற்றாதீர்!
வானக முட்டும் இமயமால் வரையும்

42. பாரதியார் பாடல்கள், பல்வகைப்பாடல்கள்—3

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏனைய திசைகளில் இருந்திரைக் கடலும்
காத்திடு நாடு [43]

பண்டைப் பாரதம் பாரில் உயர்ந்தது; பண்பில் சிறந்தது; நல்லோர்களையும் வல்லோர்களையும் கொண்டிலங்கியது. இடைக்காலத்தில் பெண்கள் அடிமைகளாக நடத்தப்பட்டு அல்லலுற்றனர். அதனைப் போக்கிப் பெண்விடுதலை வேண்டும் எனப் பல பாடல்களைப் பாடியுள்ளார். நமது நாடு விடுதலை அடைந்து பல ஆண்டுகள் கடந்த பின்னரும் பெண்ணடிமை இன்னும் வேரறுக்கப் படவில்லை. எனவே பாரதியார் பெண்விடுதலையை வலியுறுத்திய தோடு நாட்டுக்குப் பெண்கள் ஆற்றவேண்டிய கடமையையும் அறிவுறுத்துகிறார்.

தையலை உயர்வு செய் [44]

கடமை செய்வீர், நந்தேசத்து வீரக்
காரிகைக்கணத்தீர் துணிவுற்றே [44]

8. ஒற்றுமை ஒழுகு!

கூடிவாழ்ந்தால் கோடி நன்மை; தனிமரம் தோப்பாகாது; இருகையும் சேர்த்து தட்டினால்தான் ஓசை பிறக்கும். எனவே சாதி, மதம், மாநிலம், நாடு, மொழி என்ற பிரிவினைகளை நீக்கி அனைவரும் நண்பர்களே, ஒரு குடும்பத்தைச் சார்ந்தோரே என்ற ஒற்றுமை உணர்வு வேரூன்ற வேண்டும்.

"யாதும் ஊரே; யாவருங்கேளிர்"

—என்ற சங்கப்புலவர் கணியன்பூங்குன்றனார் கருத்துப் படி எல்லாம் நமது ஊர்; யாவரும் நம் நண்பர்களே! என்பதை மனத்தில் பதியவைத்து ஒற்றுமையை வளர்க்கப் பாடுபட வேண்டும்.

---

43. பாரதியார் பாடல்கள், தேசீய கீதங்கள்—32
44. ,, ,, பல்வகைப் பாடல்கள் 1 & 7

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒன்று பட்டால் உண்டு வாழ்வே ! நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்— இந்த
ஞானம் வந்தால்பின் நமக்கெது வேண்டும் ? [45]

குறிப்பாகப் பரந்துபட்ட பாரதத்தில் பல்வேறு மொழிபேசும் மக்களும், மொழிவாரி மாநிலங்களும் உள்ளன. அவரவர் தம் சூழ்நிலைக்கும், வாழ்நிலைக்கும், தட்பவெட்ப நிலைகளுக்கும் ஏற்ப உணவு முறைகளும், பண்பாட்டுப் பழக்க வழக்கங்களும் வேறுபடுகின்றன. அந்த வேற்றுமையிலும் அனைவரும் 'இந்தியர்' என்றுணரும் ஒருமித்த சிந்தனை அனைவரின் உள்ளத்திலும் இழைந்தோட வேண்டும் என்பது பாட்டுக் கொரு புலவர் பாரதியின் வேணவா.

நாட்டு ஒருமைப்பாடு வளர ஒற்றுமை முரசு கொட்டினார் கவிமுரசு!

நிகரென்று கொட்டு முரசே !— இந்த
நீணிலம் வாழ்பவ ரெல்லாம்;
தகரென்று கொட்டு முரசே !— பொய்மைச்
சாதி வகுப்பினை எல்லாம் [46]

ஒற்றுமையை வளர்ப்பதற்குகந்த அன்பைப் பெருக்க வேண்டும்; பொறுமையை மிகுத்தல் வேண்டும்; பொறாமையை அகற்றல் வேண்டும்; தன்னலம் குறைத்துப் பொதுநலம் போற்ற வேண்டும்; தொண்டுபல செய்ய முனைதல் வேண்டும்; தியாகம் புரிய முன்வர வேண்டும். இவற்றைச் செய்தால் ஒற்றுமை குடும்பத்தில் தோன்றி, சமுதாயத்தில் தொடர்ந்து— நாட்டில் படர்ந்து, நானிலம் போற்றும் வகையில் மலர்ந்து மணம் பரப்பும்.

---

45. பாரதியார் பாடல்கள், தேசிய கீதங்கள்—1
46. பாரதியார் பாடல்கள், பல்வகைப் பாடல்கள்-3

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

9. நாட்டை உயர்த்து!

தனிமனிதனால் நாட்டை எப்படி உயர்த்த முடியும் என்ற ஐயம் எழலாம். ஒவ்வொரு தனிமனிதனும் தத்தம் பணியைத் தவறாது செய்தாலே நாடு தானாக உயர்ந்து விடும். பெற்ற தாயைப் பேணுவதில் எத்தகைய அக்கறை செலுத்துகிறோமோ அந்த அளவிற்கு நாட்டைச் காப்பதிலும் கருத்து மிகக் கொள்ள வேண்டும்.

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே [47]

ஒருவன் தொழில் புரிந்து தன் குடும்பத்தைக் காப்பாற்றி, குடும்பத்தில் உள்ளோரை மகிழ்வாக வைத்திருப்பது போல், தொண்டு செய்து நாட்டு நலத்திற்கும் வளத்திற்கும் அரண் சேர்க்க வேண்டும்.

நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற் குழைத்தல்
இமைப் பொழுதுஞ் சோரா திருத்தல் [48]

என்பது பாரதியாரின் வேண்டுகோள். அது மட்டுமன்று நாட்டு நலத்திற்கு உழைப்பதே பிறவியின் பயன். அதற்குரிய அறிவையும், ஆற்றலையும், உடல் வலிமையையும் பெறவேண்டும் என்கிறார்.

சொல்லடி சிவசக்தி!— எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ, இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே! [49]

அவ்வாறாயின், நாட்டிற்குப் பயன்படும் வகையில் எப்படி வாழ்வது?

---

47. பாரதியார் பாடல்கள்.
48. ,, ,, தோத்திரப் பாடல்கள்—1
49. ,, ,, ,, —13

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படித்தறியாப் பாமரற்கு எழுத்தறிவித்தல், படித்த இளைஞர்களை நல்வழிப்படுத்தி அவரவர் திறமைக்கேற்ற பணிகளைப் பெறுவதற்கான பயிற்சி அளித்தல், சுயவேலை வாய்ப்பில் முனையச் செய்தல், அரசின் நல்ல திட்டங்களை கிராம மக்கள் அறியச் செய்தல், அவர்களுக்கு அத்திட்டத்தின் பயன்கள் முழுமையான அளவில் கிடைக்கச் செய்தல் முதலான பணிகளை ஒவ்வொரு இந்தியனும் மேற்கொண்டொழுகினால் தனிமனித வளர்ச்சியோடு சமுதாய நலமும் வளமும் சிறக்கும். தனிமனிதன் இது போன்ற நல்ல பல சமுதாயப் பணிகளைச் செய்வதற்கு நற்பணி இயக்கங்கள் அமைத்து அவற்றின் மூலமும் முயலலாம். அதனால் கூட்டு மனப் பான்மையும் வளரும்.

அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியைத் தெரிந்து அதில் பல புதிய சாதனைகளை நிகழ்த்த முன் வருதல் வேண்டும். உலக நாடுகள் அவ்வப்போது அறிமுகப் படுத்தும் புதிய கருவிகளையும், இயந்திரங்களையும், தொழில் நுட்பங்களையும் கற்று அவற்றின் மூலம் நமது நாட்டின் தொழில் வளத்தை முன்னேற்ற முயல வேண்டும். நாட்டுக்கு இன்றியமையாத காட்டுவளத்தைப் பெருக்க வேண்டும்; கலைகளை வளர்க்க வேண்டும்; நல்ல காவியங்களைப் படைத்தல் வேண்டும்; பற்பல அற்புதங்களை நிகழ்த்தி அகிலம் போற்ற அன்னை நாட்டை உயர்த்த வேண்டும்!

மந்திரம் கற்போம் வினைத் தந்திரம் கற்போம்,
வானையளப்போம் கடல் மீனை அளப்போம்;
சந்திர மண்டலத்து இயல் கண்டு தெளிவோம்;
சந்தி தெருப்பெருக்கும் சாத்திரம் கற்போம்

காவியம் செய்வோம்! நல்லகாடு வளர்ப்போம்;
கலை வளர்ப்போம் கொல்லர் உலை வளர்ப்போம்;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஓவியம் செய்வோம் நல்ல ஊசிகள் செய்வோம்!
உலகத் தொழில் அனைத்தும் உவந்து செய்வோம்![50]

10. நானிலம் போற்ற வாழ்!

மகாகவி பாரதியார் ஆழமாகச் சிந்தித்துப் பாடிய பாடல்கள், கட்டுரைகள் மூலம் அறியும் மணிமொழிகளான அறிவைப் பெற்று, ஆற்றலை வளர்த்து, இல்லறம் பேணி, இறை உணர்வு கொண்டு, உடலை உறுதிசெய்து, உறுதியோடு உயர்ந்து, கடமை ஆற்றி, ஒற்றுமையில் ஒழுகி, நாட்டை உயர்த்தப் பாடுபடும் ஒவ்வொருவரும் நானிலம் போற்ற வாழ்வார்கள் எனில் மிகையன்றே!

'வையத் தலைமைகொள்' என்று புதிய ஆத்திசூடியில் புதுமைக் கவிஞர் பாடியிருப்பது சிந்தனைக்குரியது. உலகில் நாட்டை ஆளும்— ஏன் உலகத்தையே ஆளும் தலைமைப் பொறுப்பை எப்படிப் பெற முடியும்? அதற்கு மகாகவியின் ஆழ்சிந்தனைக் கடலில் முகிழ்த்த முத்துக்களைப் பெறவேண்டும்; அதுமட்டுமன்று, அச்சம் தவிர்க்க வேண்டும்; ஐம்பொறி ஆட்சி கொள்ள வேண்டும்; கொடுமையை எதிர்த்து நிற்க வேண்டும்; சிதையா நெஞ்சு கொள்ள வேண்டும்; சரித்திரத் தேர்ச்சி பெற வேண்டும்; சொல்வதைத் தெளிந்து சொல்ல வேண்டும்; தீயோர்க்கு அஞ்சுதல் கூடாது; தோல்வி கண்டு துவளுதல் கூடாது; நாள் முழுமையும் உழைக்க வேண்டும்; ஒளிவு மறைவின்றி நேர்மையாகப் பேச வேண்டும்; வருவாயைப் பெருக்க வேண்டும்; புதியன விரும்ப வேண்டும்; போர்த்தொழில் பழக வேண்டும்; தேவையானவற்றிற்குக் கோபப்படுதல் வேண்டும்; தங்கு தடையின்றிப் பொங்கி வரும் வெள்ளம் போல் உரையாற்ற வேண்டும். இவையனைத்தையும் பாட்டுக்கொரு புலவர் புதிய ஆத்திசூடியில் விரிவாகவே கூறியுள்ளார்.

---

50. பாரதியார் பாடல்கள், தேசிய கீதங்கள்—5

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எல்லாரும் அமரநிலை எய்தும் நன்முறையை
இந்தியா உலகிற்கு அளிக்கும்— ஆம்
இந்தியா உலகிற்கு அளிக்கும்— ஆம்ஆம்
இந்தியா உலகிற்கு அளிக்கும்— வாழ்க!
எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்— நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்— ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்— வாழ்க![51]

என்று பாரதியார் உறுதிபடக் கூறியதன்படி மக்களாட்சி நாட்டில் எல்லோரும் மன்னர்தான். ஏனெனில் மன்னனுக்குரிய அனைத்துக் கடமைகளையும் உணர்ந்து பொறுப்புடன் செயலாற்ற வேண்டும். அப்போதுதான் தனிமனித வளர்ச்சியோடு பொதுநலப் பண்பும் மிகுந்து வளரும். தன்னலம் குறைத்துப் பொதுநலம் போற்றலே தலைவனுக்குத் தக்கதோர் ஆளுமை நிலை. பொதுநலம் பேணும்போது தன்னையே இழந்து தியாகம் செய்யும் சூழல் வருமாயின் அதற்கும் தயங்காது முன்வருபவனே சிறந்த தலைவன். அப்படி வாழை போலத் தன்னைத் தந்து தியாகம் செய்தவர்தான் அண்ணல் காந்தியடிகள்! நமது நாட்டு விடுதலைக்காகப் போராடி உயிர்நீத்த உத்தமர்கள் எல்லோரும் தியாகச் சீலர்களே! அதனால்தான் அண்ணல் காந்தியடிகளும், விடுதலைப் போராட்ட வீரர்களும் உலகம் போற்றும் தலைவர்களாக விளங்குகின்றனர்.

ஒளிபடைத்த கண்ணும், உறுதிகொண்ட நெஞ்சும், மகிழ்வூட்டும் பேச்சும், வலிமை மிக்க தோளும், தெளிவு மிக்க அறிவும், தொண்டாற்றும் உள்ளமும் கொண்டவர்களே நானிலம் போற்றும் பெற்றியைப் பெறுவர். அது கிடைத்தற்கரிய எட்டாக்கனி என எண்ண வேண்டாம்.

---

51. பாரதியார் பாடல்கள், தேசிய கீதங்கள்—17

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்ணத்தாலும், எழுச்சியாலும்; உழைப்பாலும் ஊக்கத்தாலும்; தொண்டாலும், தியாகத்தாலும் பெறுவதற்குரிய கனிதான்! இடையறா முயற்சியாலும், உழைப்பாலும், உத்வேகத்தாலும் அதனை அடைய முடியும். அத்தகைய தன்னேரில்லாத் தலைவரை நாடுமட்டுமன்றி நானிலமே போற்றிப் புகழும்!

மனத்தை உழுத மகான் பாரதியாரின் மணிமொழிகள் பத்துக் கோணங்களில் பாங்குடன் பகரப்பட்டன. இந்த மாநிலம் பயனுறுவதற்காக அந்த மாகவி வழங்கியுள்ள சிந்தனை முத்துக்கள் எண்ணிலடங்கா! அந்த முத்துக்களை எடுத்துக் கோர்த்து மாலையாக்கி ஒவ்வொரு இந்தியனும் அணிய வேண்டும். அது அணிந்தவனை உயர்த்துவதோடு அவனுடைய நாட்டையும் உயர்த்தி உய்விக்கும்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2

மணிமேகலையின் மணிமொழிகள்

வையம் போற்றும் வளமிகு தமிழ் இலக்கியங்களில் இன்றியமையாததாய்த் திகழ்வன ஐம்பெருங் காப்பியங்கள்! ஒருவனது வாழ்க்கையின் பல்வேறு கூறுகளை ஆய்ந்து அவற்றைப் பாங்குடன் வடிக்க வல்ல காவியங்களாக விளங்குவன அவை! தன்னேரில்லாத் தலைவனையோ, தலைவியையோ மையமாக வைத்து மாண்பமை நீதிநெறி முறைகளையும், வாழ்வியல் அறங்களையும் வலியுறுத்திக் காட்டுவன. இவற்றில் தலையாயதாயும், சாலச் சிறந்ததாயும், சான்றோர் போற்றும் பெற்றியதாயும் ஒளிர்வன இரட்டைக் காப்பியங்கள்! அவையே சிலப்பதிகாரமும், மணிமேகலையும் ஆகும்.

கதையாலும், கருத்தாலும், காலத்தாலும் ஒன்றுக் கொன்று தொடர்புடையதாக விளங்கும் உன்னத இலக்கியங்களாக இலங்குவன இரட்டைக் காப்பியங்கள்! இவ்விரண்டும் வழி நூல்களாகவோ, சார்பு நூல்களாகவோ இல்லாமல் முதல் நூல்களாகத் திகழ்கின்றன! தலைவன் தலைவியின் அருமை பெருமைகளை உணர்த்தும் சிறு சிறு பாடல்களைக் கொண்டதாய் விளங்குவன அகப்பாடல்களும், புறப்பாடல்களும். அந்த மரபினின்று மாறிப் பெண்களைக் கதைத் தலைவியராய் வைத்து அவர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தம் சிறந்த பண்புகளை விளக்கிக் காவிய நாயகிகளாக மிளிரச் செய்த பெருமை இரட்டைக் காப்பியங்களுக்கு உண்டு. இவையிரண்டும் தமிழ் இலக்கிய நோக்கிலும் போக்கிலும் மிகச் சிறந்த திருப்பத்தை உண்டுபண்ணின. எண்ணிறந்த சமுதாய ஒழுகலாறுகளையும், தனிமனித மேம்பாட்டினையும் எடுத்தியம்பின. 'இவ்விரு காப்பியங்களையும் உருவாக்கிய இளங்கோவடிகளும், சீத்தலைச் சாத்தனாரும் புலமைக் காழ்ப்பின்றி, இலக்கியப் படைப்பில் ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருந்து இலக்கியப்பணி புரிந்திருக்கின்றார்கள்'. [1]

இரட்டைக் காப்பியங்களாக விளங்கும் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் முறையே முப்பது காதைகளைக் கொண்டு விளங்குவன. சூழ்வினைச் சிலம்பு காரணமாக எழுந்தது சிலப்பதிகாரம். அந்தக் காவிய நாயகன் கோவலனின் மகள் மணிமேகலையை மையமாகக் கொண்டு உருவானது மணிமேகலை! அரசன்— அரசியையே சான்று காட்டி இலக்கியம் படைக்கும் நிலையை மாற்றி வணிகக் குலத்தில் பிறந்த கண்ணகியை ஒப்பற்ற காவியத் தலைவியாக்கி, உலகறியச் செய்த புரட்சிக் காப்பியமே சிலப்பதிகாரம். அதே போல் கணிகையர் குலத்தில் பிறந்த மாதவி, தன் மகள் மணிமேகலையை— அழகிலும் ஆடலிலும் சிறந்து விளங்கிய ஆரணங்கைத் துறவறத்தில் ஈடுபடச் செய்தாள். மணிமேகலையின் துறவினை உணர்த்தி அதன்வழி அன்பறத்தை வலியுறுத்துவது மணிமேகலைக் காப்பியம். காவியத் தலைவியின் பெயரைத் தாங்கி வருவதே மணிமேகலைக் காப்பியம். இரண்டும் இரட்டைக் காப்பியங்களாக மட்டுமன்றி குடிமக்கள் காப்பியங்களாகவும் விளங்குகின்றன!

---

1. 'தமிழ் இலக்கிய வரலாறு', பேராசிரியர் ச. சாமிமுத்து, பிரியா பதிப்பகம், 22, பிரிட்டோ காலனி, திருச்சி-2, பக்கம் 177

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மணிமேகலைக் காப்பியத்தினை மாண்புடன் படைத்த சித்தலைச் சாத்தனார், இளங்கோவடிகளிடம், தான் இயற்றிய காப்பியத்தைக் கூறிய செய்தியை மணிமேகலைப் பதிகம் பகருகிறது.

இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
மாவண் தமிழ்த்திறம் மணிமே கலைதுறவு
ஆறைம் பாட்டினுள் அறியவைத் தனனென் [2]

மணிமேகலை துறவு பூண்டதோடு அமையவில்லை. அமுதசுரபியைப் பெற்றாள்; பசிப்பிணியால் வாடுவோர்க் கெல்லாம் வேண்டும் அளவு உணவளித்து அவர்தம் பசிப்பிணி போக்கினாள்; சிறைக் கோட்டத்தை அறக் கோட்டமாக்கினாள்; காஞ்சி மாநகர மக்களின் பெரும் பசித்துன்பத்தை அகற்றினாள்; அதன் பின்னர் புத்தம் சரணம் கச்சாமி, தர்மம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி என்பவற்றை மூன்று முறை சொல்லி, மும்மணி களையும் மூன்று முறை வணங்கி அறவண அடிகளைச் சரணடைந்தாள். மணிமேகலையின் துறவு தன்னுயிர் பேணுதற்கு மட்டுமன்று. சமுதாயத்தில் வாடிவதங்கும் எண்ணற்ற உயிர்களைக் காப்பாற்றுவதற்காக!— அவை களிடம் அன்பு காட்டி ஆதரவு அளிப்பதற்காக! துறவிலும் தொண்டாற்ற வேண்டும் என்ற உயர்ந்த உண்மையை உணர்த்துவதற்காக!

மணிமேகலை உணர்த்தும் மணிமொழிகள்

சித்தலைச் சாத்தனார் மணிமேகலைக் காப்பியத்தின் மூலம் பல்வேறு கருத்துக்களைக் கூறியுள்ளார். மணிமேகலையின் துறவினை எடுத்துரைக்கும் நோக்க மாகக் காப்பியம் அமைந்திருந்தாலும், காவியக் கவிஞர்

---

2. மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார், பதிகம். 95—98

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆங்காங்கே திட்பநுட்பத்துடன் படிப்போர் பயனுறும் வகையில் நீதிக் கருத்துக்களைச் சொல்லியுள்ளார். அன்றாடம் பேணிப் பாதுகாத்துக் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் செயற்பாடுகளை உய்த்துணரச் செய்துள்ளார்.

1. அன்பு ஆள்க!
2. அறிவொளி பெறுக!
3. உயிர்க்கொலை நீக்குக!
4. கள்ளும் காமமும் களைக!
5. சிந்தையொன்றிச் செய்க!
6. நல்லறம் புரிக!
7. பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து ஏறுக!
8. பசிப்பிணி போக்குக!
9. பிறர்க்குறியாளனாய் விளங்குக!
10. பெண்மை போற்றுக!

மணிமேகலைக் காப்பியம் எடுத்துரைக்கும் இந்த மணிமொழிகள் மனிதனை மாண்புடையவனாக ஆக்குவதற்குகந்த நன்மொழிகள் ஆகும்.

1. அன்பு ஆள்க!

உறவை வளர்ப்பதற்கும், நட்பைப் பேணுவதற்கும், உதவி புரிவதற்கும் வித்தாக விளங்குவது அன்புதான்! பண்புகளில் தலையாயதாயும், தாய்மைக் குணமுடைய தாயும் இருப்பது அன்புதான்! அறத்திற்கு மட்டுமன்றி மறத்திற்கும் துணையாகத் திகழ்வது அன்புதான்!

மகன் உதயகுமாரன் கொலையுண்ணப் பட்டதற்காக வருந்தி மிகவும் அழுது அரற்றினாள் இராசமாதேவி. அவளுக்கு ஆறுதல் கூற முற்பட்ட மணிமேகலை, ''தேவி! ஏன் அழுகிறீர்கள்? முற்பிறப்பில் உங்கள் மகன் நீலபதி என்னும் அரசி மகனாய் இராகுலன் என்னும் பெயரோடு இருந்தான்; அவனுக்கு இலக்குமி என்னும் பெயரோடு யான் மனைவியாய் இருந்தேன். இராகுலன் திட்டிவிடம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்னும் பாம்பின் பார்வையால் இறந்தான். அப்பொழுது யான் தீயிற் பாய்ந்து இறந்தேன். முற்பிறப்பில் இறந்த மகனுக்கு அழாத நீங்கள் இப்பிறப்பில் இறந்தவனுக்கு மட்டும் அழுவது ஏன்? மேலும் நீங்கள் அழுவது அவனது உடலுக்காகவா? அல்லது உயிருக்காகவா? உடலுக்காக எனில், அவ்வுடலைத் தீயிலிட்டுச் சாம்பலாக்கியது உங்களில் ஒருவரேயன்றி வேறு யார்? நீங்களே அழித்து விட்டு அழலாமா? உயிருக்கு அழுதீர்களானால் அதுவும் பொருத்தமன்று. உடலை ஈன்றீர்களே ஒழிய உயிரை அல்ல! அதனைக் கண்டதுமில்ல. தன்னால் செய்யப்பட்ட வினைப் பயனுக்கு ஏற்ப, அந்த உயிர் புகும் உடம்பு எது என்பதை நம்மால அறிவதும் அரிய செயலே! அந்த உடல் நின்னால் பெறப்படவில்லையானாலும் உயிரிடத்தில் அன்பு கொண்டு அழுகிறேன் என்று கூறுவீர்களானால், உடம்பைவிட்டுப் போகின்ற வேற்றுமை இல்லாத எல்லா உயிர்களுக்கும் அல்லவா இவ்வாறே அழ வேண்டும்? அதுவும் செய்ய மாட்டீர்கள். எனவே உடலின் இறப்பிற்காக அழாது உயிர்கள் அனைத்திடமும் அன்பு செலுத்துதலே சாலச் சிறந்தது'' என்றாள்.

உடற்குஅழு தனையோ உயிர்க்குஅழு தனையோ
உடற்குஅழு தனையேல் உன்மகன் தன்னை
எடுத்துப் புறங்காட்டில் இட்டனர் யாரே
உயிர்க்குஅழு தனையேல் உயிர்புகும் புக்கில்
செயப்பாட்டு வினையால் தெரிந்துணர்வு அரியது
அவ்வுயிர்க்கு அன்பினை ஆயின் ஆய்தொடி
எவ்வுயிர்க்கு ஆயினும் இரங்கல் வேண்டும். [3]

இவ்வாறு சீத்தலைச் சாத்தனார் அன்பின் ஆழ் நிலையை உணர்த்தும் முறை படிப்போர் சிந்தனையைத் தூண்டும் வகையில் உள்ளது. இதே போன்று இன்னோரிடத்தில் 'அன்பு கொள் அறம்' [4] எனக் கூறியுள்ளார்.

---

3. மணிமேகலை, சிறைவிடுகாதை, பாடல் 73—79
4. ,, கச்சிமாநகர் புக்காதை, பாடல் வரி 99

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதனைத் தெள்ளுதமிழ் வள்ளுவர்,

அன்பின் வழியது உயிர்நிலை [5]

என்றும், வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வடலூர் இராமலிங்க அடிகள்,

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர் அவருளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமென நான்தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்குஏவல் புரிந்திடஎன்
சிந்தைமிக விழைந்த தாலோ [6]

என்றும் பாடியுள்ளனர்.

2. அறிவொளி பெறுக!

மானுடப் பிறவியின் பெருமையே ஏனைய உயிர்களுக்கு இல்லாத ஆறாவது அறிவைப் பெற்றிருத்தல். அதனை வளர்ப்பதே சிறந்த கலை. அதற்கு வித்தாக விளங்குவன படிப்பறிவும் பட்டறிவும். அறியாமை இருளகற்றி அறிவொளி புகட்டிட இவ்விரண்டும் தேவை. 'கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்'— என்ற முதுமொழிக்கேற்பப் பல்வகை நூல்களைக் கற்கவேண்டும். பார்க்கும் பொருள்களையும் நுட்பமாகப் பார்த்து அதன் திட்பத்தைத் தெள்ளிதின் அறிய வேண்டும்; சான்றோர் கருத்தினைக் கவனமாகக் கேட்டுத் தெளிய வேண்டும்; அனைத்திற்கும் மேலாக அவற்றைத் தனது நுண்ணறிவால் பகுத்து ஆய்ந்து, தள்ளுவன தள்ளிக் கொள்ளுவன கொள்ளவேண்டும். அவ்வாறு ஒவ்வொருவரும் தவறாமல்

---

5. திருக்குறள்— 80
6. திருவருட்பா— 121

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செயலாற்றினால் அறியாமையை அகற்றி அறிவொளி பெறலாம். இதனை,

> எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு [7]
>
> எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு [8]

என்னும் குறட்பாக்கள் தெளிவுறுத்தும்.

ஞானத்தை வளர்க்கும் ஞான நூல்களின் பொருள் அறிந்து படித்தலும் கேட்டலும் சிறப்புடைத்து. அதோடு நில்லாது அதன் நுண்பொருளை ஆய்ந்து பார்க்கும் சிந்தனையை வளர்த்தல் நலமுடைத்து. அத்துடன் அவற்றின் பாவனைகளை உற்றுக் கவனித்துப் பாவித் தொழுகுதல் வளமுடைத்து. அது மட்டுமன்றி அவற்றின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து தெளிவு பெறுதல் திறமுடைத்து. இந்த நால் வகையாலும் மனத்தின் அறியாமை இருளை அகற்றலாம்; அறிவொளி பெறலாம்; அதன் விளைவாய் பிறவிப் பயன்களைப் பெரிதும் அடையலாம். அதன்பின் பிறவித் துன்பம் நீங்கிப் பேரின்பப் பெருவாழ்வும் எய்தலாம். இந்த அரிய கருத்தினை அறவண அடிகள் மணிமேகலையிடம் கூறுகிறார்.

> சுருதி சிந்தனா பாவனா தரிசனை
> கருதி உய்த்து மயக்கம் கடிக
> இந்நால் வகையான் மனத்திருள் நீங்குஎன்று
> முன்பின் மலையா மங்கல மொழியின்
> ஞான தீப நன்கனங் காட்ட [9]

---

7. திருக்குறள், குறள்— 423.
8. திருக்குறள், குறள்— 355.
9. மணிமேகலை, பவத்திறம் அறுகெனப்பாவை நோற்ற காதை, 258— 262.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஞானஒளி பெறுவதற்கு புத்தர் போதித்த பொன் மொழிகள் இவை. பேதைமை, செய்கை, உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பவம், தோற்றம், வினைப்பயன் ஆகிய பன்னிரண்டு நிதானங்களின் தோற்றத்தையும், அவற்றினைப் போக்கும் முறைகளையும் தெளிவாக உணர்த்துகிறார் அறவண அடிகள். அதனால் மணிமேகலை மன இருள் நீங்கி ஞான ஒளி பெற்றுத் தவமிருந்தாள் என்கிறார் சீத்தலைச் சாத்தனார்.

பௌத்தமதக் கருத்துக்களைப் பல்வேறு கதைகளாலும், நிகழ்ச்சிகளாலும், விளக்கங்களாலும் மணிமேகலைக் காப்பியத்தில் எடுத்துரைக்கிறார் சீத்தலைச் சாத்தனார். புத்தரின் பொன்மொழிகள் வாழ்வின் அறியாமை இருளை அகற்றி அறிவொளி புகட்டுவதோடு மனத்திருள் அகற்றி ஞானஒளி ஏற்றுகின்றன என்பதை மணிமேகலைக் காப்பியம் நன்கு விளக்குகிறது.

3. உயிர்க் கொலை நீக்குக!

ஓர் உயிர் மற்றோர் உயிரைக் கொல்லுதல் எந்த வகையிலும் நியாயமில்லை. அதிலும் குறிப்பாக மனிதன் இன்னொருவனைக் கொல்லுதலோ, கொல்ல முனைதலோ பெருங் குற்றமுடைத்து. அதே போல் பிற உயிர்களைக் கொல்வதும் குற்றமே. கொல்லாமையே சிறந்த அறம் என்கிறார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாந் தரும் [10]

பிறஉயிர்களைக் கொல்லாதிருக்கும் உயர்ந்த நிலையே வாழ்வின் சிறந்த நெறியும் நீதியும் ஆகும்.

நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி [11]

---

10. திருக்குறள்—321
11. திருக்குறள் —324

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொல்லாமை குறித்து மணிமேகலைக் காப்பியம் பல காதைகளில் மிகச் சிறப்பான நிகழ்ச்சிகளோடு விளக்கியுள்ளது.

காயசண்டிகையின் கணவன் காஞ்சனன் என்னும் வித்தியாதரன் ஆவான். விருச்சிக முனிவரின் சாபத்தால் காயசண்டிகை பெரும்பசிக்கு ஆளாகிப் பன்னிரண்டு—ஆண்டுகள் கழிந்த பின்னும் வரவில்லையே என உள்ளம் வெதும்பிக் கொண்டிருந்தான். காவிரிப்பூம்பட்டினத்தில் உள்ள பூத சதுக்கம், பூஞ்சோலைகள், முனிவர்களின் தவச்சாலைகள், மன்றங்கள் அம்பலங்கள் முதலான எல்லா இடங்களிலும் தேடியும் கிடைக்கவில்லை. அப்போது மணிமேகலை காயசண்டிகை வேடம்பூண்டு, பசியால் வாடும் அனைவர்க்கும் உணவளித்துக் கொண்டிருந்தாள். மணிமேகலையை காயசண்டிகை எனத் தவறாகக் கருதிய காஞ்சனன் பழைய நிகழ்ச்சிகளையெல்லாம் எடுத்துக் கூறுகிறான். மணிமேகலை அவனது அறியாமையை எண்ணி அவனுக்கு இளமைப் பருவத்தின் நிலையாமையை எடுத்துக் கூறுகிறாள். அவன் ஏற்கவில்லை.

மணிமேகலையின் மீது மயக்கங்கொண்ட உதயகுமரன் அவளை எப்படியேனும் அடையவேண்டும் என்ற வேட்கையோடு அவள் தங்கியிருந்த சம்பாபதிக் கோயிலை அடைந்தான். அவன் வருவதற்கு முன்னே காஞ்சனன் மணிமேகலையைத் தனது மனைவி காயசண்டிகை எனக் கருதிக் கொண்டு அவளின் செயல்களை மறைந்து நின்று கவனித்துக் கொண்டிருந்தான். உதயகுமரன் அவளிருப்பிடத்தை நெருங்கியதும் அவனது தோளை வெட்டி வீழ்த்தினான். காயசண்டிகையைக் கைப்பற்றிச் செல்லலாமென அவளருகில் சென்றபோது கந்திற்பாவை அவன் முன் தோன்றி, "செல்லாதே! இவள் உன் மனைவியாகிய காயசண்டிகை அல்லள்; இவ்வடிவம் மணிமேகலை கொண்ட வேற்று வடிவம். முன்னொரு நாள் நின் மனைவி கடும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பசி நீங்கி ஆகாய வழியே செல்லுகையில் அவளுக்கு நேர்ந்த துன்பத்தைக் கேட்பாயாக! ஆகாயத்தில் செல்வோர் துர்க்கை எழுந்தருளியிருக்கும் விந்த மலைக்கு நேராக மேலே செல்லார். யாரேனும் அவ்வாறு சென்றால், அம்மலையைக் காக்கும் விந்தா கடிகை என்பவள் அவர்களைச் சாயையினாலே இழுத்துத் தன் வயிற்றில் அடக்கிக் கொள்வாள். இதனை அறியாத காயசண்டிகை அம்மலைக்கு நேராக மேற்சென்று அவள் வயிற்றில் அடங்கிவிட்டாள். உதயகுமரனை ஆராயாது வெட்டியதன் பயனை அனுபவிப்பாய். உதயகுமரனும் ஊழ்வினைப் பயனால் உன்னால் வெட்டப்பட்டான்'' என்று சொல்லியது.

உண்மை அறிந்த மணிமேகலை உதயகுமாரன் இறப்பிற்காக வருந்தி அவனருகே சென்றாள். அப்போது சுந்திற்பாவை, ''நீ இவனிடத்தில் செல்லாதே! செல்லாதே; உனக்கு இவன் கணவனாக இருந்ததும், இவனுக்கு நீ மனைவியாக இருந்ததும் சென்ற பிறவியிலே மட்டும் நிகழ்ந்தன அல்ல. அதற்கு முன்னமேயும் எத்தனையோ பிறவிகளில் நிகழ்ந்தன. இங்ஙனம் தடுமாறும் பிறவித் துன்பத்தை ஒழித்துக் கொள்ளுதற்கு முயலும் அறிவினை உடையாய்! இவன் இறந்தது பற்றி நீ துன்பம் அடையாதே!'' என்றது. மேலும், ''நீ காஞ்சி நகரம் சென்று உணவளித்து எல்லா உயிர்களையும் காப்பாய்; அந்நகரத்தே உன்னால் பற்பல அற்புதங்கள் நிகழும்'' என்றது.

மேலும் உதயகுமரனின் வினைப் பயனையும் விளக்கியது.

''உதயகுமரன் முற்பிறவியில் இராகுலன். நீ அவன் மனைவி. இருவரும் பிரமதருமு முனிவருக்கு உணவளிப்பதற்குத் தயார் செய்து கொண்டிருந்தீர்கள். அதற்கான உணவு தயாரிப்பதற்காக சமையற்காரனை விடியற் காலையில் விரைந்து வரும்படி கூறினீர்; அவன் என்ன

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காரணத்தினாலோ குறித்த நேரத்தில் வராமல் தாமத மாய் வந்தான். அந்தப் பயத்தினால் வழுக்கி விழுந்தான். விழுந்தவனைக் கண்டு இரங்காது, முனிவர்க்குச் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யாது தாமதித்தான் எனக் குற்றம் சாட்டி, கோபத்துடன் தோளும் தலையும் துண்டமாய் வேறாகும்படி இராகுலன் அவனை வெட்டி னான். வெட்டிய அவ்வல்வினையே அப்பிறப்பில் அவனைத் திட்டி விடத்தால் இறக்கச் செய்தது. இப்பிறப்பிலும் இங்கு வெட்டுண்டு விழச் செய்தது என்றது.

அறஞ்செய் காதலன் அன்பினன் ஆயினும்
மறஞ்செய் துளனெனின் வல்வினை யொழியாது
ஆங்கவ் வினைவந்து அணுகுங் காலைத்
தீங்குறு முயிரே செய்வினை மருங்கின்
மீண்டுவரு பிறப்பின் மீளினும் மீளும் [12]

இந்நிகழ்ச்சியின் மூலம் உயிர்க்கொலை செய்பவன் அப்பிறவியில் மட்டுமன்றி அடுத்தடுத்த பிறவியிலும் அதன் பயனை அனுபவித்தே தீருவான் என்பதை நன்கு விளக்கி யுள்ளார் சீத்தலைச் சாத்தனார்.

4. கள்ளும் காமமும் களைக!

கள்ளுண்ணுதலும், காமம் கொள்ளுதலும் அறிவை மழுங்கச் செய்யும்; ஆற்றலைக் குறைக்கும்; அன்பைத் தடுக்கும்; சொல்வன்மையைக் கெடுக்கும். குறிப்பாகக் கள்ளுண்டவன் பண்பில்லாமல் பலரோடும் தொடர் பின்றிப் பேசுவான்; அழுவான்; திடீரென நிலத்தில் விழுவான்; கூக்குரலிடுவான்; வணங்குவான்; எழுவான்; சுற்றிச் சுற்றி வருவான்; ஓடுவான்; ஒதுங்குவான்; தனது நிழலோடு பகைத்து வீர உரை கூறுவான். இப்படிப்

---

12. மணிமேகலை, கந்திற்பாவை வருவதுரைத்த காதை, 65—69

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பல்வேறு நிலைகளில் தொடர்பில்லாது உளறுவாயனாய் நடந்து கொள்வான். அதற்குக் காரணமே கள்ளின் மயக்கமூட்டும் தன்மைதான். இப்படிக் கள்ளுண்ட மனிதனின் நிலையைக் கண்முன் நிறுத்துகிறார் சீத்தலைச் சாத்தனார்.

கணவிர மாலையிற் கட்டிய திரள்புயன்
குவிமுகில் எருக்கில் கோத்த மாலையன்
சிதவல் துணியொடு சேண்ஓங்கு நெடுஞ்சினைத்
தகர்வீழ் பொடித்துக் கட்டிய உடையினன்
வெண்பலி சாந்த மெய்ம்முழு துரீஇப்
பண்பில் கிளவி பலரொடும் உரைத்து ஆங்கு
அழுஉம் விழுஉம் அரற்றும் கூஉம்
தொழுஉம் எழுஉம் சுழலுஞ் சுழலும்
ஓடலும் ஓடும் ஒருசிறை ஒதுங்கி
நீடலும் நீடும் நிழலொடும் அறலும்
மையலுற்ற மகன் [13]

கள்ளுண்டவன் நிலையையும், அவன் உடையையும் வருணித்த சாத்தனார் அவனுக்காக மக்கள் கூட்டம் வருந்தியதையும் குறிப்பிட்டார். இன்றும் கள்ளுண்டவரின் நிலை அப்படித்தானே! அதனால்தான் மது உண்ணக்கூடாது என்று ஆன்றோர் முதல் அனைவரும் கூறிவருகின்றனர். அண்ணல் காந்தியடிகளும் அதனை வலியுறுத்தினாரே! இருப்பினும் கள் மட்டுமன்றி, எத்தனையோ போதை மருந்துகளையும், மாத்திரைகளையும் ஏன் ஊசிகளையும் அல்லவா இன்று பலர் பயன்படுத்திச் சிற்றின்பத்திற்கு அடிமையாகின்றனர். சிந்தனையைச் சிதைத்துச் சீரழிக்கும் இந்தப் போதை மருந்துகளைத் தூக்கி எறிய இன்றைய இளைஞர்களேனும் முன்வருவார்களா? காலங்காலமாகக் கூறிவந்த கள் முதலான போதைப் பொருள்களின் தீமையறிந்து

13. மணிமேகலை, மலர்வனம்புக்க காதை, 104—114

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விலக்கினால்தானே இலக்கியங்களைப் படித்த பயனை அடையலாம்? அதனை இயற்றியவர்களின் நோக்கமும் அப்போதுதானே நிறைவேறும்!

காமமும் கள் போன்றதுதான். கள் புறத்தே வாங்கும் பொருள்; காமமோ அவனவன் அகத்தில் வளரும் உணர்ச்சிமயமான அகப்பொருள். காமவயப்பட்டவன் கள்ளுண்டவன் நிலையை அடைவான். அதற்கு இதிகாசங்களும், புராணங்களும், இலக்கியங்களும் சான்று பகருகின்றன.

தேவரையும் மூவரையும் யாவரையும் வென்று, சாமகானம் பாடி சபாஷ் வாங்கிய இராவணன் வீழ்ச்சிக்குக் காரணமே அவன் மாற்றான் மனைவி சீதையின் மேல்கொண்ட காமம்தான்! கோவலன் கொலை செய்யப்பட்டது காம உணர்வின் விளிம்பில் இருந்த பாண்டியன் நெடுஞ்செழியனால்தான்! அதேபோல் மணி மேகலையை அடைந்தே தீரவேண்டும் என்ற காமவெறி மிக்கிருந்ததால்தான் உதயகுமாரன் காஞ்சனனால் வெட்டி வீழ்த்தப்பட்டான்! காஞ்சனனின் அந்தத் தவறான செயலுக்கும் அவனது காம உணர்வுதானே காரணமாயிற்று!

இந்தப் பாடலில் காம வயப்பட்ட உதயகுமரனின் உணர்ச்சி வேகத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார் சீத்தலைச் சாத்தனார்!

வான்தேர்ப் பாகனை மீன்திகழ் கொடியனை
கருப்பு வில்லியை அருப்புக்கணை மைந்தனை
உயாவுத் துணையாக வயாவொடும் போகி
ஊர்துஞ் சியாமத்து ஒருதனி எழுந்து
வேழம் வேட்டெழும் வெம்புலி போலக்
கோயில் கழிந்து வாயில் நீங்கி
ஆயிழை இருந்த அம்பலம் அணைந்து
வேக வெந்தீ நாகங் கிடந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போகுயர் புற்றளை புகுவான் போல
ஆகந் தோய்ந்த சாந்தலர் உறுத்த
ஊழடி இட்டதன் உள்ளகம் புகுதலும் [14]

ஆம்! வானிடை இயங்கும் தென்றல் தேரேறி, மீன் கொடியையும், கரும்பு வில்லையும் மலரம்பு களையும் உடைய, காமக்கடவுளைத் துணையாகக் கொண்டான் உதயகுமரன். மிகுந்த காமவேட்கை யோடு தன் அரண்மனைக்குச் சென்றான். ஊரெல்லாம் உறங்கி, ஓசையெல்லாம் அடங்கிய நள்ளிரவில் காமத் தையே துணையாகக் கொண்டு, வேறு எந்தப் படைக் கருவிகளையும் கொள்ளாமல் தனியாகச் சென்றான். எதற்கு? காதலி மணிமேகலையை அடைந்தே தீரவேண்டும் என்ற குறிக்கோளை நிறைவேற்றத்தான்! யானையை அடித்துத் தின்பதற்குப் புலி எப்படிப் பதுங்கிப் பதுங்கிச் செல்லுமோ அதுபோலக் காவலரும் அறியாவண்ணம் சென்றான். விரைவாகக் கொல்லும் கொடிய நஞ்சினை உடைய நாகப் பாம்பு உயர்ந்த புற்றின் வளையினுள் வேகமாகப் புகுந்து செல்வதைப் போல் மணிமேகலை தங்கியிருந்த அம்பலத்திற்குள் சென்றான். ஆனால் அம்பலத்தினுள் ஏற்கனவே வந்து மறைந்திருந்த காஞ்சனன், தன் மனைவி காயசண்டிகையை நாடியே உதயகுமரன் வந்தனன் என எண்ணி அவனது தோள் களை வெட்டி வீழ்த்தினான்.

உதயகுமரனின் காமவேட்கையின் ஆற்றல் புலி போலும், வேகம் விரைந்துசெல்லும் நாகப் பாம்பு போலும் அமைந்தது என்கிறார் சாத்தனார். அதேபோல் அம்பலத்தில் மறைந்திருந்த காஞ்சனன், மிகுந்த கோபத்தையுடைய நாகப்பாம்பு தன் நச்சுப்பற்கள் நிமிரும்படி தன் பெரிய கோபத்தோடே சீறி எழுந்து

---

14. மணிமேகலை, உதயகுமாரனைக் காஞ்சனன் வாளால் எறிந்த காதை, பாடல் வரி, 91—101

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தனது படத்தை விரித்தாற்போன்று பெரிதும் கோபங் கொண்டு உதயகுமரனை முதுகுப்புறமாகச் சென்று தாக்கியதைப்போன்று கதிர்வாளால் வெட்டினான் என்கிறார் கவிஞர். இங்கே காமவயப்பட்ட இருவருமே நச்சுப் பாம்பாகக் கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆங்குமுன் னிருந்த அலர்தார் விஞ்சையன்
ஈங்கிவன் வந்தனன் இவள்பால் என்றே
வெஞ்சின அரவ நஞ்செயிறு அரும்பத்
தன்பெரு வெகுளியின் எழுந்துபை விரித்தென
இருந்தோன் எழுந்து பெரும்பின் சென்றவன்
சுரும்பறை மணித்தோள் துணிய வீசிக்
காயசண் டிகையைக் கைகொண்டு அந்தரம்
போகுவல் என்றே அவள்பாற் புகுதலும் [15]

கள்ளும் பொய்யும் காமமும் கொலையும்
உள்ளக் களவும் உரவோர் துறந்தவை [16]

என்று கோப்பெருந்தேவி மாதவியின் பாட்டி சித்திராபதி யிடம் கூறும்போது உயர்ந்த அறிஞர்களால் விலக்கப் பட்டவை கள், பொய், காமம், கொலை, களவு ஆகிய ஐந்தும் ஆகும் என்கிறாள்.

இதனையே மற்றோரிடத்தில்,

முடிபொருள் உணர்ந்தோர் முடிநீர் உலகில்
கடியப்பட்டன ஐந்துள அவற்றில்
கள்ளும் பொய்யும் களவும் கொலையும்
தள்ளா தாகுங் காமம் தம்பால்
ஆங்கது கடிந்தோர் அல்லவை கடிந்தோர் [17]

என்கிறது மணிமேகலை

---

15. மணிமேகலை, உதயகுமரனைக் காஞ்சனன் வாளால் எறிந்த காதை, பாடல்வரி, 102—107
16. மணிமேகலை ஆபுத்திரன் நாடு அடைந்த காதை, பாடல்வரி, 77—79
17. ,, சிறைவிடுகாதை பாடல்வரி, 169— 173

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனவே கள்ளுங் காமமும் களைந்து, அறிவார்ந்த வாழ்வை வாழ முற்படுதல் வேண்டும் என்பதைத் தெற்றெனத் தெளியலாம்.

5. சிந்தையொன்றிச் செய்க!

எந்தச் செயலைச் செய்யும்போதும் அதில் மனத்தை நிலைநிறுத்திச் செய்ய வேண்டும். நிலை வேறு, நினைப்பு வேறாய் இருத்தல் கூடாது. தென்னை மரத்திலேறித் தேங்காய் பறிப்பவன் மேலே ஏறிய பின்னர் விழுந்து விடுவோமோ என நினைத்தால் உறுதியாக விழுந்து விடுவான். நிலையும் நினைப்பும் ஒன்றாய் இருத்தல் வேண்டும். அவ்வாறு சிந்தையொன்றிச் செய்தால், எண்ணிய செயல் திண்ணியமாய் முடியும்.

மணிமேகலையின் தோழி சுதமதி மாதவிக்கு உவவனம் என்னும் பூஞ்சோலையையும் அதில் உள்ள பளிங்கு மண்டபத்தையும் பற்றிக் கூறினாள். அதோடு ஆங்குள்ள பதுமபீடம் பற்றியும் விளக்கினாள். 'மாதவி! பதுமபீடத்தில் அரும்புகளை வைத்தால் மலரும். அந்த மலர்களில் வண்டுகள் மொய்க்காது. இட்ட மலர்கள் வாடா. இத்தகு சிறப்புடைய அந்தப் பீடத்தில் எந்த ஒரு தெய்வத்தை நினைத்து மலரை இட்டாலும் அம்மலர் அத்தெய்வத்தைச் சென்றடையும். தெய்வத்தின் திருவடிகளை நினைத்து பீடத்தில் மலர்களை வைத்தால் அவை அத்தெய்வத்தின் மலரடிகளைச் சென்று சேரும் இதற்குக் காரணம் யாது எனில், செய்யும் செயல்கள் மனத்தோடு பொருந்தியிருத்தலே ஆகும் மனத்தொடு பொருந்தாச் செயல் வெற்றி அடையாது என்ற உண்மையை உணர்த்துவதற்காக மயன் என்னும் தெய்வத் தச்சனால் நிறுவப்பட்டதுதான் அந்தப் பதுமபீடம்' என்றாள் சுதமதி.

உவமனம் என்பதுஒன் றுண்டு அதன் உள்ளது
விளிப்பறை போகாது மெய்ப்புறத் திடூஉம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பளிக்கறை மண்டபம் உண்டு அதனுள்ளது
தூநிற மாமணிச் சுடரொளி விரிந்த
தாமரைப் பீடிகை தானுண்டு ஆங்கிடின்
அரும்பவிழ் செய்யும் அலர்ந்தன வாடா
சுரும்பின முசா தொல்யாண்டு கழியினும்
மறந்தேன் அறன்திறம் மாதவி கேளாய்
கடம்பூண் டோர்தெய்வங் கருத்திடை வைத்தோர்
ஆங்கவர் அடிக்கிடின் அவரடி தானுறும்
நீங்காது யாங்கணும் நினைப்பிலர் ஆயிடின்
ஈங்கிதன் காரணம் என்னை என்றியேல்
சிந்தை யின்றியுஞ் செய்வினை உறுமெனும்
வெந்திறல் நோன்பிகள் விழுமங் கொள்ளவும்
செய்வினை சிந்தை யின்றெனின் யாவதும்
எய்தாது எனபோர்க்கு ஏது வாகவும்
பயங்கெழு மாமலர் இட்டுக் காட்ட
மயன்பண்டு இழைத்த மரபினது தான் [18]

பதுமபீடம் அற்புதம் நிகழ்த்துவதாகக் காட்டினாலும் சிந்தையும் செயலும் ஒன்றினால்தான் வெற்றி உறுதி என்ற நடைமுறை உண்மையை உணர்த்திவிட்டார் சாத்தனார்.

6. நல்லறம் புரிக!

உலகம் போற்றுவன போற்றித் தூற்றுவன மாற்றி பண்புடன் கூடி வாழும் நெறியான வாழ்வே அறம்! அல்லன நீக்கி, நல்லன நாடிச் செய்தலே அறம்! தன்னலம் குறைத்துப் பொதுநலம் பேணித் தொண்டாற்றுதலே அறம்! அன்பின் முதிர்ச்சியாலும், ஆற்றலின் வலிமையாலும், ஈகைத் திறத்தாலும் இன்னுயிர் காத்தலே அறம்!

உலகத்து உயிர்களுக்கெல்லாம் உணவு, உடை, இருப்பிடம் ஆகிய இம்மூன்றினையும் முறையாக வழங்கு

18. மணிமேகலை, மலர்வனம் புக்க காதை பாடல்வரி, 62— 79

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தலே ஆட்சியாளன் செய்ய வேண்டிய அறம் என்று மணிமேகலை, புண்ணியராசன் என்னும் மன்னனுக்குக் கூறுகிறாள்.

அறம்எனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல் [19]

உலகத்துயிர்களைக் காப்பாற்றும் ஆட்சியாளன் செய்ய வேண்டிய அறம் இது. அவ்வாறாயின் தனிமனிதன் செய்ய வேண்டிய அறம் எது என்னும் வினா எழும்? மனத்திலே குற்றம் அற்றவனாக இருத்தலே சிறந்த அறம்.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீற பிற [20]

அதுமட்டுமன்று, அவன் புரியும் செயலிலும் குற்றமில்லாதிருத்தல் வேண்டும். எவ்வுயிர்க்கும் இரங்கி உதவி செய்யும் அன்புள்ளத்தை வளர்த்தல் வேண்டும். பசி என்று வந்தவர்க்கு இல்லை என்று கூறாது இருப்பவற்றில் கொஞ்சமேனும் கொடுத்துதவும் ஈகைப் பண்பு வேண்டும். பொதுநலத்திற்காகத் தன்னுயிரையே அர்ப்பணிக்கத் துணியும் தியாக உணர்வு வேண்டும். இவற்றையெல்லாம் துறவு பூண்டால்தான் செய்ய முடியும் என்பதல்ல. இல்லறத்தில் இருந்து கொண்டே செய்யலாம் என்ற உண்மையை மணிமேகலைக் காப்பியத்தின் பல்வேறு காதைகளின் வாயிலாய் பாங்குடன் விளக்கியுள்ளார் சீத்தலைச் சாத்தனார்.

---

19. மணிமேகலை, ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை, பாடல்வரிகள், 228 — 231
20. திருக்குறள்—34

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7. பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து ஏறுக!

கல்லும் கல்லும் மோதினால் பொறி பறக்கும்; சொல்லும் சொல்லும் மோதினால் சிந்தனை பிறக்கும். அத்தகைய சொற்போரின் நிலைக்களமே பட்டி மண்டபம்! சிந்தனைத் தீர்வுகளின் உறைவிடமே பட்டி மண்டபம்! சொல்வோர் மட்டுமன்றிக் கேட்போரின் சிந்தனையையும் தூண்டிப் புத்தம் புது கருத்துக்களை உருவாக்கும் கருத்துக் கருவூலமே பட்டிமண்டபம்!

இதில் ஏதேனும் ஒரு பொருள் பற்றி இரண்டு அல்லது மூன்று அணியினர் வாதிட்டு அதற்குத் தீர்வு காண விழைவது மரபு. ஒவ்வொரு அணியிலும் இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்டோர் கலந்து எடுத்துக் கொண்ட பொருளைப் பற்றி ஒட்டியும் வெட்டியும் தத்தம் கருத்துக்களை முன்வைப்பர். அதனை நடுவர் ஒருவர் முற்றிலும் கேட்டு தத்தம் அணியினர் வாதங் களைப் பேசி முடித்த பின்னர் தீர்ப்பினை அளிப்பது வழக்கம். இந்த நிகழ்ச்சியே பட்டிமண்டபம் என வழங்கப்படுகிறது.

இன்றும் இந்தப் பட்டிமண்டபங்கள் தமிழகத்தின் எல்லா இடங்களிலும் சிறப்பாக நடைபெறுகின்றன. குறிப்பாக இலக்கியங்களைக் குறித்தே பட்டிமண்டபங்கள் நிகழ்கின்றன. இலக்கியம் மட்டுமன்றி சமயம், தத்துவம், அறிவியல், பொருளாதாரம், சமுதாயம் முதலான பல்வேறு தலைப்புக்களில் பட்டிமண்டபங்கள் நிகழ்வதை இன்றும் காணலாம். இதனைப் பட்டிமன்றம் என்றும் அழைப்பர். பொதுவாகப் பட்டிமண்டபத் தலைப்புக்கள் ஒரு சிக்கலை எடுத்துக் காட்டுவதாகவோ, சிந்தனையைத் தூண்டும் வகையிலோ அமைதல் நலம். அதே போல் வாதிடுகிறவர்களும் ஒருவர் கருத்தை மறுக்கும்போது அதற்கான காரணங்களை நிரல்படச் சொல்ல வேண்டும். இவ்வாறு உண்மையை அறியும் ஆர்வ நாட்டத்தோடு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எடுத்துக் கொண்ட பொருள் பற்றிச் சிந்தித்து திறமை யோடு வாதிட வேண்டும். பட்டிமண்டப விதிமுறை களுக்குக் கட்டுப்பட்டு, அதன் தன்மை அறிந்து கலந்து கொள்ள வேண்டும்.

பட்டிமண்டபங்களில் தலைப்பு பற்றி வாதம் நிகழும் போது வாதிடுவதற்கு வரும் ஒவ்வொரு அணியினர்க்கும் குறிப்பிட்ட கால அளவு ஒதுக்க வேண்டும். அந்தக் கால எல்லையை மீறக்கூடாது. மாற்றுக் கட்சியினர் வாதிட்டு அமர்ந்த உடன் அதனை மறுக்க வருகிறவர் முதலில் முன்னவர் எழுப்பிய வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும் அல்லது அவர் கூறிய கருத்தில் மாறுபாடு இருப்பின் முதலில் அந்த மாறுபாடுகளை நீக்கும் கருத்துக் களைக் கூற வேண்டும். அதனைத் தொடர்ந்து தம் அணிக்கு வலுவூட்டும் புதுமைச் சிந்தனைகளையும் சிறப்பாக எடுத்துரைக்க வேண்டும். இதனை,

> சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
> வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து [21]

—எனும் குறட்பா வலியுறுத்தும். கேட்பவர்களின் கவனைத்தை ஈர்த்து இசைவிக்கும் வகையிலும் வாதிட வேண்டும்.

இத்தகைய விதிமுறைகளையெல்லாம் கொண்ட பட்டி மண்டபங்களில் பெரும்பாலன, சமயங்களைப் பற்றியே நிகழ்ந்துள்ளன என்பதை மணிமேகலை நன்கு விளக்கு கிறது.

> ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள்
> பட்டிமண் டபத்துப் பாங்கறிந்து ஏறுமின் ! [22]

---

21. திருக்குறள்—645

22. மணிமேகலை, விழாவறை காதை, பாடல் வரிகள் 60, 61

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சீத்தலைச் சாத்தனார் சிந்தித்துச் சொன்ன இந்த நன்மொழி இன்றைக்கு நிகழும் பட்டிமண்டபங்களில் பேசுவோருக்கும் இனியதோர் எச்சரிக்கையைத் தருகிறது.

8. பசிப்பிணி போக்குக!

உயிரினங்களின் இன்றியமையாத் தேவைகளில் ஒன்று உணவு. உணவின்றேல் உரமில்லை— உயிரில்லை. அதுவும் உணவு அந்தந்த நேரத்தில் உண்ணப்பட வேண்டும். இல்லையாயின் உடலுக்கு நோய் ஏற்படும். பசியே நோயாகிப் போய்விடும். அதனையே பசிப்பிணி என்கின்றனர்.

இதனை அறிந்தே சீத்தலைச் சாத்தனார் பசிப்பிணி போக்கும் மருத்துவராகக் காவிய நாயகி மணிமேகலை யைப் படைக்கிறார். அமுதசுரபி அற்புதப் பாத்திரமாக அமைந்தாலும் அதன் மூலம் எப்படிப் பசியால் வாடிய வர்க்கு உணவளிக்கப்பட்டது, யார் யார் பெற்றுப் பயனடைந்தனர் என்பதையெல்லாம் பல்வேறு காதை களில் விளக்கியுள்ளார் பாவலர் சாத்தனார்.

தீவதிலகை, மணிமேகலையிடம், ''நங்காய்! உலகில் தாமே முயன்று உண்ண முடியாத ஏழைகள் உள்ளனர். அவர்களின் பசித் துன்பத்தைப் போக்குதல் மிகச் சிறந்த அறம் ஆகும். அவ்வாறு பசியால் வாடும் பலருக்கும் உணவளிப்போர் அவர்களது பசியை மட்டும் நீக்க வில்லை. அவர்களுக்கு உயிரையே கொடுத்தவர் ஆவர்! இத்தகைய சிறந்த அறத்தைச் செய்வதற்கு ஏற்ற அமுத சுரபி உன் திருக்கையில் உள்ளது. அதன் மூலம் ஏழைகளுக் கெல்லாம் உணவளித்து உயிரும் கொடுப்பாயாக! அது மிகச் சிறந்த அருளறமாகும்'' என்றது. இதனை விளக்கும் பாடல் இதோ—

ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்நெறி வாழ்க்கை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மண்தினி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உயிர்க் கொடை பூண்ட உரவோயாகிக்
கயக்கறு நல்லறங் கண்டனை [22]

அவ்வாறு உணவளிக்கா விட்டால் பசிப்பிணியால் எண்ணற்றோர் இறக்க நேரிடும். அதுமட்டுமன்று. பசிப்பிணி உயரிய குடிப்பண்பினைக் கெடுக்கும்; சிறப்புக்களை அழிக்கும்; கற்ற கல்வியறிவையே இழக்கச் செய்யும்; சான்றோர்க்கு இன்றியமையாத நாணுடைமையாகிய அணிகலனை அகற்றும்; பெருமையைத் தரும் அழகைக் குலைக்கும்; கட்டிய மனைவியின் அன்பையும் தவிர்க்கும் என்கிறார் சாத்தனார்.

குடிப்பிறப்பு அழிக்கும் விருப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி [23]

இதில் சாத்தனார் பசிப்பிணியைப் பாவி என்ற சொல்லால் குறிப்பது ஆழ்ந்து நோக்கத் தக்கது. பசிக் கொடுமை பல்வேறு வளங்களையும் நலங்களையும் இழப்பதற்குக் காரணமாயிருப்பதால் பாவி என்கிறார்.

பசி வந்திடப் பத்தும் பறந்து போம் எனக் கூறுவர். அந்தப் பத்து என்னென்ன? என்று அறிய ஆர்வம் மேலிடுகிறது அல்லவா? அதற்கு விளக்கம் அளிக்கிறார் ஒண்டமிழ் மூதாட்டி அவ்வையார்.

மானம்குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை— தேனின்

---

22. மணிமேகலை, பாத்திரம் பெற்ற காதை, பாடல்வரிகள், 92—98
23. ,, ,, பாடல்வரிகள், 72—80

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்து போம் [24]

பசிப்பிணியைப் போக்கிய ஆபுத்திரன் நிலையை சீத்தலைச் சாத்தனார் அற்புதமாக விளக்கியுள்ளார். ஆம்! ஆபுத்திரன் செல்வச் செழிப்பில் இருந்தவன் அல்ல. பல இடங்களில் பிச்சை எடுத்தே தன்வயிறு வளர்த்தவன். இருப்பினும் தான் முயன்று பெற்ற உணவின் பெரும் பகுதியை விழி இழந்தோர், காதுகேளாதோர், நடக்க இயலாதவர், பேணுவதற்கேற்ற ஆதரவற்ற ஏழைகள், நோயினால் அவதிப்பட்டோர் முதலான எல்லோருக்கும் கொடுத்துவிட்டு எஞ்சியதை உண்பான். இல்லாவிட்டாலும் வருந்த மாட்டான். அத்தகு கொடைப் பண்பு மிக்க ஆபுத்திரன் செய்ததைப் போன்று மணிமேகலையும் பல்லோருக்கும் உணவளித்து அவர்தம் பசிப்பிணி போக்கவேண்டும் என்கிறார் சாத்தனார்.

ஐயக் கடிஞை கையின் ஏந்தி
மையறு சிறப்பின் மனைதொறு மறுகிக்
காணார் கேளார் கால்முடப் பட்டோர்
பேணுநல் இல்லோர் பிணிநடுக் குற்றோர்
யாவரும் வருகவென்று இசைந்துடன் ஊட்டி
உண்டொழி மிச்சில்உண் டோடுதலை மடுத்துக்
கண்படை கொள்ளும் காவலன் தானென் [25]

அமுதசுரபி என்னும் அற்புதப் பாத்திரத்தின் உதவியால் மணிமேகலை பேணப்பட வேண்டிய அனைவருக்கும் மனமுவந்து அளித்தாள். சிறையில் பசியால் வாடி வதங்குவோரைக் கண்டு மனமிரங்கி, அவர்களை விடுவிக்குமாறு அரசன் உதயகுமரனிடம் வேண்டினாள்.

---

24. அவ்வையார், நல்வழி, பாடல், 26
25. மணிமேகலை, ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை, பாடல்வரி 109—115

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரசனும் அதற்கு உடன்பட்டான். அங்குப் பசியால் வாடியவர்க்கு உணவளித்து சிறைக்கோட்டைத்தையே அறக்கோட்டமாக்கி அற்புதத்தை நிகழ்த்தினாள் மணிமேகலை!

எனவே பசியின் கொடுமையை உணர்த்தி, அதனைப் போக்குவதற்கான வழிமுறைகளையும் பல்வேறு கதை களாலும் நிகழ்ச்சிகளாலும் விளக்கியுரைத்த சாத்தனாரின் கவித்திறன் ஏற்றிப் போற்றத் தக்கதே!

9. பிறர்க்குரியாளனாய் விளங்குக!

தனக்கென வாழாது பிறர்க்குதவி செய்வதையே தம் சிறந்த குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றி வரும் உயர்ந்த பொதுநலத் தொண்டர்களால்தான்— பிறர்க்கென வாழும் பெற்றியாளர்களால்தான் உலகமே நிலைத்திருக்கிறது.

உண்டால் அம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ அஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே [26]

பிறர்க்குதவி செய்யும்போது தன்னுயிர் துறக்க நேரிட்டாலும் அஞ்சாமல் அதனை அற்பணிக்க முன்வரும் ஒப்புரவாளர்களைத்தான் தியாகிகள் எனப் போற்றினார் செந்நாப்போதார் திருவள்ளுவர்.

---

26 புறநானூறு, 182

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒப்புரவினால் வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்கது உடைத்து [27]

தனக்கென வாழாது பிறர்க்கென வாழுபவர்களே தரணி போற்றும் உன்னதப் புகழை அடைகின்றனர்; பொன்னேட்டில் பொறிக்கத்தகும் பேற்றினைப் பெறுகின்றனர், எக்காலத்தவரும் ஏற்றிப் போற்றும் நிலையை எய்துகின்றனர். ஆன்மீக நெறிபரப்பிய ஆன்றோர்களான கௌதம புத்தர், ஆதிசங்கரர், ஏசு கிறிஸ்து, முகம்மது நபி, குருநானக், மஹாவீரர் முதலானோர் குறிப்பிடத்தக்கோர்— அதேபோல் அண்ணல் காந்தியடிகள், ஆபிரகாம்லிங்கன், தன்னுயிர் கொடுத்து மன்னுயிர் காத்த மாவீரர்களான விடுதலை இயக்க வீரர்கள் முதலானோர் என்றும் மக்கள் உள்ளத்தில் நின்று நிலவுகின்றனர்.

தனக்கென முயன்று வாழாமல் பிறர் நலனுக்காகவே முயல்கிற குணத்தை உடையவர் புத்தர் என்கிறார் சீத்தலைச் சாத்தனார்.

உலக நோன்பின் பலகதி உணர்ந்து
தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் [28]

பிறர்க்குதவி செய்யும் பெரும் பண்பே அறத்தைச் செய்யத் தூண்டும். மானுடப் பிறவியின் பருவங்கள்— குறிப்பாக வளமை மிக்க இளமைப் பருவம் நிலைக்காது; அன்றாடம் அழகுபடுத்தும் உடலும் நிலைக்காது; வாழ்க்கைக்கு இன்றியமையாத செல்வமும் நிலைக்காது; ஒருவனுக்கு அவனுடைய பிள்ளைகளால் சொர்க்கத்தைத் தரமுடியுமா? இவ்வுலக வாழ்வு நீங்கி மேனிலை உலகை அடையும் போதும் கூடவே துணையாக வருவது அவரவர்

---

27. திருக்குறள், 220
28. மணிமேகலை, மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை, பாடல்வரிகள் 72—73

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்த நற்செயலின் பயன்களே! வினைப்பயனின் விழுமிய துணையைப் பெறுவதற்குக் காலங்கடத்தாது கனிவோடு அறம் செய்ய வேண்டும் என்கிறார் மணிமேகலைக் காப்பியம் இயற்றிய வித்தகர் சாத்தனார்.

இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணை ஆவது [29]

இதனையே பட்டினத்தடிகள்,

அத்தமும் வாழ்வும் அகத்து மட்டே— விழியம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே— விம்மிவிம்மிஅழும்
மைந்தரும் சுடுகாடு மட்டே பற்றித்தொடரும்
இருவினைப் புண்ணிய பாவங்களே

—எனப் பாடியுள்ளார்.

அன்றறிவாம் என்னாது அறம்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை [30]

என்ற குறட்பாவும் இதனை வலியுறுத்தும்.

எனவே பிறவிப் பயனை அடைவதற்கும், பேரின்பப் பெருவாழ்வு எய்துவதற்கும், காலங்கடந்தும் உலகத்தார் உள்ளத்தில் இடம் பெறுவதற்கும் வழிவகுக்கும் பிறர்க்குதவி புரியும் நல்லறத்தை நாளும் மேற்கொண் டொழுகுதல் சால்புடைத்தல்லவா?

10. பெண்மை போற்றுக!

இரட்டைக் காப்பியங்களாக விளங்கும் சிலப்பதிகார மும், மணிமேகலையும் பெண்களுக்கு முக்கியத்துவம்

---

29. மணிமேகலை, சிறைசெய் காதை, பாடல்வரிகள் 135— 138
30. திருக்குறள்—36

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொடுத்துள்ளதை அதன் தலைப்புகளே எடுத்துக்காட்டும். பொதுவாக விருந்தோம்பும் பண்பு மகளிர்க்கு மிகுந்திருந்தாலும் ஆடவரே அதிகமாகச் செய்ததாக இலக்கியங்கள் காட்டுகின்றன. பாரி, பேகன், முதலான கடையேழு வள்ளல்களில் பெண்ணொருத்திகூட இடம் பெறவில்லை. ஆனால் அவ்வள்ளல்களின் பணிக்கு அவர்களின் பங்கும் மிகுதியாக இருந்திருக்கக் கூடும். வெளியில் தெரியாத வேர்களாகவே இருந்தனர். ஆனால் மணிமேகலைக் காப்பியமோ ஒரு பெண்ணின் வாயிலாக அறத்தைச் செய்யச் செய்து அறிவுரைகள் கூற வைத்து, ஆன்றோர்கள் போற்றும் நிலையையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. மணிமேகலையை அந்நிலைக்கு உயர்த்தி, அனைவரின் உள்ளத்திலும் தக்க வைத்த சீத்தலைச் சாத்தனாரின் திறம் பன்முறைப் பாராட்டத் தக்கது.

கணிகையர் குலத்தில் உதித்த மாதவியின் மகள் மணிமேகலையைத் துறவுகொள்ள வைத்ததே பெரும் புரட்சி! அதுவும் மணிமேகலையின் பாட்டி சித்ராபதி, மணிமேகலையை எப்படியேனும் குலத்தொழிலான ஆடற்கலையில் ஈடுபட வைக்க முயன்றும் முடியாமற் போய்விட்டது. மணிமேகலை துறவு பூண்டு, அமுதசுரபி பெற்று, பசிப்பிணி நீக்கிப் பார்போற்ற வாழ்ந்தாள் என்பதை வகையுறக் காட்டிய சாத்தனாரின் திறம் உச்சிமேல் வைத்து மெச்சத் தக்கது. மணிமேகலையைப் பெண்குலத்தின் பொன் விளக்காக ஒளிரச் செய்ததே பெண்மையைப் போற்றுவதற்குத்தானே!

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதுஎழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்
பொய்யில் புலவன் பொருளுறை தேராய் [31]

---

31. மணிமேகலை, சிறைசெய் காதை, பாடல்வரிகள் 59—61

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற பாடல் மூலம் சுற்புடைப் பெண்டிரின் பெருமையைப் பொற்புடன் விளக்கியுள்ளார் மணி மேகலை ஆசிரியர்.

மணிமேகலை, தான் பெற்ற அமுதசுரபியில் முதன் முதல் பத்தினிப் பெண்டிர் இடும் பிச்சையை ஏற்றல் வேண்டும் என்னும் மரபினால் சுற்பின் செல்வி ஆதிரை யிடம் பிச்சை பெறுகிறாள்.

மனையகம் புகுந்து மணிமேகலை தான்
புனையா ஓவியம் போல நிற்றலும்
தொழுது வலங்கொண்டு துயரறு கிளவியோடு
அமுதசுரபியின் அகன்சுரை நிறைதரப்
பாரகம் அடங்கவும் பசிப்பிணி அறுகென
ஆதிரை யிட்டனள் ஆருயிர் மறந்தென் [32]

பசியாலும் பட்டினியாலும் வாடி வதங்குவோரின் பசிப்பிணி நீக்குவதற்குத் துணையாகத் திகழ்ந்த அமுதசுரபியில் முதன்முதல் பிச்சையிடும் பேறு பெண்ணுக்குக் கொடுக்கப்பட்டிருப்பது எத்துணைச் சிறப்புடையது. அதன்பின் அந்த அமுதசுரபி எத்தனையோ உயிர்களைக் காப்பாற்றியது என்கிறது காவியம். எனவே பெண்ணறம் பேணப்படுவது இன்றுமட்டுமல்ல தொன்று தொட்டே உள்ளது எனத் தெரியலாம்.

மணிமேகலை உணர்த்தும் மணிமொழிகளில் மணிமுடி யாய்த் திகழ்வதே உயிரின் அழியாத் தன்மைபற்றிக் குறிப்பிடுவதுதான். காட்டுமிராண்டிகளாய் அலைந்து திரிந்து மனிதர்களையே உணவாக உண்ணுவோர் கூட்டமான நாகர்களின் தலைவனுக்கு வணிகன் சாதுவன் கூறும் அறிவுரைகள் என்றும் நினைவிற்கொள்ளத்தக்கன.

---

32. மணிமேகலை, ஆதிரை பிச்சையிட்ட காதை, பாடல்வரிகள் 130— 135

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்றது உண்மையின்
நல்லறஞ் செய்வோர் நல்லுலகு அடைதலும்
அல்லறஞ் செய்வோர் அருநரகு அடைதலும்
உண்டென உணர்தலின் உரவோர் களைந்தனர்
.....
.....
உற்றதை உணரும் உடல் உயிர்வாழ்வுழி
மற்றைய உடம்பே மன்னுயிர் நீங்கிடில்
தடிந்தெரி ஊட்டினும் தான்உணரா தெனின்
உடம்பிடைப் போனதொன்று உண்டென உணர்நீ
போனோர் தமக்கோர் புக்கில் உண்டு என்பது
யானோ வல்லேன் யாவரும் உணர்குவர்
உடம்புஈண்டு ஒழிய உயிர்பல காவதம்
கடந்து சேண் சேறல் காண்குவை
ஆங்கனம் போகி அவ்வுயிர் செய்வினை
பூண்ட யாக்கையின் புகுவது தெளிநீ [33]

எனவேதான் உயிரினை மன்னுயிர் எனக் குறிப்பிடுவர். மன் என்றால் நிலைத்த— அழியாத என்று பொருள். அழியாத உயிர். அப்படியாயின் அழியக்கூடியது உடல். உயிர் உடலில் இருக்கும்போதுதான் இயக்கமே. இல்லையெனில் உடல் உதவாக்கரைதான். அதனால்தான் வயது உடம்புக்குத்தான் உயிருக்கு அல்ல என்பர் சான்றோர். பிறந்த குழந்தையின் தோற்றத்திற்கும் அதுவே வளர்ந்து, வாழ்ந்து, பின் முதுமை நிலை எய்தியபோது ஏற்பட்ட மாற்றத்திற்கும் எத்தனை வேறுபாடுகள்? உடம்பிலிருந்து போகும் உயிர் வேறு ஓர் உடம்பில் குடிபுகும் என்கிறார் சாத்தனார். அதனை மிக எளிய நடைமுறை உவமையால் விளக்குகிறார். வீட்டை விட்டு வெளியேபோனவன் வேறோர் வீட்டிற்குத்தானே போகவேண்டும். அதுவும்

---

33. மணிமேகலை, ஆதிரை பிச்சையிட்ட காதை, பாடல் வரிகள், 86—105

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எந்த வீட்டிற்குப் போகவேண்டும் என்ற நோக்கும் அவனுக்கு வேண்டும் அல்லவா? அதுபோல் உடலை விட்டு நீங்கும் உயிர் அதன் வினைப் பயனுக்கேற்ற உடலை நாடிச் செல்லுமாம். இப்படி உடம்பின் தன்மையையும் உயிரின் வலிமையையும் காரண காரியத்தோடு சாதுவன் விளக்கியதைக் கேட்டு நாகர்தலைவன் பெருமகிழ்ச்சி அடைந்தான். அதுமட்டுமன்று. சாதுவன் கூறிய நல்லுரைப்படி நடப்பதாகவும் உறுதியளித்தான். இப்படிக் காட்டுமிராண்டிகளுக்கும் அறிவுரை கூறித் திருத்திய சாத்தனாரின் புலமையைப் போற்றிப் புகழத் தான் வேண்டும். இந்த அறிவுரை காட்டுமிராண்டி களுக்கு மட்டுமன்று. இன்றைக்கு நாகரிகத்தில் திளைத் திருப்போருக்கும் தேவைதானே?

மற்றோரிடத்தில், சுதமதி காமவயப்பட்டு மணி மேகலையைக் காணத்துடிக்கும் பேரவாவோடு உவவனம் வந்த உதயகுமரனுக்கு அறிவுரை கூறும்போது மக்கள் உடம்பின் மகத்துவத்தை விளக்குகிறாள்.

மக்கள் பெற்றிருக்கின்ற உடம்பு முன்னே செய்த வினையின் பயனாகத் தோன்றியதே! பின்னும் பிறப்பதற்குக் காரணமான வினைகள் விளைவதற்கு நிலைக்களனாய் அமைவது இப்பிறப்பு. உடலை அழகு படுத்துவதற்காகவே ஆடைகளும், அணிகலன்களும் அணிகின்றோம். அவற்றை நீக்கினால் இழிந்த உடலின் உறுப்புக்கள் புலால் நாற்றத்தைப் பரப்பும். உடலுக்கு ஆண்டு செல்லச் செல்ல வயதாகி, முதுமை அடைந்து ஒருநாள் இறந்தும் படலாம். துன்பத்தைத் தரும் நோய் கள் ஏற்படுவதற்கு இடமாக உள்ளது உடல். பற்று, பாசம் முதலானவற்றின் இருப்பிடம் உடல்— காமம் முதலான குற்றங்களைப் புரிவதற்குக் காரணமாய் அமைவது உடல். கொடிய நஞ்சு கொண்ட பாம்பு குடிகொண்டிருக்கும் புத்தினைப் போல் கோபம் குடிகொண்டிருக்கும் இருக்கையே உடல். அவலம்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவலை, வழிகாணாது தவிக்கும் நிலை, துன்பத்தில் தோய்ந்து வருந்தியிருக்கும் நிலை முதலான நால்வகைத் துன்பங்களும் கொண்ட நெஞ்சத்தை உடையது உடல். இத்தகு தீமைகளையெல்லாம் உள்ளடக்கிய இந்த உடலின் புற அணிகளைக் கண்டு மட்டும் மயங்கிவிடக் கூடாது. அதன் மறுபக்கத்தில் உள்ள தீமைகளையும் எண்ணிப் பார்த்தல் வேண்டும் என்று கூறுகிறாள் சுதமதி.

வினையின் வந்தது வினைக்குவிளை வரயது
புனைவன நீங்கில் புலால்புறத் திடுவது
மூத்துவிளி வுடையது தீப்பிணி இருக்கை
பற்றின் பற்றிடம் குற்றக் கொளகலம்
புற்றடங்கு அரவிற் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையாறு அழுங்கல்
தவலா உள்ளந் தன்பால் உடையது
மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
மிக்கோய் இதனைப் புறமறிப் பாராய் [34]

சுதமதியின் வாயிலாக உடலின் இயல்புகளையும், வினைப்பயன்களையும் விளக்கியுள்ளார் சீத்தலைச் சாத்தனார்.

இப்படி எடுக்க எடுக்கக் குறையாத சிந்தனை முத்துக்களைக் கொண்ட சீர்மிகு களஞ்சியமாக விளங்குவது மணிமேகலை! புத்தமதத் தத்துவங்களையும், வாழ்வியல் நெறிமுறைகளையும் கதைகளாலும், நிகழ்ச்சிகளாலும் படிப்போர் மனங்கவரும் வண்ணம் சித்தரித்துக் காட்டும் செஞ்சொற்காப்பியமாகத் திகழ்வது மணிமேகலை!

ஆம்! அந்த மணிமேகலை மானுடம் வெல்வதற்கு உரைத்த பொன்மொழிகளாம் நன்மொழிகளை நாளும் படித்துப் பயன்பெறுவோமா?

---

34 மணிமேகலை, பளிக்கறை புக்க காதை, பாடல்வரிகள் 113—121

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3

பிஞ்சிலே பழுத்த பெம்மான்

அன்றொருநாள், லாகூரில் உள்ள தால்வண்டி என்னும் சிற்றூரின் கணக்குப்பிள்ளை காலு, தன் மகன் கல்விக்கூடத்துக்குப் போகாமலும், தனக்கென வேலை யொன்றினைத் தேடாமலும் பொறுப்பின்றியிருப்பதாக மனம் மிகவும் வருந்தினார். மகனை அழைத்து, 'நீ பள்ளிக்கூடத்தில் தொடர்ந்து கல்வி கற்காமல் ஆசிரியர் களிடம் எதிர்க் கேள்வி கேட்டே வெளியில் வந்து விட்டாய். உனக்கென வேலையொன்றினைத் தேடாது வீணே பொழுதினைக் கழிக்கின்றாய். நமக்கென்று நிலம் உள்ளது. அதனையேனும் உழுது பயிர்செய். அதற்கான கருவிகளை வாங்கப் பணத்தையும் பெற்றுச் செல்' என்றார்.

மகனும் தந்தையிடம் பணத்தை வாங்கிச் சந்தைக்குச் சென்றான். வழியிலே சில சாதுக்கள் வயிற்றுக்குச் சோறின்றி வாடுவதைக் கண்டான். மனம் இறங்கினான். அவர்களது பசிப்பிணி அகற்றிடத் தனது கையில் உள்ள பணம் முழுவதையும் செலவழித்தான். உணவுண்டு உளம் மகிழ்ந்த சாதுக்களின் துன்பம் துடைத்த பெருமை கொண்டான். தந்தை கொடுத்தனுப்பிய பணத்துக்கு உரிய பொருளை வாங்காமல் சென்றால் அவர் கோபம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொள்வார் எனக் கருதி வீட்டுக்கும் செல்லாமல் மரத்தடியிலேயே தங்கி விட்டான்.

காலையிலேயே பணம் பெற்றுச் சென்ற மகன் பொருளுடன் திரும்பவில்லையே என மனம் வருந்தித் தேடலானார் தந்தை. கடைசியில் சந்தையிலும் இல்லாமல் சந்தடியில்லாத மரத்தடியில் அமர்ந்து தியானம் செய்து கொண்டிருந்த மகனைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார்; அவனது பொறுப்பற்ற போக்குக்காக மனம் வேதனைப்பட்டார்; உழைக்காமலே பணத்தை விரயம் செய்ததற்காகக் கோபம் மிகக் கொண்டார். அவருடன் வந்திருந்த ஊர் தலைவர் ராய்பூலர் 'தம்பி நீ உன் நிலத்தில் உழுது பயிர் செய்தால் விளைச்சல் பெருகுவதோடு உனது குடும்பம் வளர உரிய பணமும் கிடைக்கும் அல்லவா? உனது பொறுப்பை உணர்ந்து உழுதொழிலில் ஈடுபடு' என அறிவுரை கூறினார்.

அப்போது அந்தச் சிறுவன் கூறினான், 'ஐயா, நீங்கள் நினைப்பதுபோல் நிலத்தை உழுவதில் என் மனம் ஈடுபாடு கொள்ளவில்லை. உடம்புதான் வயல்; நற்செயல்கள்தான் விதைகள்; இறைவன் திருநாமமே தண்ணீர்; இதயமே உழவன்; இந்த முறையில் உழவு செய்தால் இறைவன் உங்களுக்கு நிர்வாணப் பேற்றைக் கொடுப்பார்,' என்று மறு மொழி கூறினான். மகனின் இந்தப் பதிலைக் கேட்டுத் திகைத்தார் தந்தை. அவரது நண்பர் ராய்பூலர், 'அன்பரே! உமது மகன் கருவிலே திருவுடையன்; ஆண்டவனின் அருளைப் பெற்றவருக்குத்தான் இப்படிப்பட்ட உயர்ந்த சிந்தனைகள் எழும். அவன் உமது நிலத்தை உழுது குடும்பம் நடத்தப் பணம் சம்பாதிக்கவில்லையே என வருந்த வேண்டாம். அவன் மனத்தை உழுவதால் கிடைக்கும் மகத்தான சிந்தனைகள் உமக்கும், நமக்கும் மட்டுமன்றி, இந்த ஊருக்கே. நாட்டுக்கே. ஏன் உலகத்துக்கே பெரிதும் பயன்படும். அதனால் எண்ணற்ற மக்கள் பயனடைவார்கள். மக்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போற்றும் மகானாகத் திகழ்வான்' என்று கூறினார்.

இவ்வாறு இளம் வயதிலேயே உளம் பழுத்த உத்தமர் தான்— நிலத்தை உழுவதைத் தவிர்த்து மனத்தை உழும் மார்க்கத்தைக் கண்ட மகான்தான், குருநானக் தேவர்!

தற்பொழுது பாகிஸ்தானிலிருக்கும் லாகூரில் உள்ள தால்வண்டி என்னும் அழகிய சிற்றூரின் கணக்குப்பிள்ளை காலு அவர்களுக்கும் திரிபதா அம்மையாருக்கும் அருந்தவப் புதல்வராக அவதரித்தார் நானக்.

பெண்குழந்தைக்கு நானக்கி என்றும், ஆண் குழந்தைக்கு நானக் என்றும் பெயர் சூட்டுவது பஞ்சாப் நாட்டு மரபு. அதனைப் போற்றி, காலு தமது முதல் பெண்குழந்தைக்கு நானக்கி எனப் பெயரிட்டார். அதனை அடுத்துப் பிறந்த ஆண் குழந்தைக்கு நானக் எனப் பெயர் சூட்டினார்.

குடும்ப சோதிடர் ஆண் குழந்தையைப் பார்த்ததும் கைகூப்பி வணங்கியது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தி யது. மண்ணும் விண்ணும் இந்தக் குழந்தையைப் போற்றிப் புகழும்; ஹிந்துக்களும், முஸ்லீம்களும் இந்தக் குழந்தையை வாயார வாழ்த்தி, மனமாரத் துதிப்பார்கள் என்றார்.

சோதிடர் கூறியதுபோல் பிற்காலத்தில் நானக் பேரும் புகழும் பெற்றார். ஹிந்துக்களும், முஸ்லீம்களும் அவரைப் பெரிதும் மதித்துக் கொண்டாடினர். தமது நாற்பதாவது வயதில் குருஸ்தானத்தைப் பெற்றார். அன்று முதல் மக்கள் அவரை குருதேவர் எனக் கொண்டாடினர். இன்றும் குருநானக் தேவர் எனப் போற்றிப் புகழுகின்றனர்.

சீக்கிய சமயத்தில் முக்கியக் குருமார்கள் பத்துப்பேர். அதில் முதல் குருவின் பெயர் நானக் தேவர். கடைசிக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குருவின் பெயர் குருகோவிந்த் சிங். சீக்கிய சமயத்தைப் பஞ்சாபில் தோற்றுவித்த பெருமை குருநானக் தேவரையே சாரும்.

'பக்தி இயக்கம் தமிழ் நாட்டில்தான் முதன்முதலாகத் தோன்றியது. அதைப் பஞ்சாபில் பரப்புவதில் குருநானக் முக்கியப் பங்கு எடுத்துக் கொண்டார். தமிழ் நாட்டில் தோன்றிய ஆழ்வார்களும், நாயன்மார்களும் பக்தி நெறியைப் பரப்பியதைப் போல், பஞ்சாபில் குருநானக் தேவர் பிரச்சாரம் செய்து பக்திநெறியைப் பரப்பினார்; அதை வாழ்க்கையிலும் கடைப்பிடித்தார் என்கிறார் குஷ்வந்த் சிங். இதே கருத்தினை பாய்ஜோத்சிங் அவர்களும் உறுதிப்படுத்தியுள்ளார்.

குருநானக் ஓய்வு ஒழிச்சலின்றிப் பயணம் செய்து தமது கொள்கைகளைப் பரப்பினார். அவரது போதனைகள் சுமார் ஆயிரம் பாடல்களில் அடங்கியுள்ளன. இதனை சீக்கியர்கள் ஆதிகிரந்தம் எனப் போற்றிப் பாடுகின்றனர்.

குருநானக் தேவரின் பாடல்கள் கடவுள் அருளைப் பெறுவதற்கு வாயிலாகவும், நேரிய எண்ணம், நேரிய உணர்வு, நேரிய நோக்கம், நேரிய முயற்சி, நேரிய பலன்— இவற்றைப் பெறுவதற்குரிய வாயிலாகவும் அமைந்துள்ளன என்று வருணிக்கிறார் பேராசிரியர் K. R. சீனிவாச ஐயங்கார் அவர்கள்.

''Nanak's poetry thus both a means of invoking, grace and a call to right feeling, right thought, right aspiration, right endeavour, and right achievement.''

குருநானக் இளமை முதலே மலர்ந்த முகத்தோடும், ஒளிமிகு கண்களோடும், உணர்வூட்டும் பாடல்களைப் பாடும் இனிய குரலோடும், அடக்கமும் அமைதியும் குடிகொண்ட தோற்றத்தோடு காட்சியளிப்பார். அவரது தெய்வீகமான தோற்றப் பொலிவும், அணிந்திருந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விசித்திரமான ஆடையும் மக்களைப் பெரிதும் அவர்பால் ஈர்த்தன.

தோளிலிருந்து குதிகால் வரை தொளதொளவென்று தொங்கும் காவி அங்கி ஒன்றை அணிந்திருப்பார்; இடையில் வெள்ளைத் துணியொன்றை வார்போல் கட்டியிருப்பார்; தலையில் வெள்ளைநிறத் துணியைத் தலைப்பாகையாகச் சுற்றியிருப்பார்; ஒவ்வொரு காலிலும் வெவ்வேறு நிறத்தில் செருப்புக்கள் போட்டிருப்பார்; சில சமயங்களில் மனித எலும்புகளை மாலையாகத் தொடுத்து, கழுத்தில் அணிந்திருப்பார்; அவரது நடை, உடை பாவனையும், போதனைகளுமே இந்து முஸ்லீம் ஒற்றுமையை வலியுறுத்தும் வண்ணம் அமைவன.

இறைவன் நாமத்தை எப்போதும் ஓதிக்கொண்டிருந்த நானக் பள்ளிப் பருவத்திலேயே பளிச்சிடும் சிந்தனைகளை வெளியிட்டார். ஒருசமயம் பள்ளியில் கணித ஆசிரியரிடம், 'எனக்குக் கணிதம் கற்பிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டா?' என்ற வினாவை எழுப்பி ஆசிரியரை வியப்பில் ஆழ்த்தியதோடு, மாணவர்களையும் வியப்படையச் செய்தார். அதற்கு விடையாகப் பாடல் ஒன்றினைப் பாடினார்.

"மண்ணுலக ஆசையெல்லாம் எரித்துச் சாம்பலாக்கி
அதைக் கரைத்து மைசெய்து கொள்ளுங்கள்;
எழுதத் தேவைப்படும் தூயகாகிதமாக உங்கள் இதயத்தை—
மனத்தை வைத்துக் கொள்ளுங்கள்; உங்களது
தெய்வீக அன்பு எழுதுகோலாகட்டும்!
உங்கள் உள்ளம் எழுத்தாளனாக விளங்கட்டும்!
உண்மை வழியில் சென்று ஆசானாகி எழுதுங்கள்!
அவனுடைய புகழை எழுதுங்கள்! வரம்புக்கும்,
அளவுக்கும், முடிவுக்கும் உட்பட்டவர் அல்லர்
இறைவன் என்பதை எழுதுங்கள்!
இந்தக் கணக்கை எழுதக் கற்றுக் கொள்ளுங்கள்!"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற பொருள்படும் பாடலைப் பாடி அனைவரையும் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தினார்.

இளமையிலேயே இப்படி முகிழ்த்த ஆன்மீகப் பாடல்கள் நானக் வளர வளர அதன் ஆழமும் அர்த்தமும் அனைத்துத் தரத்து மக்களையும் ஈர்த்து இசைவித்தன. இந்தப் பாடலே பள்ளிப் படிப்புக்கும் முற்றுப்புள்ளி இட்டது.

இந்துமத நெறிப்படி நானக்கிற்கு பூணூல் அணியும் விழாவிற்கு ஏற்பாடு செய்தனர் பெற்றோர். அதனைக் கண்டுகளிக்க எண்ணிறந்த உற்றார் உறவினர்களும் குழுமியிருந்தனர். புரோகிதர் நானக் கழுத்தில் பூணூலை அணிய முற்பட்டார். அப்போது நானக், 'புரோகிதரே! இந்த நூலை எதற்காக என் கழுத்தில் போட விரும்புகிறீர்கள்? இதனால் ஏற்படும் நன்மைகள் யாவை?' என்ற கேள்வியைத் துணிவோடும் தெளிவோடும் அனைவரும் வியக்கும் வண்ணம் கேட்டார்.

''பூணூல் போட்டுக் கொண்டால்தான் ஒருவன் இம்மையிலும் மறுமையிலும் இன்பமாக வாழமுடியும்'' என்றார் புரோகிதர்.

''நீங்கள் சொல்வது எனக்கு ஒன்றும் புரியவில்லை; யாரோ ஒரு பிராமணர் நூற்று இந்த நூலைத் தந்துள்ளார்; அதனைக் கழுத்தில் போட்டால் எந்தப் பயனும் கிட்டுமென்று எனக்குத் தோன்றவில்லை; இந்தப் பூணூல் அறுந்துவிடும்; இதிலே அழுக்குப்படியும்; எரிந்து போகும்; தொலைந்து போகும்; மறுமையில் நம்முடன் தொடராது; அறுந்துபோகாத, அழுக்குப் படியாத பூணூலைக் கொடுங்கள்''— என்றார் நானக்.

'எத்தகைய பூணுல் தேவை?' எனக் கோபமாகக் கேட்டார் புரோகிதர். ''இரக்கம் என்னும் பஞ்சில், திருப்தி என்னும் நூலை நெய்து, உண்மையைச் சரடாகத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திரித்து பிரமச்சரியம் என்பதை முடிச்சாகக் கொண்டு பூணுல் செய்யவேண்டும்'' — என்றார் நானக். அவரது பதில் புரோகிதரை மட்டுமன்றி, பெற்றோர், உற்றார், உறவினர் மற்றும் எல்லோரையும் சிந்திக்கத் தூண்டியது. நானக்கின் இந்தச் சிந்தனை,

''அந்தணர் என்போர் அறவோர்; மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்''

என்ற வள்ளுவர் வாக்கினையும்,

நெற்றியில் நீரும் மார்பில் நீண்ட பூணுலும்
பெற்று உலகில் எவரும் பிறப்பதில்லை அப்பா!
பிறப்பினால் எவர்க்கும் பெருமை வாராதப்பா;
சிறப்பு வேண்டுமெனில் நல்லசெய்கை வேண்டுமப்பா!!

என்ற கவிமணியின் கருத்தினையும் நினைவூட்டுகிறது.

மற்றொரு சமயம் நானக் செயல்கள் பைத்தியக்காரத் தனமாக இருக்கிறது எனக் கருதிய பெற்றோர் மருத்துவரை அழைத்து வந்து நானக்கினைக் குணப் படுத்துமாறு வேண்டினர்.

மருத்துவர் மருந்து கொடுக்கத் துணிந்தபோது நானக்,

''மனிதன் பிழையாக வாழ்வதால்தான் பிணிக்கு ஆளாகிறான்; உலகைப் பற்றித் தவறான கருத்துடன் வாழ்வதும் அதற்குக் காரணமாகும்'' என்றெல்லாம் பல தத்துவப் பாடல்களை ஞானமிகுதியால் பாடினார். அதைக் கேட்டு மருத்துவர் மருந்தினைத் தவிர்த்து நானக் அவர்களின் மகத்தான சிந்தனைகளைப் போற்றினார். பெற்றோரும் மகனின் மாண்பை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தனர்.

''உள்ளமும் மனமும் பரிசுத்தமாய் இருந்தால் உடலும் சொக்கத் தங்கத்துக்கு நிகராகச் சுத்தமாயும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆரோக்கியமாயும் இருக்கும்''— என்கிறார் குருநானக். இஃது,

''புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்''

என்ற குறட்கருத்தோடு ஒப்பிட்டு உணர்ந்து மகிழத் தக்கது.

பெற்றோரின் விருப்பத்தை நிறைவேற்ற நானக் தமது 14-வது வயதில் சுலகான் என்ற பெண்மணியை மணந்தார். அவருக்கு ஸ்ரீசந்த், லக்ஷ்மிதாஸ் என்ற இரு புதல்வர்கள் பிறந்தனர்.

நானக்கின் முதல் ஆண்குழந்தையின் 13-வது நாள் அன்று புண்ணியாவாசனம் கொண்டாட வேண்டுமென்று பெற்றோரும் உற்றார் உறவினரும் கூடினர்; அன்று குழந்தை பிறந்த தீட்டைப் போக்கும் பொருட்டு வீட்டைக் கழுவிச் சுத்தம் செய்வதாகக் கூறினார். அப்போது நானக் பாடினார்:

''பிறப்பிலும் இறப்பிலும் அசுத்தமுண்டு எனக் கருதுவோமாயின் அனைத்திலுமே அசுத்தமுண்டு என்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும். அசுத்தம் நுழையாத அடுக்களையே கிடையாது! நானக்கே இந்த முறையில் அசுத்தத்தை அகற்ற முடியாது; தெய்வீக அறிவின் மூலமே அதை அகற்ற முடியும்.

''பேராசையால் இதயம் அசுத்தமாகி, பொய் கூறுவதால் நா அசுத்தமாகிறது; பிறன்மனைவியை நோக்குவதாலும் அழகை மாந்துவதாலும், பிறருடைய செல்வத்தை ஆவலுடன் கவனிப்பதாலும் கண்கள் அசுத்தமடைகின்றன. அவதூறுகளை உற்றுக் கேட்பதால் காதுகளில் அசுத்தம் படிகிறது. நானக்! இவை அசுத்தம் அடைந்ததும் மனித ஆத்மாவை நரகத்துக்கு அழைத்துச் செல்பவை. மற்ற அசுத்தங்கள் மூட நம்பிக்கையின்பாற் பட்டவை; பிறப்பும் இறப்பும் இயல்பானவை; நாம் வருவதும் போவதும் இறைவன் திருவுள்ளத்தைப் பொறுத்தது; உண்ணவும் பருகவும் ஆண்டவன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தருபவை அசுத்தமானவை ஆகா. நானக்! கடவுளை அறிந்த பக்தர்களுக்கு அசுத்தம் என்பதே இல்லை."

''சத்தியம் உயர்ந்தது. அதனிலும் உயர்ந்தது சத்திய மாக நடப்பது'' என்ற கோட்பாட்டைக் கூறிய குருநானக் தேவர் அதன்படி வாழ்வில் நடந்து காட்டியவர்.

மதம் என்பதற்கு குருநானக் அளிக்கும் விளக்கம் பன்முறைப் படித்துச் சிந்திக்கத் தக்கது.

அசுத்தங்களுக்கு மத்தியிலே சுத்தமாக வாழப்பழகிக் கொள்வதே மதமாகும். மதம் என்பது சொற்களுக்குள் இல்லை. எவன் மனிதர்கள் அனைவரையும் சமத்துவமாக நேசிக்கிறானோ அவன் வாழ்வதே மதவாழ்வு.''

''அச்சம் உடையார்க்கு அரணில்லை''

''அச்சமே கீழ்களது ஆசாரம்''

என்ற வள்ளுவர் வாக்கை நினைவூட்டும் வகையில் அச்சம் பற்றிக் கூறுகிறார் குருநானக்.

' அச்சம் ஒருவனைக் கோழையாக்கி விடும்; கோழையால் நல்ல காரியம் எதையும் செய்ய முடியாது; நல்ல காரியம் செய்யும் தைரிய மில்லாத மக்களைக் கொண்ட நாடு எப்படி ஒரு நல்ல நாடாக விளங்கமுடியும்? ஆகவே நாட்டு மக்கள் நல்லவர்களாக விளங்க வேண்டுமாயின் முதலில் அச்சம் அவர்களிடமிருந்து அகல வேண்டும்."

அதனால்தான் மகாகவி சுப்பிரமணியபாரதியார் தமது புதிய ஆத்திசூடியில் 'அச்சம் தவிர்' என்றும்,

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லை
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே"

என்றும் அறைகூவல் விடுத்தார்.

'நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன் இறைவன்' என்பார் திருநாவுக்கரசர். தூய்மை வாழ்க்கையே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தூயவனான இறைவனிடத்தில் இட்டுச் செல்லும் என்பார் அண்ணல் காந்தியடிகள். குருநானக் தேவரும் இதனை வலியுறுத்துகிறார். ''இறைவனைக் காண்பதற்குக் கடுமையான தவ வாழ்க்கை மேற்கொள்ளத் தேவை இல்லை. உள்ளமும் உடலும் பரிசுத்தமாய் இருந்தால் இறைவனை எளிதில் காணலாம்.''

வாழ்க்கையை வளமும் நலமும் பெறச் செய்வதற்கு ஐவகை நெறிகளைக் காட்டுகிறார் குருநானக் தேவர்.

(1) இறைவன் திருநாமத்தை இசையோடு பாடித் துதிப்பது.

(2) இரக்கம் கொண்டு அனைவருக்கும் உதவுவது.

(3) அதிகாலையில் எழுந்து நீராடி உடலைத் தூய்மையாக வைத்துக் கொள்வது.

(4) இறைவனுக்கும் மனித குலத்துக்கும் தொண்டு செய்வது.

(5) இறைவன் நினைவோடு எப்போதும் இருப்பது.

''குரு என்றும் பீர் என்றும் கூறிக் கொண்டு இரந்துண்டு வாழ்பவர்களின் பாதங்களை வணங்காதீர்கள்.

ஏ நானக்! சொந்த உழைப்பின் மூலம் கிடைப்பதைக் கொண்டு, யார் பகுத்துண்டு வாழ்கிறார்களோ அவர்களே உண்மைநெறியைக் கண்டவர்கள் ஆவர்!'' என்ற குரு நானக் தேவரின் சிந்தனை,

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''

என்ற குறட்பாக் கருத்தை நினைவூட்டுகிறது.

அஞ்சாமை, இறைபக்தி, கடமை, ஊக்கம், குருபத்தி— இவை ஐந்தும் சீக்கிய சமயம் என்னும் மணி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மண்டபத்தைத் தாங்கும் பலம் வாய்ந்த தூண்கள். இன்ப உணர்வையும், சுவை உணர்வையும் விறகாகவும், ஆசைகளை நெய்யாகவும் கொண்டு, கோபத்தையும், காமத்தையும் நெருப்பிலிட்டு எரிக்க வேண்டும். இவற்றை எரிப்பதே யக்ஞம் எனப்படும். இந்த யக்ஞம் உறுதியாக நற்பயனை நல்கும் என்கிறார் குருநானக் தேவர்.

இறைவன் திருநாமத்தைப் பாடுவதொன்றினையே தன் முழு மூச்சாகக் கொண்டு பல புரட்சிச் சிந்தனைகளை— நடைமுறை வாழ்வுக்கேற்ற நற்கருத்துக்களை— மனிதனை மாண்புடையவனாகச் செய்வதற்கான இனிய நற் பாடல்களை— இந்து— முஸ்லீம் ஒற்றுமைக்கு வித்திடும் பொதுமைச் செய்திகளை எடுத்துக்கூறி மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர் குருநானக் தேவர்!

நிலத்தை உழுவதை வெறுத்து, மனத்தை உழுவதை விரும்பிய மகான் குருநானக் தேவர், என்றும் அழியாத, எம்மொழியினரும், நாட்டினரும், மதத்தினரும் ஏற்றிப் போற்றும் உன்னத அருள் மொழிகளை வழங்கியுள்ளார். அவற்றைப் பின்பற்றி வளர்ந்து வரும் சீக்கியர்களும் இறைவுணர்வோடு வீரமும், தியாகமும் மிக்கவராய் விளங்கி வருகின்றனர். சீக்கியமதம் உருவாவதற்கு வித்தாகவும் வேராகவும் விளங்கியவர் குருநானக் தேவர். ஆதிகிரந்தம் பாடி அனைவரது உள்ளத்தையும் பரவசமடையச் செய்த மகான் குருநானக் தேவர். காலம் கடந்தும் அவரது போதனைகள் ஞாலம் போற்றும் வகையில் உள்ளன. பக்தியும், பாசமும்; வீரமும் தியாகமும்; துடிப்பும் வெடிப்பும்; வேகமும் விவேகமும் விரவியுள்ள பொதுமைச் சிந்தனைகளை வெளியிட்டவர் குருநானக் தேவர்.

மனத்தை உழுத மகான்— பிஞ்சிலே பழுத்த பெம்மான்— குருநானக் தேவரின் மகத்தான சிந்தனைகளை நாளும் கற்று நானிலம் போற்ற வாழ்வோமாக!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4

அஞ்சல் ! அஞ்சல் !

இந்தச் சொல்லைத் திரும்பத் திரும்பக் கேட்ட உடனே வீட்டினுள் விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவன் வேகமாக ஓடிவந்து அந்தத் தகவல் கடிதத்தை வாங்க முற்படுகிறான். அஞ்சல் அலுவலகம், அஞ்சல் பெட்டி, அஞ்சல்தலை, உள்நாட்டு அஞ்சல், வெளிநாட்டு அஞ்சல் முதலான சொற்கள் இன்றைய வழக்கில் கையாளப்படுகின்றன. இன்னும் சற்று விரிந்து நோக்கினால், சில நொடிகளில் டெல்லி அஞ்சல் தொடரும் என்ற வானொலி, தொலைக்காட்சியின் அறிவிப்பும் நம் செவியைத் தூண்டும் கேட்பதற்காக!

'அஞ்சல், அஞ்சல்'— என்ற இந்தச் சொற்கள் தபால் கடிதத்தையும், அது கிடைக்கும் இடமான தபால் அலுவலகத்தையும் குறிக்கிறது. மேலும் வேறு ஓரிடத்தில் ஒலி, ஒளிபரப்பாவதை அதே நேரத்தில் இங்குள்ள வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் மின்னணுச் சாதனங்களின் வாயிலாகப் பெற்று உடனடியாக ஒலி, ஒளிபரப்பும் முறைக்கும் (Relay) அஞ்சல் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம்.

இந்த 'அஞ்சல்' என்ற சொல்லுக்கு பயப்படல், கலங்கல், தபால் முதலான பொருள்களைக் கூறுகிறது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அகராதி. இந்தச் சொல்லின் சிறப்பு என்னவெனில் உடன்பாட்டையும் எதிர்மறையையும் குறிப்பதுதான். அஞ்சல் என்பது பயப்படுதல், கலங்குதல் என்ற உடன்பாட்டுத் தொழிற்பெயராய் பயன்படுகிறது. அதே சொல் பயப்படாதே! கலங்காதே! என்னும் பொருளில் ஏவல் வினைமுற்றாகவும் இலக்கியங்களில் எடுத்தாளப் படுகின்றது.

அறிவியல் முன்னேற்றத்தின் விளைவால் தகவல் பரிமாற்றத்தின் நிலைக்களன்களாகத் திகழும் தகவல் அலுவலகமான தபால் அலுவலகத்திற்கும் பெயராகி 'அஞ்சலகம்' என அழைக்கப்படுகிறது. அதோடு ஆங்குக் கிடைக்கும் தபால்களுக்கும் அஞ்சல் என்றுதான் பெயர். மின்அணுயுகமான (Electronic World) இந்தக் காலத்தில் Relay என்ற ஆங்கிலச் சொல்லுக்கும் 'அஞ்சல்' என்ற தமிழ்ப்பதமே பயன்படுத்தப்படுகிறது.

இப்படிப் பொருள் பொதிந்த 'அஞ்சல்' எனுஞ்சொல் பயப்படாதே என்னும் பொருளைத் தரும் வண்ணம் இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. எங்கே? எப்போது? யாரால்? யார் மீது பாடப்பட்டது? போன்ற வினாக்கள் உடனடியாக நம் சிந்தையில் எழுகின்றன. அவற்றிற்கு விடையளிக்க முன்வரின் முகிழ்ப்பது ஒரு நிகழ்ச்சிதான்.

ஒருசமயம் பார்வதியும் பரமசிவனும் கைலாய மலையில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது கைலாய மலையில் சற்று நடுக்கம் ஏற்பட்டது. பரமசிவன் அருகிலிருந்த பார்வதி தேவியோ நொடிப் பொழுதில் துணுக்குற்று நடுக்குற்றார். அதற்கான காரணத்தையும் விரைந்து கேட்டார்.

அதற்கு பரமசிவன், "தேவி! இருபது கைகளையும், பத்துத் தலைகளையும் உடைய பதுமுகன் இராவணன் இந்தக் கைலாய மலையையே தன் கைகளால் எடுக்க

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முயல்கிறான் பரந்து, விரிந்து பனியடர்ந்து, உயர்ந்து விளங்கும் இந்த மிகப் பெரிய மலையை எடுக்க முடியாமல் திணறுகிறான். அவனது இடையறாத முயற்சியினால் மலையில் சற்று அசைவு ஏற்பட்டது. அதற்காகப் பயப்படாதே! இதோ பார் இந்த நடுக்கம் நின்று விடும்,'' என்று கூறிவிட்டுத் தன் காலின் பஞ்சு போன்ற மென்மை யான பெருவிரலால் மலையைக் கீழ்நோக்கி அழுத்தினார். அதுவும் கீழ்நோக்கி அழுந்திப் பதுமுகனின் கையை நசுக்கிச் சிதைத்துவிட்டது. ''மலையில் நடுக்கம் இனிமேல் நிகழாது. பயப்படாதே! பயப்படாதே!'' என்று கூறினார்.

இந்த நிகழ்ச்சியைச் சைவ நான்மணிகளில் ஒருவரான— உழவாரப்படை வேந்தரான திருநாவுக்கரசர், திருவன்னியூர் சிவபெருமானைப் பாடும் போது கூறியுள்ளார்.

வஞ்ச அரக்கன் கரமுமாம் சிரத்தொடும்
அஞ்சும் அஞ்சும் ஓர்ஆறும் நான்கும்
பஞ்சின் மெல்விரலால் அடர்த்து ஆயிழை!
அஞ்சல்! அஞ்சல்! என்றார் அன்னியூரரே

சிறந்த சிவபக்தனான இராவணன் இருபது கைகளால் மிகப் பெரிய மேரு மலையை எடுக்க முயன்றதே தவறு. அந்த எண்ணம் எழுந்தது எதனால்? யானைகளை எதிர்த்துப் போரிட்ட வலிமைமிக்க மார்பினையும், ஆற்றல் மிகுந்த தோள்களையும், நினைத்ததைச் செய்து முடிக்கும் செயல் திறன்மிக்க இருபது கைகளையும் பெற்றிருக்கிறோம் என்ற அகந்தையினால்தான்! கற்றறிந்த புலமையாலும், செய்த கடுந்தவத்தாலும் பெற்ற சிவசக்தியின் ஆற்றலாலும் எதையும் சாதிக்க முடியும் என்ற ஆணவத்தால்தான்!

பல்வகை ஆற்றல்களைப் பெற்றாலும் அதனைத் தவறான வழிகளில் பயன்படுத்த முனைதல் கூடாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆற்றல்களை நல்வழியில் செலுத்துதல் வேண்டும். ஆணவம் எள்ளளவும் தலைக்காட்டக் கூடாது. இதனை இராவணனுக்கு உணர்த்தவே சிவபெருமான் தனது பஞ்சின் மெல்விரலால் நசுக்கினான் என்கிறார் நாவுக் கரசர்! பஞ்சைச் காட்டிலும் மென்மையான விரலால் அழுத்தினாலும் அது இராவணனின் இருபது கைகளும் நசுங்கும்படிச் செய்தது என்பதை ஊகித்து உணரலாம்.

இப்படித் திருநாவுக்கரசர் 'அஞ்சல்' என்ற சொல்லாட்சியை மிக அற்புதமாகப் பயன்படுத்தி யுள்ளதற்கு அடிப்படைக் காரணம் உண்டு. எதைக் கண்டாலும் அஞ்சி அஞ்சிச் சாகும் அற்பத்தனம் ஒழிய வேண்டும் என்பதை மிகுதியாக வலியுறுத்தியவர் நாவரசர் ''நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்'' என மன்னனையே எதிர்த்து உரிமைக்குரல் கொடுத்தவர் அவர்!

கொதிக்கும் சுண்ணாம்புக் காளவாயில் அமரச் செய்தாலும், கல்லில் கட்டிக் கடலில் போட்டாலும், மதங்கொண்ட யானை கொண்டு மிதிக்கச் செய்தாலும் அஞ்சா நெஞ்சினராய்த் திகழ்ந்தவர் நாவுக்கரசர்!

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சைவக்குரவர் நால்வரிலும் நாவுக் கரசர்தான் உழவாரப்படை ஏந்தித் தொண்டு நெறியை மேற்கொண்டார். சற்புத்திர மார்க்கத்தில் இறைவனை அடைந்தவர் திருஞான சம்பந்தர்; சகமார்க்கத்தில் இறைவன் அருள்பெற்றவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள்; ஞானமார்க்கத்தில் இறைவனை அடைந்தவர் மாணிக்கவாசகர். தாசமார்க்கம்— தொண்டு நெறியில் இறைவனை அடைய முனைந்தவர் திருநாவுக்கரசர்.

தொண்டாற்றத் துணிகிறவர்களுக்கு மனவலிமையும், உடல் வலிமையும், ஊக்கமும் வேண்டும். ஆன்மீகத் தொண்டும், சமுதாயத் தொண்டும் செய்கிறவர்கள் பற்பல தடைகளைச் சந்திக்க நேரிடலாம். அவற்றைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண்டு மனந்தளர்ந்து மாற்றம் பெறாது அஞ்சா நெஞ்சத்தோடு தொடர்ந்து தொண்டினைச் செய்தல் வேண்டும். அந்தத் தொண்டு நெறியே தூயநெறி! என்பதை உழவாரப்படை வேந்தர் திருநாவுக்கரசின் வரலாறு தெளிவுறுத்தும்.

'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்பதை எல்லோரும் அறியச் செய்த பெருமை நாவரசருக்குத் தானுண்டு. சொல்லளவில் மட்டுமன்றிச் செயலளவிலும் வாழ்ந்துகாட்டியவர் அவர்! உழவாரப்படை ஏந்தி, ஊர்களெல்லாம் சுற்றி வந்து திருத்தலங்களைத் தூய்மை செய்து பிறரையும் செய்யத் தூண்டியவர் அவர்! தொண்டாற்றும்போது புகழுக்கும், பரிசுக்கும் அடிமையாகக் கூடாது. அவ்வாறாயின் தொண்டின் பெருமை கெடும் என்பதை உணர்த்தியவர் அவர். ஆம்! ஓட்டையும், செம்பொன்னையும் ஒன்றாகக் கருதியவர் அல்லவா அவர்!

நாவுக்கரசர் இளமை முதற்கொண்டே அஞ்சா நெஞ்சினராய்த் திகழ்ந்தார்; கல்வியில் சிறந்து பக்தியில் உயர்ந்து விளங்கினார்; அறிவில் மிகுந்து அன்பில் சிறந்தார்; பண்பில் நிறைந்து தொண்டில் ஒளிர்ந்தார். அவரது இயற்பெயர் மருணீக்கியார். ஆம்! இருள் நீக்கும் ஒளிக் கதிர்களை உடைய கதிரவனைப் போல் இளமை முதற் கொண்டே விளங்கினார்.

திலகவதியார் பிறந்து சிலமுறை ஆண்டகன்ற தன்பின்
அலகில் கலைத்துறை தழைப்ப அருந்தவத்தோர் நெறிவாழ
உலகில் வரும்இருள் நீக்கி ஒளிவிளங்கு கதிர்போல்பின்
மலரு மருணீக்கியார் வந்தவ தாரஞ்செய்தார்

என்ற சேக்கிழாரின் பெரியபுராணப் பாடல் இதனைத் தெளிவுறுத்தும்.

மருணீக்கியார் தமக்கை திலகவதியின் உதவியால் சைவ சமய நூல்களைக் கற்று உறைப்புடைய சைவராய்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிவத்தொண்டாற்றினார். அப்போது சமணர்களின் தூண்டுதலால் சைவ சமயத் தொண்டினின்று நீங்கி சமணம் சார்ந்தார். அதற்குக் காரணம் கேட்டபோது,

காத்தாள்பவர் காவல் இழந்தமையால் யான்
தீத்திறத்தோர் பக்கம் சேர்ந்தேன்

—எனத் தெளிவுடன் கூறியுள்ளார் மருணீக்கியார். யாருக்கும் பயந்து பேசா அஞ்சா நெஞ்சுடையவர். மீண்டும் தமக்கை திலகவதியின் வேண்டுதலால் சமணம் நீங்கிச் சைவம் சேர்ந்து எண்ணிறந்த பாடல்களை இயற்றினார். நினைந்து நினைந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து பக்திப் பரவசமூட்டும் பக்திப் பாடல்களை நெஞ்சுருகப் பாடினார்; அவை எண்ணிறந்தோரை இன்றும் ஈர்த்து இசைவிக்கின்றன.

மருணீக்கியார் சமண சமயத்தை விட்டுச் சைவம் சார்ந்ததை அறிந்த அவர் காலத்திய சமண மன்னன் காவலர்களை அனுப்பி மருணீக்கியாரை அழைத்து வருமாறு பணித்தான். அவர்களும் உடன் வந்து மருணீக்கியாரிடம் அரசனின் ஆணை இதுவென உரைக்க, அதற்கு அவர், 'யான் ஒன்றும் அரசனின் அடிமை அல்ல. அரச கட்டளையே ஆனாலும் அஞ்ச மாட்டேன். அரசாட்சி புரிவதால் என்னையும் அடிமை கொள்ள நினைத்தால் முடியாது. யான் வாழும் இந்நாட்டு மன்னனுடைய ஆட்சியின் கீழ் வாழ்ந்தாலும் அவனுக்கு மட்டும் பணியாற்றும் அடிமையல்ல. அனைவருக்கும் ஏன் அனைத்து நாட்டினர்க்கும் பொதுவானவன். ஒருவேளை அரசன் என்னைத் தண்டிக்க முற்பட்டால் அதற்கும் அஞ்ச மாட்டேன். எமனுக்கே அஞ்சாதவன் யான்? எப்போதும் மகிழ்வோடிருக்கும் மனநிறை உடையவன். எனவே எனது வாழ்வில் துன்பமில்லை. என்றும் இன்பம்தான் நின்று நிலவும், ஏனென்றால் யாருக்கும் அடிமையல்லாத இறைவ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

னுக்குத் தொண்டாற்றும் மீளாத அடிமை பூண்டு விட்டேன்' என்று துணிவோடு கூறியுள்ளார்.

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான
சங்கரன் நற்சங்க வெண்குழையோர் காதில்
கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச் சேவடி இணையே குறுகினோமே

இப்படி மருணீக்கியார் மறுமொழி கூறி அரசனின் ஆணையை மீறியதற்காக அரசனால் பல்வேறு தண்டனைகளுக்கு ஆட்படுத்தப்பட்டார். அதற்கெல்லாம் அஞ்சாமல் புன்முறுவலோடு அவற்றை ஏற்றார். இறுதியில் அரசனும் மருணீக்கியாரின் பக்தரானார். அந்த அளவுக்கு மாற்றாரையும் மனங்கொண்டு தன்பாற் சேரவைக்கும் அருள் உள்ளமும் ஆளுமைத் திறமும் கொண்டவர் திருநாவுக்கரசர்.

மனத்திண்மையும் நுண்மையும் சொல்வன்மையும் கொண்டு விளங்கியதால்தான் மருணீக்கியாரை சைவச் சிங்கம் என்று பாராட்டத் தூண்டுகிறது. அதனை உணர்த்தும் பெயரான 'தமிழாளியார்' என்பதை சேக்கிழார் நாவுக்கரசுக்குச் சூட்டி மகிழ்ந்தார். ஆளி என்ற சொல்லுக்கு 'ஆள்வோன்', 'சிங்கம்', 'ஒழுங்கு', 'சிங்கராசி' முதலான பொருள்களைக் கூறுகிறது அகராதி. எனவே தமிழை ஆளுகிறவர் என்றும், தமிழ் உள்ளங்களை ஆளுகிறவர் என்றும் 'தமிழாளியார்' என்னும் திருப்பெயர் உணர்த்துகின்றது. அதுமட்டுமன்று. கொடுமையையும் குற்றத்தையும் கண்டு சீறும் சீற்றம் சிங்கத்தின் கோபத்தைக் காட்டிலும் மிகுதியானது; அதனை எதிர்க்கும் ஊக்கமும் உத்வேகமும் சிங்கத்தினும் சிறந்து விளங்கும்— என்ற நுட்பத்தையும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உய்த்துணரச் செய்கிறது சேக்கிழார் தந்த அத் திருப்பெயராம் 'தமிழாளியார்' என்னும் நற்பெயர்.

அப்புறம் புறள்கின்ற நீளிடை அங்கம் எங்கும் அரைந்திடச்
செப்பருங் கயிலைச் சிலமபடிச் சிந்தை சென்றுறும் ஆதலால்
மெய்ப்புறத்தில் உறுப்பழிந்த பின்செல்ல உந்துமுயற்சியும்
தப்புறச் செயலின்றி அங்நெறி தங்கினார் தமிழ் ஆளியார்

சேக்கிழார் மருணீக்கியாருக்கு 'தமிழாளியார்' என்னும் இத்திருப்பெயரை வழங்கும் இடம், சூழல் அருமையிலும் அருமை. அதனை அனைவரும் அறிந்து மகிழ்வதே அவருக்குப் பெருமை.

ஆண்டுகள் பல கடந்து வயது முதிர்ந்தபின் நாவுக்கரசர் இறைவன் திருவடியை அடைவதற்காகக் கைலாய மலைக்குச் செல்கிறார். அப்போது இறைவனின் திருநாமத்தை உச்சரித்துக்கொண்டே போகிறார். கல்லும் முள்ளும் அடர்ந்த காடுகளையும், மலைப் பகுதிகளையும் கடந்து மேலே சென்றபோது பனிக்கட்டிப் பாறையில் நடக்க வேண்டியதாயிற்று. அதில் நடப்பது அவ்வளவு எளிதா என்ன? மனந்தளரவில்லை. முதுமை வாட்டினாலும், நடக்கும் வலிமை குன்றினாலும் முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்தார். கைலாய மலையைக் கடக்கும் வலிமை காலுக்குக் குறைந்து விட்டதால் தவழ்ந்தும், உருண்டு உருண்டும் சென்றார். பின்னர் அதுவும் இயலாததாயிற்று. இருகால்களும் அசைக்க முடியாமல் ஆணியறைந்தாற்போல் அசைவற்றுக் கிடந்தன; சோர்ந்த கைகளும் அந்நிலையை அடைந்தன உடலையும் கூடத் தனியாக அசைக்க முடியவில்லை. அந்த நிலையிலும், கைலாய மலையை எட்டிக் கயிலாய நாதனைக் கண்டு களிக்க வேண்டும் என்ற அவா குன்றவில்லை. உடலால், கடக்க முடியாத மலையை உள்ளத்தால் கடக்கத் தலைப்பட்டார். உள்ளம் இறைவனை நாடிச் சென்றதும், இறைவன் தானே தேடிவந்து, நாவுக்கரசருக்குக் காட்சி கொடுத்தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வாறு எடுத்த செயலை அடுத்து முடிக்கும் ஊக்கமும் உழைப்பும் கொண்டவர் நாவரசர்; எண்ணியதை எண்ணியாங்குச் செய்து முடிக்கும் திறன் மிக்கவர் அவர்; அஞ்சா நெஞ்சமும் அருள் உள்ளமும் கொண்டு விளங்குபவர் என்பதை நன்கு உணர்ந்துதான் தேர்ந்து தெளிந்து 'தமிழாளியார்' என்னும் பெயரைச் சூட்டினார் சேக்கிழார்.

மருணீக்கியாருக்கு இறைவனால் அளிக்கப்பட்ட பெயர் 'நாவுக்கரசு.' ஞானசம்பந்தரால் வழங்கப்பட்ட பெயர் 'அப்பர்.' சேக்கிழாரால் சூட்டப்பட்ட பெயர் 'தமிழாளியார்.' 'அஞ்சல்' என்ற சொல்லை மிகுதியாகப் பயன்படுத்திய அஞ்சா நெஞ்சுடை அருள்வேந்தர்— தமிழ்வேந்தர்— சொல்லின் நாதர் திருநாவுக்கரசுக்கு தமிழாளியார் என்னும் பொருளுடைப் பெயர் எவ்வளவு அருமையான சூழ்நிலையில் சூட்டப்பட்டது என்பதை அறிந்து எல்லையில்லாத ஆனந்தம் எய்தலாம். மருணீக்கியார் என்னும் இயற்பெயர் தவிர இருபதுக்கும் மேற்பட்ட பெயர்கள் அவர்தம் தொண்டுக்கும் அருளுக்கும் ஏற்ப வழங்கப்பட்டிருப்பதைத் தேவாரப் பாடல்களும், பெரிய புராணப் பாடல்களும் விளக்கிக் காட்டுகின்றன.

சைவ நான்மணிகளில் நீண்ட காலம் வாழ்ந்து பெரும் பணியாற்றியவர் திருநாவுக்கரசர். அறச் சாலைகள் அமைத்தார்; தண்ணீர்ப் பந்தல்கள் வைத்தார்; சோலைகள் வளர்த்தார்; குளங்கள் எடுத்தார்; எண்ணிறந்தோர்க்கு உணவளித்து உயிரூட்டினார்; விருந்தளித்துச் சுற்றம் தழுவினார்; நாவலர்களைப் போற்றினார்; இறையருளைப் போதித்தார்; சமுதாய நற்பணி புரியப் பலரையும் தூண்டினார். அதற்கு எடுத்துக்காட்டாக விளங்கவே உழவாரப் படை ஏந்தி அதில் வேந்தராகவும் திகழ்ந்தார்.

இறைவழிபாடு செய்பவர்கள் மனத்தில் குற்ற மற்றிருக்க வேண்டும்; அல்லவை நீக்கி நல்லதைச் செய்ய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேண்டும்; பொறாமை போக்கிப் பொறுமை பேண வேண்டும்; சோம்பல் நீக்கிச் சுறுசுறுப்புக் கொள்ள வேண்டும்; அறியாமை அகற்றி அறிவொளி பெற வேண்டும்; இரக்கங்கொண்டு ஈத்துவக்கும் இன்பம் அடையவேண்டும்; நெஞ்சு நெக்குருகிப் பாடவேண்டும்; இறைவனுக்கு நாளும் தொண்டு செய்ய வேண்டும். அவ்வாறு இறையருளை என்றும் நினைப்பவர் மனத்தைக் கோயிலாகக் கொண்டு குடியேறும் குணமுடையவன் இறைவன் என்கிறார் நாவுக்கரசர். ''நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டவன்.''

பொதுவாகப் பக்தியுடையோர் கங்கை, யமுனை, காவிரி முதலான புண்ணியத் தீர்த்தங்களில் நீராட வேண்டும்; சிறப்பான அமாவாசை நாட்களில் கடலில் நீராடவேண்டும் என்று ஊர் ஊராகச் செல்வர். அவ்வாறு செல்வதில் தவறில்லை. ஆனால் இறைவனை எப்பொழுதும் நினைக்கவேண்டும். இறைவனை எண்ணி வழிபடாமல் எத்துணைப் புண்ணியத் துறைகளில் நீராடினாலும் பயனில்லை. பணமுள்ளோர் பல தலங்களுக்குச் செல்லமுடியும். பணமற்றோர் செல்லமுடியாதே. இறைவனை எண்ணாமல், ஒப்புக்காகச் செல்வோரை வன்மையாகக் கண்டிக்கிறார் நாவுக்கரசர்.

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்குமரித் துறை யாடிலென்
ஓங்கு மாகடல் ஓதநீராடி லென்
எங்கும் ஈசன் எனாதவர்க்கு இல்லையே

வேதங்கள் ஓதலாம்; வேள்விகள் செய்யலாம்; நீதி நூல்களை நாளும் படிக்கலாம், பயிற்றுவிக்கலாம்; ஆறு அங்கங்களை ஓதி உணரலாம். இவையனைத்தும் செய்து விட்டு இறைவனை நினைக்காமலிருந்தால் பயனில்லை என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளார் நாவேந்தர் திருநாவுக்கரசு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"வேதம் ஓதிலென் வேள்விகள் செய்யிலென்
நீதி நூல் பலநித்தல் பயிற்றிலென்
ஓதி யங்கம் ஓராறும் உணரிலென்
ஈசனை உள்கு வார்க்கன்றி இலையே"

அதிகாலையில் எழுந்து நீராடலாம். நீதி நூல்களில் கூறியுள்ளபடி வேலைகளைச் செய்யலாம்; தவமிருக்கலாம்; நோன்பு பேணலாம்— இவையெல்லாவற்றையும் செய்துவிட்டு இறைவனை மனத்தில் எண்ணாமலிருந்தால் பயனில்லை. இவ்வாறு என்னென்ன நிலைகளிலெல்லாம் இறைவனை நினைந்து வழிபடவேண்டும் என்பதை விரிவாகப் பாடியுள்ளார் நற்றமிழ் வல்ல நாவுக்கரசர்.

"காலை சென்று கலந்துநீர் மூழ்கிலென்
வேலை தோறும் விதிவழி நிற்கிலென்
ஆலை வேள்வி அடைந்தது வேட்கிலென்
ஏல ஈசனென் பார்க்கன்றி இல்லையே"

"நன்று நோற்கிலென் பட்டினி யாகிலென்
குன்றம் ஏறி இருந்தவஞ் செய்யிலென்
சென்று நீரிற் குளித்துத் திரியிலென்
என்றும் ஈசன்என் பார்க்கன்றி இல்லையே"

"கோடி தீர்த்தங் கலந்து குளித்தவை
ஆடி னாலும் அரனுக் கன்பில்லையேல்
ஓடு நீரினை ஓட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோடு ஒக்குமே"

"மற்று நற்றவஞ் செய்து வருந்திலென்
பொற்றை உற்றெடுத் தானுடல் புக்கிறக்
குற்ற நற்குரை யார்கழற் சேவடி
பற்றி லாதவர்க்குப் பயனில்லையே"

பன்னிரு திருமுறைகளின் ஐந்தாம் திருமுறையில் உள்ள பாவநாசத் திருக்குறுந்தொகையில் நாவுக்கரசர் ஒன்பது பாடல்களில் இறைவனை நினையாமல் செய்யும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செயல்களைப் பட்டியலிட்டுக் காட்டி, அவற்றின் பயனை அடைய வேண்டுமெனில் இறைவனை எப்பொழுதும் நினைந்து செயலைச் செய்ய வேண்டும் என வலியுறுத்து கிறார். சிந்தையும் செயலும் ஒன்றியிருத்தல் வேண்டும் என்பதையும் உணர்த்துகிறார்.

இறைவனை நினைந்து நெக்குருகி வழிபடவேண்டும். அவ்வாறு செய்தால் நம்மைத் துன்பங்கள் நெருங்காது. வினைப் பயனால் நிகழும் செயல்களும் பாதிக்காது. சஞ்சிதவினை, பிராரப்தவினை, ஆகாமியவினை ஆகிய வினைகளாலும் ஒன்றும் செய்ய முடியாது. தொல்லை களைத் தரும் வலிமைமிக்க ஊழ்வினையின் ஆற்றலும் அச்சுறுத்தாது என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளார் தமிழாளியார்.

''அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம்பல வனார்க்கு
எல்லை இல்லாதோர் அடிமையூண் டேனுக்கே''

அருணகிரிநாதரின் கந்தரலங்காரப் பாடல் ஈண்டு நினைவு கூரத்தக்கது.

நாளென்செயும் வினைதான் என்செயும் எனைநாடி வந்த
கோளென்செயும் கொடுங்கூற்று என்செயும் குமரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே!

பக்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடுவதில் வல்லவரான நாவுக்கரசின் தேவாரப் பாடல்கள் பன்னிரு திருமுறைப் பெருந்திரட்டில் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாக விளங்குகின்றன. அவற்றில் பல பாடல்கள் நாவுக்கரசரின் ஆளுமைத் திறத்தையும், ஆண்டவன்பால் கொண்டுள்ள ஈடுபாட்டையும், தொண்டின் மேன்மையையும், சைவத் தத்துவங்களின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிறப்பையும், நன்கு விளக்கிக் காட்டுவன. அதிலும் குறிப்பாகவும் சிறப்பாகவும் அச்சம் அகற்ற வேண்டும்; ஆட்சியாளரையும் தட்டிக் கேட்கும் அஞ்சாமையை வளர்க்க வேண்டும்; உயிரையே கொல்லும் தண்டனை விதிக்கப்பட்டாலும் கொண்ட குறிக்கோளில் தவறாது முழு மூச்சோடு செயல்படும் ஆற்றலை மேம்படுத்த வேண்டும்; அனைத்துயிர்களிடமும் அன்பு செலுத்த வேண்டும்; என் கடன் பணிசெய்து கிடப்பதே என்ற கொள்கையோடு 'நம்கடன் நாட்டிற்குப் பணி செய்தல்' என்ற சமுதாயத் தொண்டுணர்வை மென்மேலும் வளர்க்க வேண்டும் என்பதையும் திருநாவுக்கரசின் தேவராப்பாடல்கள் தெளிவுறுத்துகின்றன. அவற்றை எல்லாம் பாடிப் பரவுவோமா?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"FORWARDED FREE OF COST
AND WITH THE COMPLIMENTS OF
THE Dept OF Edn. Govt. OF INDIA
NEW DELHI"

5

நீதிவானில் ஒரு நித்திலம்

வாழ்வில் சீரோடும் சிறப்போடும், பேரோடும் புகழோடும் வாழவேண்டுமெனில் அறிவை வளர்க்க வேண்டும்; ஆற்றலோடு உழைக்க வேண்டும்; உடல் நலம் பேண வேண்டும்; பண்புடன் பழக வேண்டும்; எதையும் சிறப்புறச் செய்ய வேண்டும்; பிறர்க்குதவி புரிய வேண்டும்; அறம் செய்ய வேண்டும்; நல்லதையே நாட வேண்டும்; ஆய்ந்து நட்புகொள்ள வேண்டும்; நாட்டுக்குப் பயன்பட வேண்டும். இத்தகைய நற்குணங்களைப் பெறுவதற்கு நல்வழி காட்டும் நந்தா விளக்குகளாக ஒளிர்வனவே நீதி நூல்கள். இவை சிந்தனையின் திறவு கோல்கள்; கருத்தின் பொற்படிகள், அறிவின் நாணயங்கள்; உணவிற்கு உப்பைப்போல் உயிர்க்கு மூச்சுக் காற்றுப் பைகள்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் நாலடியார், நான்மணிக்கடிகை, திருக்குறள், திரிகடுகம், பழமொழி, சிறுபஞ்சமூலம், ஏலாதி ஆகியன நீதி நூல்களாக விளங்கி உலகம் போற்றும் உன்னதப் படைப்புக்களாகத் திகழ்கின்றன. அதேபோன்று நீதி நெறிகளை விளக்கவல்ல நீதிநூல்கள் பல பிற்காலத்தில் தோன்றின. அவ்வையார், உலகநாதர், அதிவீரராம பாண்டியர் சிவப்பிரகாச

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுவாமிகள், குமரகுருபர சுவாமிகள் முதலானோர் நீதி நூல்களை எழுதியுள்ளனர். இவற்றில் அளவிலும் ஆழத்திலும்; தெளிவிலும், தெறிப்பிலும்; எளிமையிலும் இனிமையிலும்; வடிவிலும் வனப்பிலும் பொலிவு பெற்று விளங்குவன அவ்வையார் அருளிச் செய்த நான்கு நீதி நூல்களே எனில் மிகையன்றே! அவை முறையே ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி ஆகும். இவை நீதிவானில் சிறந்த நித்திலங்களாகத் திகழ்கின்றன; தமிழன்னைக்கு ஒளியூட்டும் முத்துமாலைகளாக மிளிர்கின்றன; தமிழர் மட்டுமன்றி அனைவரும் போற்றிக் காக்க வேண்டிய நீதிநெறி முறைகளைச் சுட்டிக்காட்டும் ஒளிவிளக்குகளாகப் பொலிவு பெற்று ஒளிர்கின்றன.

அவ்வையார் அருளிய நான்கு நீதி நூல்களில் முதலாவதாக முகிழ்ப்பது ஆத்திசூடி. இதில் ஆத்திப் பூமாலையைச் சூடியிருக்கும் சிவபெருமானின் அன்பிற் குரிய மூத்த பிள்ளை விநாயகரை வணங்கும் இறை வாழ்த்துப் பாடல் முதலில் இடம்பெற்றுள்ளது.

''ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே''

ஒரு சொற்றொடரிலேயே நீதியை உணர்த்தும் உன்னத உத்தியில் நூற்றெட்டு நீதி மொழிகளைக் கூறியுள்ளார் அவ்வையார். அதிலும் சிறப்பாக நூற்றெட்டு நீதி மலர்களைத் தொடுத்து மிக உயர்ந்த நீதி மாலையை— ஆத்தி மாலையை இறைவனுக்குச் சூட்டி மகிழ்கிறார் அவ்வையார்.

1. அறிவைப் பெருக்கு !

அறிவு மனிதனை மாண்புடையவனாகச் செய்வ தற்கும், அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கும் உரிய கருவியாகப் பயன்படுகிறது.

'அறிவு அற்றம் காக்கும் கருவி'— என்பது வள்ளுவர் வாக்கு. அறிவை வளர்ப்பதற்கு இளமைப் பருவம் முதலே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்தூன்றிப் படிக்க வேண்டும்; ஏன்? எதற்கு? எப்படி? முதலான வினாக்கணைகளைத் தொடுக்கும் கேள்வி யறிவை வளர்த்தல் வேண்டும். மொழியையும் கணிதத்தை யும் முயன்று கற்கவேண்டும். அறியாமையை அகற்று வதற்காகப் பல நூல்களைப் படிக்கவேண்டும். அதனையும் விருப்பத்தோடு படித்தல் வேண்டும். அதுவும் இடை விடாது தொடர்ந்து கற்றுக்கொண்டேயிருக்க வேண்டும். கற்ற கல்வியைப் பிறர்க்கு எடுத்துரைக்கும் வல்லமையும் பெறவேண்டும். இதனை,

'இளமையில் கல்'
'கேள்வி முயல்'
'எண் எழுத்து இகழேல்'
'பேதைமை அகற்று'
'நூல்பல கல்'
'வித்தை விரும்பு'
'ஓதுவது ஒழியேல்'
'கைவினை கரவேல்'
'மொழிவது அறமொழி'

—என்ற ஆத்திசூடி விளக்குகிறது.

2. ஆற்றலோடு உழை!

உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ? உழைப்பே உயர்வு தரும். அதனையும் ஊக்கத்தோடும் உற்சாகத் தோடு செய்தல் வேண்டும். உழைப்பின் நடுவில் ஏற்படும் சங்கடங்கண்டு சஞ்சலப்படாது உறுதியோடு பணியாற்ற வேண்டும். அனைத்துத் தொழில்களிலும் உயர்வானது உழவுத் தொழில். ஏனெனில் அதுதானே மனித உயிர்களை வாழவைப்பதற்கான உணவுப் பொருள்களைத் தரும். அதனால்தான் வான்புகழ் வள்ளுவரும்,

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

—என்றும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''உழுவார் உலகத்தார்க்கு ஆணி''

—என்றும் வலியுறுத்தியுள்ளார்.

உழவுத்தொழிலை உவகையோடும் ஊக்கத்தோடும் செய்யவேண்டும் எனக் கூறிய அவ்வையார் மேலும் சொல்லுகிறார்— உழவுத் தொழிலால் கிடைக்கும் தானியங்களைப் பிறர்க்கு விற்கும்போது எடை குறைத்துக் கொடுக்கக்கூடாது. அல்லும் பகலும் அயராது பாடுபட்டுத் தேடிய பொருள்களையும், செல்வத்தையும் வீணாக்காமல் பாதுகாத்து வாழ்தலே சாலச் சிறந்தது. இதனை,

'ஊக்கமது கைவிடேல்'
'நெற்பயிர் விளை'
'பருவத்தே பயிர் செய்'
'பூமி திருத்தி உண்'
'மண் பறித்து உண்ணேல்'
'அஃகஞ் சுருக்கேல்'
'பொருள்தனைப் போற்றி வாழ்'

—என்ற ஆத்திசூடிப் பாக்கள் தெளிவுறுத்தும்.

3. உடல் நலம் பேணு!

உழைப்பதற்கு உடல் நலமும், மன வளமும் இன்றியமையாதது. இந்த இரண்டினையும் பெறுவதற்குக் குறித்த நேரத்தில் உணவு உண்ண வேண்டும். அளவுக்கு அதிகமாகச் சாப்பிடக் கூடாது. உடல் நலத்தைக் கெடுக்கும் உணவுகளை உண்ணக் கூடாது. சனிக்கிழமை தோறும் எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும். எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமல் விரதம் இருத்தலும் உடலுக்குப் பொலிவோடு உளத்திற்கு உறுதியும் அளிக்கும். எதைக் கண்டும் கலங்காத திடமான மனத்தைப் பெறவேண்டும். தெய்வம் தொழவேண்டும். இது அவ்வையின் அமுதவாக்கு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'நுண்மை நுகரேல்'
'நோய்க்கு இடம் கொடேல்'
'மீதூண் விரும்பேல்'
'சனி நீராடு'
'காப்பது விரதம்'
'மனம் தடுமாறேல்'
'தெய்வம் இகழேல்'

—ஆத்திசூடி

4. பண்புடன் பழகு!

அறிவைப் பெருக்கி, ஆற்றலோடு உழைப்பது மட்டு மன்றி அதற்கு இருப்பிடமான உடல் நலத்தைப் போற்றிக் காக்க வேண்டும் என மொழிந்த அவ்வையார் பண்புடன் பழக வேண்டும் என வற்புறுத்துகிறார். ஏனெனில் பண்பு தான் உடலுக்குப் பொலிவூட்டும்; அறிவுக்கு ஒளியூட்டும்; ஆற்றலுக்குத் துணைநிற்கும்: புகழுக்கு வழிவகுக்கும்!

நல்ல குணங்களோடு எப்போதும் வாழவேண்டும். ஒருவனைப் பொல்லாதவன் என அடையாளங் காட்டுவதே அவனது கோபம்தான். எனவே கோபத்தைக் குறைத்துக் கொள்ளுதல் வேண்டும். அதே நேரத்தில் கோபத்தை முற்றிலும் தவிர்த்தல் கூடாது. சில செயல்களைச் செய்விப்பதற்குக் கோபம் துணை நிற்கும். ஆகவே அவ்வையார், 'ஆறுவது சினம்' என்றார். அனைவரையும் அணைத்துச் செல்லும் அன்புள்ளம் கொள்ள வேண்டும்; எதையும் இனிய முறையில் எடுத்துரைத்தல் வேண்டும்; பெற்றோரைப் பிரியமுடன் பேணிப் பாதுகாக்க வேண்டும்; செய்ந்நன்றி மறத்தல் கூடாது; இழிவான செயல்களைச் செய்யக்கூடாது; பிறருக்குக் கோபம் உண்டாகும் கடுஞ் சொற்களைக் கூறக்கூடாது! உயர்ந்த பண்புடையாளரிடம் மிகுந்த தொடர்பு கொண்டபின் இடையில் பிரிந்து விடக்கூடாது! பிறர் வெறுக்கும்படி நடத்தல் கூடாது; பிறருடன் பேசும் போது உற்சாகம் குறைந்து சோர்வுடன் பேசுதல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூடாது; உன்னுடைய திறமைகளை நீயே புகழ்ந்து கொள்ளக்கூடாது; வீண்வாதங்களுக்கு யாரையும் அழைக்கக் கூடாது; நியாயத்துக்குப் புறம்பாக எதையும் சொல்லக்கூடாது.

அறிவும் ஆற்றலும் தகுதியும் உடையவன் எனப் பல்லோரும் ஏற்றிப் போற்றும் வண்ணம் நடந்துகொள்ள வேண்டும்; நேர்மை வழி நடத்தல் வேண்டும்; பெருமைப் படும் வகையில் செயல்பட வேண்டும்; ஆசையைக் கோபித்து அடக்கிக் கொள்ள வேண்டும்; அறிவு சான்ற பெரியோர்களின் அறிவுரைகளைக் கேட்டு அவர்கள் வாக்குப்படி வாழ வேண்டும்; இவையனைத்தும் கொண்ட உயர்ந்த குணமுள்ள உத்தமனாய் வாழவேண்டும். இவை அனைத்தையும் அவ்வையாரின் ஆத்திசூடி தெளிவுறுத்தும்.

'நன்றி மறவேல்'
'குணமது கைவிடேல்'
'கூடிப் பிரியேல்'
'சுளிக்கச் சொல்லேல்'
'சை எனத் திரியேல்'
'சொல் சோர்வுபடேல்'
'வல்லமை பேசேல்'
'வாது முற்றேல்'
'வெட்டெனப் பேசேல்'
'ஓரம் சொல்லேல்'

—இவையனைத்தும் செய்யக் கூடாததைச் சுட்டுகின்றன. அவ்வாறாயின் செய்யவேண்டுவன என்னென்ன? அதன் விளக்கம் இதோ,

'ங'ப்போல் வளை
'ஞயம்பட உரை'
'தந்தை தாய் பேண்'
'தக்கோன் எனத் திரி
'நேர்பட ஒழுகு'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'பீடுபெற நில்'
'புகழ்ந்தாரைப் போற்றிவாழ்'
'மேன்மக்கள் சொல்கேள்'
'உத்தமனாய் இரு'
—ஆத்திசூடி

5. பிறர்க்குதவி புரி!

தனக்கென மட்டும் வாழாமல் பிறர்க்கு உதவி செய்யும் குணத்தையும் வளர்க்கவேண்டும். துன்பப் படுவோரின் துயர் துடைக்க முன் வருதல் வேண்டும். தனக்கெனச் சுயநலப் போக்கோடு வாழாமல் பொது நலனில் அக்கறை கொண்டு பொதுத் தொண்டில் ஈடுபடுதல் வேண்டும். அப்போதுதான் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன், சமூகநலத் தொண்டன் என்ற சிறப்புப் பெயர்களைப் பெற முடியும். இதனை அடைவதற்கு அன்பும், இரக்கமும், ஈகைத் திறமும், உதவிக்கரம் நீட்டும் உன்னதக் குணமும் இளமை முதற்கொண்டே வளர வேண்டும் என்பதற்காகத்தான் ஒண்டமிழ் மூதாட்டி அவ்வையார் ஆத்திசூடியில் பிறர்க்குதவி புரிவதற்கான கருத்துக்களை வலியுறுத்தி யுள்ளார்.

'ஒப்புரவு ஒழுகு'
'கிழமைப்பட வாழ்'
'ஈவது விலக்கேல்'
'கெடுப்பது ஒழி'

—முதலான ஆத்திசூடிப் பாடல்கள் பிறர்க்குதவி புரிதலை உணர்த்திக் காட்டும் திறத்தன.

6. அறம் செய்!

இல்லையென்று வந்தவர்க்கு இல்லையென்னாது கொடுத்தலே தர்மம் ஆகும் பிறர்க்குதவி புரியும் பெற்றியாளர்களுக்குத் தருமம் செய்யகூடிய தயாளக் குணம் இயற்கையாகத் தோன்றும். அவ்வாறு செய்யக் கூடிய தருமத்தை விருப்பத்தோடு நிகழ்த்துதல் வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அது பசியால் துடிப்போரின் பசி போக்குவதுடன் அவரது ஆத்மாவும் பசிப்பிணி போக்கிய மருத்துவரான— தருமம் செய்த தண்டமிழ் வள்ளலைப் போற்றும். ஆதரவற்ற அனாதைகளுக்கு அபயக்கரம் நீட்டி உதவி புரியவேண்டும். உணவு, உடை, உறையுள் முதலான இன்றியமையாத் தேவைகள் மூன்றினையும் விருப்பத்தோடு கொடுக்கும் உயர்ந்த உள்ளமே தானம் செய்யத் தூண்டும். இதனை ஆத்திசூடி நன்கு விளக்கும்.

'அறம் செய விரும்பு'
'அய்யம் இட்டு உண்'
'தானமது விரும்பு'

தருமம் செய்து புகழ்பெற்ற கொடையாளன் கர்ணனை ஈண்டு நினைவு கூர்தல் நலம்.

''காணார் கேளார் கால்முடப் பட்டோர்
பேணுநல் இல்லோர் பிணி நடுக்குற்றோர்
யாவரும் வருகென்று இசைந்துடன் ஊட்டி''

மகிழ்ந்த— சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கிய எழில் நங்கை மணிமேகலை புரிந்த தானம் காலத்தைக் கடந்தும் காவியத்தில் இடம் பெற்றுக் கற்போர் நெஞ்சிலும் குடிகொண்டதை மறக்கவும் முடியுமோ?

7. ஆய்ந்து நட்புக்கொள்!

ஒருவன் அறிவில் சிறந்திருக்கலாம்; ஆற்றலில் உயர்ந்திருக்கலாம்; உடல் நலம் பேணலில் அக்கறை மிகக் கொண்டிருக்கலாம்; பண்புடன் பழகலாம்; பிறர்க்குதவி புரியலாம்; தருமம் கெய்யலாம் இத்தகு சிறந்த குணங்களால் உயர்ந்து விளங்குபவனுடன் எண்ணிறந் தோர் நட்புக்கொள்ள விரும்புவர். நெய்க்குடத்தை எறும்பு மொய்ப்பது போல் மிகுதியானோர் நண்பர்களாக விரும்புவர். ஆயினும் அனைவரையும் ஆருயிர் நண்பர்களாக ஏற்றுக் கொள்ளலாமா? அவர் இன்னார்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இனியார் என அறியும் முன் நட்பு கொள்ளக் கூடாது. அவரது குணங்களை முற்றிலும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதன் பின்னரே நட்புக் கொள்ள வேண்டும். தொடர்பு கொள்ள வேண்டியவரைப் பற்றி நன்றாகத் தெரிந்தபின் அவரோடு நட்புக் கொள்ள வேண்டும். அறிவும், ஒழுக்கமும் நிறைந்த சான்றோர் களை விரும்பி அவர்களின் நட்பினைப் பெறவேண்டும். அதே போல் அறிவற்ற அடக்கமில்லாதவர்களுடன் தொடர்பு கொள்ளவே கூடாது. அறிவற்ற முரடர் களோடும் நட்புக் கொள்ளக்கூடாது. இதனை அவ்வையார் ஆத்திசூடி மூலம் அருமையாக விளக்கி யுள்ளார்.

''இணக்கம் அறிந்து இணங்கு
சேரிடம் அறிந்து சேர்
பையலோடு இணங்கேல்
மூர்க்கரோடு இணங்கேல்
பெரியாரைத் துணைக்கொள்''

8. சிறப்புறச் செயல்படு!

எந்தச் செயலைச் செய்தாலும் அதில் மிகுந்த அக்கறை கொண்டு சீராகவும் செம்மையாகவும் செய்ய வேண்டும். செய்யும் முன் அந்தச் செயலின் நன்மை தீமைகளை அலசி, ஆய்ந்து, சிந்தித்துத் தெளிவு பெற்ற பின் அதனைச் செய்ய முனைய வேண்டும். அதே போல் செய்ய முடிந்ததைச் செய்யாமல் மறைத்து வைக்கக்கூடாது. அளவுக்கு அதிகமாக வீட்டைப் பெரிதாகக் கட்டக் கூடாது. வேளாண்மை செய்ய முனைவோர் தகுந்த காலத்திலே உழுது பயிரிடத்தொடங்க வேண்டும். தோல்வி தரத்தகும் செயல்களில் ஈடுபடாமல் அதனை முன்னரே அறிந்து விலக்கிக் கொள்ள வேண்டும். எவருக்கும் தீங்கு விளையும் செயல்களில் மறந்தும் ஈடுபடுதல் கூடாது. பகைவர்களை இனங்கண்டு அவர் களிடம் மிகுந்த நம்பிக்கை கொள்ளக்கூடாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'செய்வனத் திருந்தச் செய்'
'தூக்கி வினை செய்'
'இயல்வது கரவேல்'
'இடம்பட வீடு எடேல்'
'இயல்பு அலாதன செயேல்'
'கீழ்மை அகற்று'
'சீர்மை மறவேல்'
'தோற்பன தொடரேல்'
'நை வினை நணுகேல்'
'ஒன்னாரைத் தேறேல்'

—ஆத்திசூடி

9. நல்லதையே நாடு!

''நல்லதைச் சொல். அல்லதைச் சொல்லாதே''
என்பது முதுமொழி!

அதேபோல் நல்லதே செய்தால் நாம் நலம் பெறுவ தோடு, நம்மைச் சார்ந்தோரும், ஏன் நாடும் கூட வளம் பெற்றுப் பொலிவும் பெறும். நல்லதை நாடிச் செய்வதற்கு அன்புள்ளமும், இரக்க உணர்வும், ஈகைப் பண்பும், செயலாற்றும் திறனும் மிகுதியாக வேண்டும். நன்மை செய்வதில், விருப்பங்காட்டவேண்டும். அறிவொழுக்கம் நிறைந்த சான்றோர்களுடன் தொடர்பு கொண்டு அவர்கள் கூறும் அறிவுரையைக் கேட்டு நடத்தல் வேண்டும். இதனை,

''நன்மை கடைப்பிடி.
பெரியாரைத் துணைக்கொள்''

—என்ற ஆத்திசூடித் தொடர்கள் வலியுறுத்தும்.

மேலும் நீதிநெறி காட்டிய அவ்வைமூதாட்டி செய்யக் கூடாதனவற்றைப் பற்றிய நீண்டதொரு பட்டியலைத் தருகிறார். அவற்றை இன்னதெனத் தெரிந்து செயல் பட்டால் அல்லதைத் தவிர்த்து நல்லதை நாடும் இனிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நற்பண்பு நம்மிடையே மென்மேலும் வளரும்; அது தனிமனித வளர்ச்சிக்கு மட்டுமன்றிச் சமுதாய மலர்ச்சிக்கும் துணை நிற்கும்!

"ஏற்பது இகழ்ச்சி
அவ்வியம் பேசேல்
கண்டு ஒன்று சொல்லேல்
அரனை மறவேல்
கொள்ளை விரும்பேல்
கோதாட்டு ஒழி
சித்திரம் பேசேல்
சீர்மை மறவேல்
சூது விரும்பேல்
சோம்பித் திரியேல்
தீவினை அகற்று
துன்பத்திற்கு இடம்கோடேல்
நிலையில் பிரியேல்
நொய்ய உரையேல்
பழிப்பன பகரேல்
பிழைபடச் சொல்லேல்
மாற்றானுக்கு இடம் கொடேல்
ஓரம் சொல்லேல்"

10. நாட்டுக்குப் பயன்படு!

நாடுதானே நம்மைப் பெற்றது
நாம்தாமே நாட்டைக் காப்பவர்
உடலும் பொருளும் உயிரும் ஈன்ற— கடல்நிகர்
நாட்டைக் காத்தற் கன்றோ

என்ற புரட்சிக் கவிஞரின் பாடல் நமக்கு நினைவூட்டுவதே தேசத் தொண்டுதான்.

நாட்டுக்குத் தொண்டு செய்யும் நல்ல திறமையைத் தரும்படி மகாகவி பாரதியார் சக்தியிடம் வேண்டுவதும் இங்கு எண்ணத்தக்கதாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'வல்லமை தாராயோ— இந்த மானிலம்
பயனுற வாழ்வதற்கே!'

நாட்டுக்குத் தொண்டு செய்யும் நற்பண்பினை வளர்ப்பதற்கு அவ்வை மூதாட்டி ஆத்திசூடியில் மூன்று தொடர்களைப் பாடியுள்ளார்.

''தேசத்தோடு ஒத்துவாழ்
நாடு ஒப்பன செய்
ஊருடன் கூடி வாழ்''

—இம்மூன்றும் ஒரே கருத்தினைச் சொல்வது போல் மேலோட்டமாகத் தோன்றலாம். ஆழ்ந்து பார்த்தால் அதன் அருமையும் அற்புதமும் தெள்ளிதின் விளங்கும்.

நாட்டின் நிலை அறிந்து, நாட்டு மக்களின் தேவை தெரிந்து அதற்கேற்பத் திறம்படப் பணிபுரிந்து ஒற்றுமையுடன் வாழ வேண்டும். நாட்டின் உயர்ந்தோர் போற்றிய நற்பணிகளை ஏற்றுத் தொடர்ந்து செய்து நாடு முன்னேறப் பாடுபடவேண்டும். ஊர் மக்களின் நோக்கமறிந்து, அவர்களுடன் பிணக்கமின்றி இணக்கமுடன் இணைந்து வாழ்தல் வேண்டும். அது சமுதாய ஒற்றுமையோடு நாட்டின் ஒருமைப்பாட்டை வளர்த்து நானிலத்தில் மேனிலை அடையச் செய்யும்.

அன்னைத் தமிழ் இலக்கியத்தில் 'ஆத்திசூடி,' 'கொன்றைவேந்தன்'— என்னும் புதிய இலக்கிய வடிவங்களைப் புகுத்தியவர் அருந்தமிழ் மூதாட்டி அவ்வையார் தான்! அதுவும் சிறுகுழந்தைகள் எளிதில் படித்துப் புரிந்து கொண்டு மனப்பாடம் செய்வதற்கு ஏற்ப இரண்டு அல்லது மூன்று சொற்களுடன் ஒரு பாடலைப் பாடியிருப்பது பெரிதும் போற்றி மகிழத்தக்கதாகும். ஒரே தொடரிலேயே நீதிக் கருத்துக்களை நெஞ்சிலிறுத்தும் மிகச் சிறந்த சொல்லாட்சிகளைப் பயன்படுத்தியுள்ளார். செய்யத்தக்கன— தகாதன எனப் பகுத்துக் காட்டிப் பாடியிருப்பது பெரிதும் பாராட்டுக்குரியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆத்திசூடி அமர்ந்த சிவபெருமானைத் துதித்த தோடன்றி அந்த ஆத்தி மாலைக்கு நிகராக நீதி மாலையைச் சூட்டி மகிழ்ந்த அவ்வையார் தமிழன்னைக்குப் புதியதோர் ஆத்திசூடியை அணிந்து விட்டார். அதுவே பிற்காலத்தில் ஆத்திசூடி இலக்கிய வகையாகப் பிறந்து பல புதிய ஆத்திசூடிகள் முகிழ்க்க வித்திட்டுள்ளது.

சமுதாயம் வளர்ச்சியும் மலர்ச்சியும் பெற்றுச் சிறப்பதற்கு இன்றியமையாதது ஆங்குள்ள மக்களின் மனநலமும், உடல் வளமும் தான்! அவற்றை வளப்படுத்துவதற்கு உகந்தது நீதிமொழிகளே என்பதை நன்குணர்ந்து ஒண்டமிழ் மூதாட்டி அவ்வையார் அளித்த ஆத்திசூடி, பன்முறைப் படித்துச் சிந்தித்து மகிழத்தக்க ஒப்பற்ற இலக்கியம்! பிஞ்சுள்ளங்களுக்கு உரமூட்டி ஒளியூட்டும் அறிவுக்களஞ்சியம்! ஏன், அனைவருக்குமே அரிய கருத்துக்களை அள்ளி வழங்கும் பல்கலைக் களஞ்சியம்! அதனை அன்போடு அளித்திட்ட அவ்வை மூதாட்டி நீதிவானில் ஒரு நித்திலமாக ஒளிர்கிறார்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6

தரணி போற்றும் பரணி

தேனினும் இனிய தென்றமிழாம் நம் செந்தமிழில் பல்வேறு இலக்கியங்கள் தோன்றி, அவை மொழிக்கு வளமும் நலமும், வலிவும் பொலிவும் ஊட்டியுள்ளன, குறிப்பாகவும், சிறப்பாகவும் பேரிலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், காப்பியங்கள், புத்திலக்கியங்கள் ஆகியவற்றைச் சொல்லலாம். இந்த இலக்கிய வகைகள் தமிழ் மொழியின் தொன்மையையும் வன்மையையும் நன்கு படம்பிடித்துக் காட்டுகின்றன; தமிழரின் நாகரிகத்தையும், பண்பாட்டையும், பழக்க வழக்கங்களையும் பறை சாற்றுகின்றன; தமிழ்நாட்டின் வரலாற்றையும், வளர்ச்சியையும், புதுமலர்ச்சியையும் புலப்படுத்துகின்றன!

பைந்தமிழில் பல்வேறு இலக்கியங்கள் பாங்குடன் இயற்றப்பட்டிருந்தாலும் அவற்றில் சிற்றிலக்கியங்கள் மிகச் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளன. பல்வகைப் பாடு பொருள்களைக் கொண்டு விளங்கும் சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும். இவற்றின் இலக்கணங் களைப் பன்னிரு பாட்டியல், வச்சணந்திமாலை என்னும் வெண்பாப் பாட்டியல், நவநீதப் பபட்டியல், சிதம்பரப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல் முதலிய வற்றால் அறியலாம்.

அடிகளால் மிகுந்து, பொருள்களால் சிறந்து, மக்கள் வாழ்வையொட்டி, மக்கள் வாழ்வைச் செம்மைப்படுத்தி இன்பம் அளிக்க வல்ல நூல்கள் பேரிலக்கியங்கள் எனப் பட்டன. அடிகளால் குறைந்து, கற்பனை மிகுந்து, கடவுளரையும், செல்வரையும், பாமரரையும் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இயற்றப் பட்டன சிற்றிலக்கியங்கள். இவை தாம் கொண்டுள்ள பாவகை களால் பெயர் பெற்றுள்ளன. இவை கி. பி. எட்டாம் நூற்றாண்டு முதல் வளரத் தொடங்கிப் பெருகிப் பல்வகையாய் மலிந்துள்ளன. இவற்றில் கோவை, உலா, பரணி, பிள்ளைத் தமிழ், அந்தாதி, கலம்பகம், தூது, குறவஞ்சி, பள்ளு, மடல், மாலை முதலானவை குறிப்பிடத் தக்கன.

இத்தகைய சிற்றிலக்கியங்களில் ஒப்பற்ற வகையாக ஒளிர்வதே பரணி இலக்கியம். பரணி என்பது நாளின்— நட்சத்திரத்தின் பெயராகும். பரணி நாளில் கொண்டாடும் போர்வெற்றி விழாவினைச் சிறப்பித்துப் பாடுதலால் பரணி என்னும் பெயரைப் பெற்றது. போர்க்குரிய தெய்வம் கொற்றவை— காளி. கொற்றவைக் குரிய நாள் பரணி. பரணி நாளில் கொற்றவைக்குப் படையலிட்டுக் கொண்டாடுவது பண்டைத்தமிழர் மரபு. இதனை,

'களப்பரணிக் கூழ்'
'பண்டுமிகுமோர் பரணிக்கூழ் பாரதத்தில் அறியாமோ?'

என்ற கலிங்கத்துப் பரணித் தொடர்களால் அறியலாம். போரில் வெற்றி பெற்ற பெருவீரனைப் பாடும் நூல் பரணி ஆகும். பரணி நூலில் புறத்திணைத் துறைகள் பலவும் எடுத்தாளப்பட்டிருப்பதைப் பாடல்கள் உணர்த்தும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மாணவனுக்கு வகுப்பது பரணி

—என்று இலக்கண விளக்கப்பாட்டியல் பரணிக்கு விளக்கம் கொடுக்கிறது. அதாவது, போர்க்களத்தில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி பெற்ற வீரனைப் பாடுதலே பரணி என்று கூறுகிறது.

வெற்றிபெற்றோனைப் பற்றி மட்டும் பரணி பாடப் படுவதில்லை. தோற்றோரைச் சார்ந்தே நூலுக்குப் பெயரிடப்படுகிறது என்பதைப் பரணி நூல்கள் சுட்டிக் காட்டும். கலிங்கத்துப் பரணி, என்பது தோல்வியுற்ற கலிங்க மன்னன் நாட்டின் பெயரால் அமைந்தது. தோல்வி அடைந்த தக்கன் பெயரால் பாடப்பட்டதுதான் தக்கயாகப் பரணி. போரில் வெற்றி பெற்ற அரசர்கள்—வீரர்களைப் பாடுவதோடு அமையாது, பிற துறைகளில் வெற்றி பெறுதலையும் பொருளாகக் கொண்டு பாடியுள்ள நிலையைப் பரணிகள் விளக்கியுள்ளன. மோகவதைப் பரணி, பாசவதைப் பரணி முதலானவை இதற்குச் சான்று பகர்வன.

பாடுபொருளுக்கு ஏற்பப் பாடல்களின் சந்தங்களை அமைத்தால்தான், அவை கற்போர் மனத்தைக் கனிவிக்கும் என்பதை நன்கறிந்தவர்கள் பாவலர்கள்! பரணியின் பாவகை கலித்தாழிசை ஆகும். இந்தத் தாழிசைகள் கொச்சக ஒருபோகின் வகையான தேவபாணி என்றும் அழைக்கப்படும். இதனை,

"மயக்கறு கொச்சகத்து ஈரடி இயன்று
நயப்புறு தாழிசை உறுப்பிற் பொதிந்து"

என்று பன்னிருபாட்டியலும்,

ஈண்டிய, நேரடியோடு ஆதியாம் நீண்ட கலித்தாழிசை
ஈரடி கொண் டாதியுடன் நீறு

என்று வெண்பாப்பாட்டியலும் வலியுறுத்தும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிற்றிலக்கியங்களின் ஒவ்வொரு வகைக்கும் தனித்தனி உறுப்புக்கள் உள்ளன. அதே போல் பரணிக்கும் உண்டு.

பரணியின் உறுப்புகள்

1. கடவுள் வாழ்த்து
2 கடைதிறப்பு
3. காடு பாடியது
4. பேய்களைப் பாடியது— கூளிநிலை
5. கோவிலைப் பாடியது
6. தேவியைப் பாடியது— காளிநிலை
7. பேய் முறைப்பாடு
8. காளிக்குக் கூளி கூறியது
9. போர் பாடியது
10. களம் பாடியது
11. வாழ்த்து

இதனை,

கடவுள் வாழ்த்து கடைதிறப் புரைத்தல்
கடும்பாலை கூறல் கொடுங்காளி கோட்டம்
கடிகணம் உரைத்தல் காளிக்கது சொலல்
அடுபேய்க்கு அவள் சொலல் அதனால் தலைவன்
வண்புகழ் உரைத்தல் எண்புறத் திணையுற
வீட்டல் அடுகளம் வேட்டல்

என்று இலக்கண விளக்கப்பாடலும்,

தேவர் வாழ்த்தே கடைநிலை பாலை
மேவி அமரும் காளிகோயில்
கன்னியை ஏத்தல் அலகை விநோதம்
கனாநிலை நிமித்தம் பசியே ஓகை
பெருந்தேவி பீடம் அழகுற இருக்க
அமர்நிலை நிமித்தம் அவன்பதம் பழிச்சா
மன்னவன் வாகை மலையும் அளவு
மரபினிது உரைத்தல் மறக்களம் காண்டல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செருமிகு களத்திடை அடுகூழ் வார்த்தல்
பரவுதல் இன்ன வருவன பிறவும்
தொடர்நிலை யாகச் சொல்லுதல் கடனே

என்று பன்னிருபாட்டியலும் தெளிவுறுத்தும்.

பரணி இலக்கியங்களில் தலையாயதாயும், காலத்தால் முற்பட்டதாயும், கருத்துக்களின் நலத்தால் சிறப்பானதாயும், கற்பனவளமும், கவிநயமும் பொற்புறப் புனைந்த பாடல்களைக் கொண்டதாயும் அமைந்திருப்பது கலிங்கத்துப் பரணியே! பரணி என்ற பெயரைக் கேட்ட உடனே அனைவரின் நினைவுக்கும் எட்டுவது கலிங்கத்துப்பரணியே! அதனை இயற்றியவரோ 'பரணிக்கோர் செயங்கொண்டான்'— என்ற பாராட்டைப் பெற்ற கவிச்சக்கரவர்த்தி செயங்கொண்டான்தான்! தரணியெல்லாம் போற்றிப் புகழும் அந்தக் கலிங்கத்துப் பரணியில் அப்படி என்ன சிறப்பு இருக்கிறது என்பதைச் சற்று உள்நுழைந்து அறிவோமா?

சோழவள நாட்டை ஆண்ட முதற் குலோத்துங்கன் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினான். வீரத்திலும் விவேகத்திலும் ஒப்பாரும் மிக்காருமில்லாத் திறமுடையான்; நிர்வாகவியல் வல்லுநன். அவனது ஆட்சியில் மக்கள் நலமாகவும் வளமாகவும் வாழ்ந்தனர். குலோத்துங்கன் கலைவாணர் இசையோடும், நடனத்தோடும், கவிவாணர் கவியோடும் இன்பமாகப் பொழுது போக்கினான்.

இத்தகு சிறப்புக்களையெல்லாம் கொண்ட குலோத்துங்கச் சோழன் ஒருநாள் பாலாற்றங்கரையில் பரிவேட்டைக்குச் சென்றான். தனது பரிவாரங்களோடு காஞ்சியில் தங்கியிருந்தான். ஆங்கு அவனது ஆட்சிக்குட்பட்ட சிற்றரசர் பலர் வந்து வணங்கி வழக்கமான திறையைச் செலுத்தினர். முறையாகத் திறை செலுத்த வேண்டிய குறுநில மன்னன் வடகலிங்கன் இருமுறை திறை செலுத்தவில்லை என்ற செய்தியறிந்தான். எனவே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கலிங்கமன்னன் மீது படையெடுத்துச் சென்று, வென்று அவனைக் கைதுசெய்து கொண்டுவரும்படி கருணாகரத் தொண்டைமானுக்குத் கட்டளையிட்டான். அவ் வண்ணமே அவனும் கலிங்கம் சென்று அதனை அழித்து வெற்றிகொண்டான். இந்த வெற்றிச் சிறப்பைப் பாடுவதே கலிங்கத்துப்பரணி.

முதற்குலோத்துங்கன் காலத்தில் நடந்த இரண்டாம் கலிங்கப்போரையே செயங்கொண்டார் தம் நூலின் பாடுபொருளாகக் கொண்டிருந்தார். இந்நூல் குலோத் துங்கச் சோழனின் அருமை பெருமைகளை அழகுற வர்ணிக்கிறது; போர் வீரர்களின் வீரதீரத்தை விளக்கி யுரைக்கிறது; வெற்றிக்களிப்போடு வீடு திரும்பிய வீரர்களின் மனைவிமார்கள் நிலையைக் கற்பனைச் சிறப்போடும் கவின்மிகு வனப்போடும் பொற்புறப் புகலுகிறது; பெண்களின் ஆற்றாமை, வீரம், மாறாக் காதல் முதலானவற்றைப் படிப்போர் பரவசமடையும் வண்ணம் பாடுகிறது.

செயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப்பரணியின் கற்பனைக் களஞ்சியமாகத் திகழ்வது கடைதிறப்பு எனும் பகுதியே! அதில் கவிஞனின் கற்பனைத் திறமும், கவிதை வளமும், கருத்துச் செறிவும் கனிந்திருப்பதை மிகுதியும் காணலாம். காலங்கடந்தும் கற்போர் மனத்தைக் கவர்ந்திழுக்கும் வண்ணப்பாக்களைக் கொண்டதும் இப்பகுதிதான். பிற்காலத்தில் எழுந்த பல பாடல்களுக்கு நல்ல கற்பனை வளத்தை வழங்கி வேராக விளங்குவதும் இப்பகுதிதான்! குறிப்பாகத் திரைப்படப்பாடல்கள் பல இதன் உத்தியையும், உவமையையும் ஏன் சொல்லாட்சி யையுமே எடுத்தாண்டுள்ளன.

போர்மேற் சென்ற மன்னனும், அவன் படைத்தலைவ னும் குறித்த காலத்தில் வராமல் காலந்தாழ்த்தி வந்தனர். அதுகண்டு கோபம் அடைந்து கதவை மூடிக்கொண்டனர். அதனைக் கண்ட புலவர் ஒருவர், அப்பெண்களிடம்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவர்தம் கணவன்மார்களின் வீரச்செயல்களை விளக்கிக் கூறி, கோபத்தைத் தவிர்த்துக் கதவைத் திறக்குமாறு வேண்டுகிறார். இதில் வீரர்களின் வெற்றிச் சிறப்பும், மகளிரின் மாண்பும் அருமையாக வருணிக்கப்படுகின்றன. கதவைத் திறக்குமாறு வேண்டும் செய்யுட்களைக் கொண்டதுதான் கடைதிறப்பு. புலவரின் பாட்டுக் கேட்டு ஊடல் தவிர்ந்து, கதவைத் திறந்து, கணவனை அன்புடன் வரவேற்றுக் கூடிமகிழ்ந்தனர். இல்லறம் நல்லறமாய் சிறந்தோங்கி விளங்குவதற்குப் புலவன் புலமைப் புறாவாகத் தூது சென்று துணை நின்றான் என்பதைக் கற்பனை நயத்தோடு உய்த்துணரச் செய்கிறது கடைதிறப்பு.

ஐம்பத்து நான்கு பாடல்களைக் கொண்டது கடைதிறப்பு. அனைத்துப் பாடல்களும் பன்முறைச் சுவைத்து மகிழத்தக்கன. ஒவ்வொரு பாடலும் ஈற்றடியில் 'கடைதிறமினோ', 'கபாடம் திறமினோ' என முடியும். இப்படிக் கதவைத் திறக்கும்படி வேண்டுவது யார்? என்பதனைப் படிப்போர் சிந்தனைக்கே விடுத்துள்ளார் கவிச்சக்கரவர்த்தி செயங்கொண்டார். ஆம்! அவ்வாறு 'திறமினோ' எனக் கேட்பது கணவன் கூற்றே! பேயின் கூற்றே! கவிஞன் கூற்றே! என்று மூன்று வகையினரையும் கூறுவர் இலக்கிய ஆய்வாளர்கள். ஆனால் அதன் காலத்தையும், இடத்தையும், கருப்பொருளையும் ஆய்ந்து நோக்கின் அது கவிஞன் கூற்றே! என்பதைத்தான் தெளிவுறுத்தும்.

போர்மேற் சென்ற கணவன், தன் மனைவியிடம் இத்தனை நாட்களுக்குள் வந்து விடுவேன் என்று ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சொல்லிவிடுகிறான். ஆனால் அதன்படி வரவில்லை. அதுமுதல் கணவன் வருகையை வழிமேல் விழிவைத்து எதிர்பார்க்கிறாள். அல்லும் பகலும் உறங்காமல் கதவருகே காத்திருக்கிறாள். நெடுநேரம் வராததால் கதவை அடைப்பாள். மீண்டும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கதவைத் திறந்து வருவாரா என எதிர்பார்ப்பாள். இப்படி வருவார் எனக் கதவைத் திறப்பதும், வாரார் எனக் கதவை மூடுவதுமாக இருந்தமையால் கதவிலுள்ள சுழலும் குடுமி தேய்ந்து விட்டது. ஆனால் கணவன் வந்தபாடில்லை. இப்படிப் பல நாட்கள் காத்திருந்த பெண்ணே உன் கணவன் வெற்றிவாகை சூடிக் கதவருகே வந்து நிற்கிறான். இனியும் காலதாழ்த்தாது கதவைத் திற என்று கவிஞர் பாடுகிறார்.

வருவார் கொழுநர் எனத் திறந்தும்
வாரார் கொழுநர் என அடைத்தும்
திருகும் குடுமி விடியளவும்
தேயும் கபாடந் திறமினே

என அழகிய சொல்லோவியம் தீட்டியுள்ளார் செயங் கொண்டார்.

கணவன்— மனைவி இருவரும் புணர்ச்சிக் காலத்தில் பரவசம் அடைவர்; மனம் நெகிழ்வர்; உறக்கம் கலைவர்; பவளம் போன் சிவந்த உதடுகள் வெளுக்கும்; வெண்ணிறமுடைய கண்கள் செந்நிறமாகும்; அடக்க மாகிய காவல் நீங்கி ஆனந்தமளிக்கும். புணர்ச்சியால் புன்னகை பூப்பர். அத்தகைய இல்லற வாழ்வை இனிதே நடத்தும் பெண்களே! காத்துநிற்கும் கணவன் மார்களுக்குக் கதவைத் திறந்துவிடுங்கள் என்கிறார் கவிச்சக்கரவர்த்தி.

அவசமுற் றுளநெகத் துயில்நெகப் பவளவாய்
அணிசிவப் பறவிழிக் கடைசிவப் புறநிறைக்
கவசமற் றிளநகைக் களிவரக் களிவரும்
கணவரைப் புணருவிர் கடைதிறந் திடுமினோ

வீட்டினுள் தூங்கிக் கொண்டிருக்கும் பெண் தன் கணவன் வாயிற் கதவைத் தட்டியதும் திறக்க முன் வருகிறாள். தூக்கக் கலக்கத்தோடு வரும் அவளின் ஒருகை அவளது ஆடையைத் திருத்தி அணிசெய்கிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதே நேரத்தில் மற்றொரு கை தூக்கத்தினால் கலைந்திருந்த கூந்தலைச் சொருகிச் சரி செய்கிறது. இவ்விரண்டையும் ஒரே நேரத்தில் செய்து கொண்டே முகமலர்ச்சியுடன் கதவைத் திறக்கும் இயல்புடையவளாய் வருகிறாள். தூக்கத்திலும் கலக்கமில்லாமல் கனிவோடு முகமலர்ச்சியுடன் கதவைத் திறக்கும் பெண்களே! இப்போது வெற்றிவாகை சூடிவந்துள்ள கணவனுக்காகக் கதவைத் திறந்து விடுங்கள் என வேண்டுகிறார் கவிஞர்.

"சொருகு கொந்தளகம் ஒருகை மேல்அலைய
ஒருகை கீழலைசெய் துகிலோடே
திருவனந்தலினும் முகமலர்ந்துவரு
தெரிவை மீர்கடைகள் திறமினோ"

இப்பாடலில் தூக்கக் கலக்கத்தோடு வரும் ஒரு பெண்ணின் நிலையை எவ்வளவு அற்புதமாகச் சொல்லோவியமாக நம் கண்முன் நிறுத்துகிறார் கவிச்சக்கரவர்த்தி செயங்கொண்டார்!

ஒரு பெண்ணின் காலிலுள்ள சிலம்புகள் அலறி அழுகின்றனவாம். ஏன் தெரியுமா? அந்தச் சிலம்பினை அணிந்த பெண்ணின் இடையோ மிகவும் மெல்லிதாக உள்ளதாம். ஆனால் அவளின் கொங்கைகள் பருத்துக் காணப்படுகின்றனவாம். அதோடு அவள் வேகமாக நடந்தால் பாரம் தாங்காமல் இடுப்பு ஒடிந்து விடுமோ? இடுப்பு ஒடியின் இவள் உயிர் துறந்துவிடுவாளே? அவ்வாறாயின் இவள் காலிலிருந்து அணிசெய்வது எப்படி! என்றெண்ணி அலறுகிறதாம்! இவளோ கணவன் நெடுநேரம் வாயிலில் காத்திருக்கக் கூடாது என்பதற்காக வேகமாக நடந்து சென்று கதவைத் திறக்க முனைகிறாள். அவளிடம், 'பெண்ணே நீ நடக்காதே! நடக்காதே!' எனச் சிலம்பு கெஞ்சுகிறதாம். 'என் சொல்லை மீறி நடந்தால் உன் இடை ஒடியும்' என்றும் எச்சரிக்கிறதாம். அப்படிச் சிலம்புகள் எச்சரிக்கை செய்யக் கூடிய அளவுக்கு எழிலுடன் நடக்கும் நங்கையரே! காத்திருக்கும் கணவன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மார்களுக்குக் காலந்தாழ்த்தாது கதவைத்திறங்கள்— என்கிறார் கவிஞர். என்ன அருமையான கற்பனை! பெண் நடக்கும் போது அவள் காலின் சிலம்புகள் இயல்பாகச் சத்தமிடும். அதனை எவ்வளவு அழகாகப் பயன்படுத்தி அற்புதமாக விளக்கியுள்ளார்! இதனையே தற்குறிப்பேற்ற அணி என்பர் இலக்கண வல்லுநர்.

உபய தனம்அசையில் ஒடியும் இடைநடையை
ஒழியும் ஒழியும்என ஒண்சிலம்பு
அபயம் அபயம்என அலற நடைபயிலும்
அரிவை மீர்!கடைகள் திறமினோ!

—இந்தப் பாடல்தான்

அழகு மயிலாட அபிநயங்கள்கூட
சிலம்பொலியும் புலம்புவதைக்கேள்

என்னும் திரைப்படப் பாடலுக்கு வித்திட்டதோ என எண்ணத் தூண்டுகிறது.

இப்படிக் கவிச்சக்கரவர்த்தி செயங்கொண்டார் இயற்றிய பாடல்களின் கற்பனை நயத்தையும், கருத்துச் செறிவையும் விளக்க எத்தனையோ பாடல்களை எடுத்துக் கூறலாம்.

கலிங்கத்துப்பரணியில் காதல் பாடல்களையும், இல்லற வாழ்க்கையின் இன்றியமையாமையையும் விளக்கியதைப் போல் வீரத்தின் சிறப்பையும் மிக உன்னதமான பாடல்களால் வருணித்துள்ளார் செயங்கொண்டார் 'போர்பாடியது'— எனும் பகுதியில் அறுபத்தெட்டுப் பாடல்களும், 'களம் பாடியது'— எனும் பகுதியில் நூற்றிருபத்தைந்து பாடல்களும் உள்ளன. இவற்றில் வீரத்தின் மேன்மையையும், போர்க் கலையின் நுட்பத்தையும், போர்க் களத்தின் பின்னணியையும், வீரர்களின் போராற்றலையும், வீரர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டிய அக்கால மகளிரின் அஞ்சா நெஞ்சத்தையும் மிக அற்புதமாக விளக்கியுள்ளார் கவிஞர் செயங்கொண்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதற்குலோத்துங்கன் படைத் தலைவனாகிய கருணாகரன் தலைமையின்கீழ் சோழவீரரும், அனந்த பத்மன் தலைமையின்கீழ் கலிங்க வீரரும் போர் புரிந்ததைப் 'போர் பாடியது' எனும் பகுதியால் அறியலாம். அப்போரில் கருணாகரன் கலிங்கரை வென்றான். இதில் கவிஞர் வீரச்சுவை ததும்பப் பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றைப் படிக்கும்போது வீர உணர்ச்சி பொங்கித் ததும்பும்.

எடும்! எடும்! எடும்! எனஎடுத்ததுஓர்
இகல்ஒலி கடல்ஒலி இகக்கவே
விடு!விடு! விடு! கரிபரிக்குழாம்
விடும்! விடும்! எனும்ஒலி மிகைக்கவே

போரைத் தொடங்குங்கள் என வீரர்கள் எழுப்பிய வீரமுழக்கம் கடல் அலையோசையை வென்று வெளிப் பட்டது; யானை, குதிரைப் படைகளை ஏவுங்கள்! ஏவுங்கள்! என்னும் ஒலியும் மிகுதியாக ஒலித்தது. குதிரை களின் கணைப்பும், யானைகளின் பிளிறலும் விண்ணைப் களந்தன; அவற்றின் படை வீரர்களின் கூக்குரலோ அனைத்து ஓசைகளையும் வென்று போர்க்களம் முழுவதும் பரவிக் கேட்டது இவற்றையெல்லாம் ஊகித்து உணரும் வண்ணம் பாடியுள்ளார் கவிச்சக்கரவர்த்தி.

கலிங்கப் போரில் மதம் மிக்க யானைகளோடு யானைகள் போரிட்டன; தேர்களோடு தேர்களும் மோதிக் கொண்டன; அதேபோல் தேர்களிலுள்ள வீரர்கள் போரிட்டனர். இது எப்படியிருக்கிறதாம். பெரிய மலைகளோடு, மலைகளும், மேகங்களோடு மேகக்கூட்டங் களும் போர் புரிந்தது போல் இருந்ததாம். மலைகள் யானைகளுக்கும், மேகங்கள் தேர்களுக்கும் உவமையாகக் கூறப்பட்டன. பாடலைப் படித்தால் இவ்வுண்மை தெரியுமல்லவா.

கனவரை யொடுவரை முனைத்தபோல்
கடகரி யொடுகரி முனைக்கவே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இனமுகில் முகிலொடும் எதிர்த்தபோல்
இரதமொடு ரதமும் எதிர்க்கவே

மலைகளோடு மலைகளும், முகிலோடு முகில்களும் சண்டையிடுவது உலகில் நடவாத ஒன்று. ஆனால் பெருத்த உருவங் கொண்ட யானைகளுக்கு மலையையும், விரைந்தோடும் குதிரைகளுக்கு நகர்ந்து செல்லும் மேகங்களும் உவமையாகக் கூறப்பட்டது பன்முறைச் சிந்திக்கத் தக்கது. உலகில் இதுபோன்று நடவாத ஒன்றினை நடப்பது போல் உவமையாக்குவதற்கு இல்பொருள் உவமையணி என்பர் இலக்கண அறிஞர். இதனைக் கவிஞர் இப் பாடலில் நன்கு எடுத்தாண்டுள்ளார்.

கலிங்கப் போரில் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை மட்டுமன்றிக் காலாட்படையிலுள்ள வீரர்கள் எப்படியெல்லாம் நாட்டுப் பற்றோடு போர் புரிந்தனர்; விழுப்புண் பட்டு வீரமரணம் எய்த விரும்பினர் என்பதை விளக்கும் பாடல்களைப் பாடும்போது வீர உணர்ச்சி மேலோங்கும்.

நிறைந்த அம்புகளைப் பகைவர்மேல் தொடுத்து விட்டதால் அவை தீர்ந்துவிட்டனவாம். அதற்காகப் போர்க்களத்தில் போர்புரியாமல் இருக்க முடியுமா என்ன? தம் மார்பில் தைத்த பகைவர்களின் அம்புகளை எடுத்துப் பகைவர்கள் மேல் தொடுத்தனர். அம்புகள் அனைத்தும் தீர்ந்த உடன், பகைவர்களின் அம்புகள் தம் மீது படாவண்ணம் சிலைகளையே (வில்களையே) சிலம்பங்களாகச் சுற்றித் தடுத்தனர்.

நேர்முனையில் தொடுத்த பகழிகள்
நேர்வளைவில் சுழற்றும் அளவின்
மார்பிடையிற் குளித்த பகழியை
வார்சிலையில் தொடுத்து விடுவரே

கலிங்கப் போரில் மற்றோர் காட்சி நம் நெஞ்சைப் புல்லரிக்கச் செய்யும். ஆம்! போரில் இரண்டு தொடை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களையும் இழந்து களத்திலே வீழ்ந்து கிடக்கின்ற வீரர்கள் எதிரிகளின் அம்புகளை வீர உணர்வோடு தடுத்தது மட்டும் அல்லாமல் தம்மைக் கொல்லவரும் யானைகளையும் எதிர்க்கத் துணிந்தார்கள். ஆயுதமற்ற அவர்களால் எப்படி முடிந்தது என்ற வினா எழுகிறதல்லவா. தம் உடம்பினின்று வெளிப்பட்ட இரு தொடைகளில் ஒன்றினை வேகமாகச் சுழற்றி யானை மீது வீசி எறிந்தார்கள். அதன் வலியைத் தாங்க முடியாமல் யானைகள் திரும்பியோடி விட்டன. இன்னொரு தொடையைத் தம்மைத் தாக்க வருபவர்களை எதிர்ப்பதற்காக வைத்திருந்தார்கள். ஆயுதமற்ற அவர்களுக்கு அவர்களின் உடம்பினின்று வெளிப்பட்ட வலிமை மிக்க இரு தொடைகளே ஆயுதங்களாகப் பயன்பட்டன என்பதை அறியும்போது உடம்பு சிலிர்ப்பது உண்மை தானே! தொடைகள் நீங்கியும் அவர்தம் வீர உணர்வு குறையவில்லை என்பதை எத்துணை அற்புதமாக விளக்கியுள்ளார் செயங்கொண்டார்.

இரு தொடையற் றிருக்கும் மறவர்கள்
எதிர்பொருகைக் களிற்றின் வலிகெட
ஒரு தொடையைச் சுழற்றி எறிவர்கள்
ஒரு தொடை யிட்டுவைப்பர் எறியவே.

போர்பாடியதில் உள்ள அனைத்துப் பாடல்களிலும் போர் வீரர்களின் வீர உணர்வும், உத்வேகமும், ஊக்கமும் பல்வேறு உவமைகளால் விளக்கப்பட்டுள்ளன. பல்வகைப் படைகள் எப்படியெல்லாம் போரிட்டன என்பதைக் கற்பனை நயமுடன் கூடிய பாடல்களால் உணர்த்தப் பட்டுள்ளன. அவைகளைப் படித்தால் கோழைகளும் வீறு கொண்டெழும் வீர உணர்வு பெறுவர் என்பது பொய்யுரை அல்லவே!

கலிங்கப் போரில் ஈடுபட்ட ஆண் மக்கள் மட்டும்தான் வீரம் மிக்கவர்களா? அவர்களைப் போருக்கு வெற்றித் திலகமிட்டு வழியனுப்பி வைத்த அவர்தம் மனைவிகளின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிலை என்ன என்ற வினாக்கள் எழும் அல்லவா. அதற்கு விடையளிக்கும் வகையில் அமைந்ததுதான் களம் பாடியது. தம் கணவர் எதிரிகளோடு போரிட்டு வென்று வெற்றி வாகை சூடி வருவார் என்று வழிமேல் விழி வைத்திருக் கின்றனர் அந்த வீர மகளிர்.

முதுகில் எதிரிகளின் அம்பு தைத்தலும், வாயில் வடுப்படுதலும் நல்லதொரு வீரனுக்கு இழுக்கு என எண்ணினர் அக்கால வீரமகளிர். கலிங்கப் போர் முடிந்து வெற்றிவாகை சூடிக் கருணாகரத் தொண்டைமான் எண்ணற்ற போர் வீரர்களுடன் நாடு திரும்பி விட்டான். வெற்றியுடன் திரும்பி வந்தவர்களுக்கு மனமிரங்கிக் கதவைத் திறக்க வேண்டுமென 'கடை திறப்பு' பாடிய செயங்கொண்டார் போர்க்களத்தில் வீர மரணம் எய்தியவர்களின் மன நிலையை நன்கு படம் பிடித்துக் காட்டுகிறார்.

போர் முடிந்து எண்ணற்றோர் வீடு திரும்பிய பின்னரும் தன் கணவன் வரவில்லையே என மனம் நொந்து போர்க்களம் நோக்கிப் புறப்பட்டாள். ஆங்குக் கணவனின் உடலைத் தேடினாள். வீர மரணம் அடைந்து கிடந்த கணவனின் உடலை உற்று நோக்கினாள். 'நீ உதடு மடித்துக் கிடப்பதற்குக் காரணம் என்ன?' எனக் கேட்டு அழுது அரற்றினாள். இறந்து போன கணவனால் எப்படிப் பேச முடியும்? அவனது உடலைப் புரட்டிப் பார்க்கிறாள். முதுகில் காயமில்லை. மார்பில் அம்பு களால் எத்துணையோ துளைகள் உள்ளன. ஆனால் உதட்டில் காயம்பட்டு விட்டதே என்று எண்ணித் தன் கணவனின் வீரத்துக்குக் குறை ஏற்பட்டுவிட்டதே எனக் குமுறி அழுகிறாள். இறந்ததற்காக மட்டும் அழவில்லை. அவன் வீரத்திற்குக் களங்கம் ஏற்பட்டு விட்டதாகக் கதறு கிறாள். வெறுப்படைந்து அவனருகில் உயிர்விடத் துணி கிறாள்! இந்தக் காட்சி நம் கண்களில் நீரைப் பெருக்கி விடுகிறதல்லவா?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாய்மடித்துக் கிடந்ததலை மகனை நோக்கி
மணிஅதரத் தேதேனும் வடுஉண் டாயோ ?
நீமடித்துக் கிடந்ததெனப் புலவி கூர்ந்து
நின்றுஆவி சோர்வாளைக் காண்மின் ! காண்மின் ! !

இதேபோல் இன்னொரு காட்சி. வீர மரணம் எய்திய கணவனின் உடலைத் தேடிச் செல்கிறாள் மனைவி. விழுப்புண் பட்டு வீர மரணம் எய்திய அவனது உடலை நிலமகள் தாங்கக் கூடாது என எண்ணித் தன் மார்போடு அணைத்துக் கொள்கிறாள். கணவனின் உயிர் மேலுலகம் சென்றபின் ஆங்குள்ள தேவமகளிர் தன் கணவனின் உயிரைத் தழுவுவரோ என எண்ணிப் பார்க்கிறாள். கூடாது. தானும் அவரோடு செல்ல வேண்டும் எனத் துணிவோடு அங்கேயே உயிர் விடுகிறாளாம். கணவன்— மனைவி அன்பை இதற்கு மேலும் விவரிக்க முடியுமோ?

தரைமகள்தன் கொழுநன்தன் உடலம் தன்னைத்
தாங்காமல் தன்உடலால் தாங்கி விண்ணாட்டு
அரைமகளிர் அவ்வுயிரைப் புணரா முன்னம்
ஆவிஒக்க விடுவாளைக் காண்மின் ! காண்மின் !

மற்றுமோர் காட்சி நம் நெஞ்சைப் பிளக்கும் வகையில் விளக்கப்பட்டுள்ளது.

நெடுநேரமாகியும் போர்க்களம் சென்ற கணவன் வரவில்லை. பக்கத்து வீடுகளிலுள்ளோரில் பலர் வந்து விட்டனர். எனவே கலக்கத்துடன் போர்க்களம் நோக்கிச் செல்கிறாள் அந்த வீராங்கனை. களத்தில் மாண்டு கிடக்கும் உடல்களையெல்லாம் உற்றுப் பார்க்கிறாள், தென்படவில்லை. இறுதியில் இறந்து போன கணவனின் தலை மட்டும்தான் கிடக்கிறது. மாண்டு போன கணவனின் முகம் பார்த்துப் பதைபதைத்து அழுகிறாள்; அரற்றுகிறாள்; தலையொன்றினைத் தவிர மற்ற உறுப்புக்கள் எங்கே எனக் கேட்டுப் புலம்புகிறாள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மிகுந்த வீர உணர்வோடு வாளைப் பிடித்து எதிர் களை வெட்டி வீழ்த்தும் வல்லமை கொண்ட என் கணவனின் பெரிய கைகள் எங்கே? புறமுதுகிட்டோடாது விழுப்புண் அடைவதையே விழுமிய குணமாகக் கொண்ட என் கணவனின் அழகிய பரந்து விரிந்த மார்பு எங்கே? எத்தகைய வீரர்கள் எதிர்த்து வந்தாலும் அத்தனைப் பேரையும் கொன்று குவிக்கும் ஆற்றல் படைத்த வலிய தோள்கள் எங்கே? எங்கே? என்று கேட்கிறாள். சாதாரண மாக நோய்வாய்ப்பட்டு இறந்த கணவனுக்காக ஏங்கி அழும் மகளிரைப் பார்க்கிறோம். இங்கோ போர்க் களத்தில் விழுப்புண்ணோடு வீர மரணம் எய்திய கணவனின் தலை இருக்கிறது. உடலின் மற்ற உறுப்புக்கள் இல்லை! அவளது மாளாத் துயருக்கு மாற்று ஏது? ஒவ்வொரு உறுப்பையும் எங்கே எங்கே என்று கேட்கும் போது அந்தப் புலம்பலின் துயரம் நம் நெஞ்சை நெகிழ வைக்கிறதல்லவா? அந்தப் போர்க்களக் காட்சியையே நம் கண்முன் நிறுத்தவல்ல செயங்கொண்டாரின் கவித்திறம் போற்றுதற்குரியதுதானே!

பொருதடக்கை வாள்எங்கே? மணிமார்பு எங்கே?
போர்முகத்தில் எவர்வரினும் புறங்கொடாத
பருவயிரத் தோள்எங்கே? எங்கே? என்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின்! காண்மின்!!

கலிங்கத்துப் பரணியில் காதற்சுவையையும், வீரச் சுவையையும் படிப்போர் பரவசமடையும் வண்ணம் தாழிசைப் பாக்களின் வாயிலாகப் பாடியுள்ளார் கவிச் சக்கரவர்த்தி செயங்கொண்டார். வீரமும் காதலும் சங்க இலக்கியத்தின் பாடுபொருள்கள் என இலக்கிய ஆய்வாளர்கள் கூறுவர். அதே பாடுபொருள்களை மையமாகக் கொண்டு கலிங்கத்துப் பரணியைப் பாடி யுள்ளார் செயங்கொண்டார். அதற்கு அவர் எடுத்துக் கொண்ட பாவகை எளிமையும், இனிமையும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உடையது; புதுமையும் புத்துணர்ச்சியும் மிக்கது; வேகமும் விறுவிறுப்பும் கொண்டது.

மகளிர் தமக்கு நல்ல கணவன் கிடைக்க வேண்டும், மழைவளம் பெற வேண்டும், நாட்டுவளம் சிறக்க வேண்டும் என்றெல்லாம் இறைவனிடம் வேண்டி அதிகாலையில் இருக்கும் நோன்புக்குத்தான் பாவை நோன்பு என்பர். இதனை மணிவாசகர் அருளிச் செய்த திருவெம்பாவையாலும், ஆண்டாள் அருளிய திருப்பாவையாலும் அறியலாம். இந்தப் பாவைப் பாடல்களின் ஈற்றடி 'கடைதிறவாய்' என்ற வேண்டுகோளில் முடியும். அதாவது மார்கழி நீராடி மகேசனைத் துதிப்பதற்குப் பாவையர் ஒருவரையொருவர் துயில் எழுப்புவதற்கு அவ்வாறு பாடி வருவர்.

முத்தன்ன வெண்ணகையாய்! முன்வந்து எதிர்எழுந்து என்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்

—திருவெம்பாவை

பந்தார் விரலிகின் மைத்துனன் பேர்பாடச்
செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய்.....

—திருப்பாவை

குலோத்துங்கனின் வெற்றிச் சிறப்பைப் பாடஎழுந்த கலிங்கத்துப் பரணியில், மன்னனின் வெற்றியைப் பாடுதற்கு மகளிர் ஒருவரையொருவர் துயில் எழுப்புவது போன்ற கருத்தமைந்த பகுதியைக் ''கடை திறப்பு'' எனும் பெயரிட்ட கவிஞரின் திறம் போற்றுதற்குரியது. அதோடு அதனைக் கடவுள் வாழ்த்தினை அடுத்து வைத்துள்ளது பன்முறை எண்ணி மகிழத்தக்கது.

ஆம்! கலிங்கத்துப் பரணியின் 'கடை திறப்பு', அக்கால மகளிரின் எழிலார்ந்த உடலையும், உள்ளத்தை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யும், ஊடலையும் கூடலையும் விளக்கிக் காட்டுகிறது; 'போர் பாடியது' வீரர்களின் விழுமிய போர்த் திறனையும், அஞ்சா நெஞ்சத்தையும், தியாக உள்ளத்தையும் தெள்ளிதின் புலப்படுத்துகிறது; 'களம் பாடியது' அக்கால மகளிரின் வீர உணர்வையும், அஞ்சாமைப் பண்பையும், மணாளன் மீது கொண்ட மாளாக் காதலையும் மாண்புடன் எடுத்துரைக்கிறது. அதனால்தான் செயங்கொண்டார் கவிச்சக்கரவர்த்தி என எல்லோராலும் ஏற்றிப் போற்றப்படுகிறார்.

சிற்றிலக்கியங்களிலேயே வீரத்தையும் காதலையும் வியந்து போற்றும் பாவகைகளை மிகுதியும் கொண்டது பரணி இலக்கியம்! பல்வேறு பரணி இலக்கியங்களிலும் மணிமுடியாய்த் திகழ்வது செயங்கொண்டார் அருளிய கலிங்கத்துப் பரணியே! காலங் கடந்தும் கற்றோரால் பல்லாற்றானும் போற்றிப் புகழப்படுவது கலிங்கத்துப் பரணியே! எத்தனையோ காதற் பாடல்களுக்கும், வீரச் சுவை ததும்பும் விழுமிய பாடல்களுக்கும் வித்தாகவும் வேராகவும் விளங்குவது கலிங்கத்துப் பரணியே!

இத்தகு சிறப்புக்களையெல்லாம் தன்னகத்தே கொண்ட கலிங்கத்துப் பரணியைத் 'தரணி போற்றும் பரணி!' எனத் துணிந்து கூறலாமல்லவா?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7

வீரமுரசு விவேகானந்தர்

"தீரனாக இரு! கோழைத்தனத்தை அகல ஓட்டு! நீ ஒரு பாரதவாசி என்பதில் பெருமைகொள். 'நான் ஒரு பாரதவாசி; ஒவ்வொரு பாரதீயனும் என் சகோதரன்'— என்று பெருமையுடன் உரக்கக் குரல் எழுப்பு!"

இப்படி வீர முழக்கம் செய்த வீரமுரசுதான் விவேகானந்தர்!

மனத்தை உழுத மகான்களில் குறிப்பிடத்தக்கவர் சுவாமி விவேகானந்தர்!

"..... பாரத
மக்கள் அகத்திலும் புறத்திலும் வறுமை
விஞ்சியே தம்பீடு இழந்து பிணமென
நடமாடிய போது உயிரும் உணர்வும்
ஒருங்கே கூட்டி ஒளியினை வழங்கி
வாழ்வு அளிக்க வந்ததோர் ஞாயிறு!"

"பீடுசொல் பிறப்பில் பிறங்கு நுண்ணறிவும்
மன்னும் மறைகளும் மறைகளின் முடியும்
கற்றறிந் திட்டநூல் முற்றிய புலமையும்
அன்னை பராசக்தி தண்ணருட் கடலில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திளைத்து மகிழ்ந்த பரமானந்தப்
பரமகம்சரின் அருளும் ஒருங்கே
இயந்த உருவாய் இலங்கிய பெருமான்.
வீறு புகழார் விவேகா னந்தர்!"

என்று பாடிய தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் கருத்து ஈண்டு நினைவு கூரத்தக்கது.

விவேகானந்தரின் உள்ளம் ஒரு கருத்துச் சுரங்கம். அதில் நிறைந்திருக்கும் சிந்தனைகளாகிய இரத்தினங்கள் அளவிலடங்கா; அவற்றின் மதிப்பும் ஒளியும் அனைவரையும் ஈர்த்து இசைவிக்கும் திறத்தன; எக்காலத்தவரும் ஏற்றிப் போற்றும் வளத்தன; நாம் ஒவ்வொருவரும் நாளும் கடைப்பிடித்து ஒழுகும் வகையன. விவேகானந்தர் தம் மனத்தை ஆழ உழுததால் விளைந்த நல்முத்துக்களே அவர் தம் சிந்தனைக் கொத்துக்கள்! அவைகளே மனிதனை மாண்புடையவனாக்கி மலரச் செய்யும் நல்விருந்துக்கள்!

காவியுடையும், களங்கமற்ற சிந்தையும், கருத்துக்கள் நிறைந்த உள்ளமும் கொண்ட எழுச்சி மிகு ஏந்தல் விவேகானந்தர், இந்துக்களுக்கு விடுத்த அறைகூவல் பொன்னோட்டில் பொறிக்கத்தக்கது.

''ஹிந்து'— என்ற பெயரைக் கேட்ட அளவிலேயே உங்களுக்குள்ளே சக்தி மின் அலையைப் போலப் பாயவேண்டும். அப்பொழுதுதான்— , அப்பொழுது மட்டுமே— நீங்கள் 'இந்து' ஆவீர்கள்.''

'இந்து' என்ற பெயர் கொண்ட மனிதன் எந்த நாட்டினனாயினும், நமது மொழியோ வேற்று மொழியோ பேசினாலும், அந்தக் கணமே உங்களுக்கு மிகமிக நெருங்கியவனாகவும், இனியவனாகவும் ஆகிவிட வேண்டும். அப்பொழுதுதான்— அப்பொழுது மட்டுமே— நீங்கள் 'இந்து'— ஆவீர்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'இந்து என்ற பெயரில் மனிதனுக்கு ஏற்படும் துன்பம் உங்களது உள்ளத்தை வந்து தாக்கி, உங்களது மகனே துன்பப்படுவது போன்ற உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். அப்பொழுதுதான்— அப்பொழுது மட்டுமே— நீங்கள் இந்து ஆவீர்கள்.'

இந்துக்களை நோக்கி, விவேகானந்தர் விடுக்கும் இந்த வேண்டுகோள்கள்— பன்முறைப் படித்துச் சிந்திக்கத்தக்கன; செயலாற்றி உணர்ந்து மகிழத்தக்கன. ஒற்றுமை உணர்வை ஊட்டி ஆன்மீக நெறிப்படுத்தும் ஆற்றல் பெற்றன; அன்பு நெறிகாட்டி, அருள்வழி கூட்டி இன்பநிலை எய்த வழிகாட்டும் வகையன.

'யானையின் பலம் தும்பிக்கையில்— மனிதனின் பலம் நம்பிக்கையில்'— என்பது முதுமொழி. அந்த நம்பிக்கையை இழக்காது, எடுத்த செயலை அடுத்து முடிக்கும் ஆற்றலோடு முனைதல் வேண்டும். இதைத்தான் விவேகானந்தர் கூறுகிறார்.

''நம்பிக்கையை இழந்துவிடாதே. பாதை கத்தி முனையில் நடப்பதுபோல மிகவும் கடினமானதுதான். எனினும் எழுந்திரு, விழித்துக் கொள். மனம் தளராதே. நீ அடைய வேண்டிய உனது இலட்சியமாகிய குறிக் கோளைக் கண்டுபிடி.''

''முதலில் உன்னிடத்தில் நீ நம்பிக்கை வை. அதுதான் வழி. எல்லா ஆற்றல்களும் உனக்குள்ளேயே இருக் கின்றன. அதை உணர்ந்து நீ அந்த ஆற்றலை வெளிப் படுத்து. 'நான் எதையும் சாதிக்க வல்லவன்' என்று சொல். நீ உறுதியுடன் விஷத்தைப் பொருட்படுத்தாதிருந் தால், பாம்பின் விஷம் கூடச் சக்தியற்றதாகி விடும்.''

சுவாமி விவேகானந்தரின் இந்தக் கருத்துக்கள் விரக்தியுற்று போதைப் பொருளுக்கு அடிமையாகும் இன்றைய இளைஞர்களுக்கு மிகவும் இன்றியமையாதன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அக்கருத்துக்கள் இளைஞர்களின் மனத்தில் இடம்பெறுதல் வேண்டும்.

பண்டைப் பாரதம் பாரில் உயர்ந்தது; பண்பில் சிறந்தது; நல்லோர்களையும் வல்லோர்களையும் கொண்டிலங்கியது; வேதங்களையும் காவியங்களையும் பெற்று விளங்கியது; அறநூல்களையும், ஆன்மீகச் சிந்தனையாளர்களையும், ஆன்றவிந்த சான்றோர்களையும் பெற்றுத் திகழ்ந்தது. அதனால்தான் பாட்டுக்கொரு புலவர் பாரதியாரும்,

"பாரத நாடு பழம் பெரும் நாடு"

என்றும்,

"ஞானத்திலேபர மோனத்திலே— உயர்
மானத்திலே அன்ன தானத்திலே
கானத்தி லேஅமுதாக நிறைந்த
கவிதையிலே உயர்நாடு"
"ஆக்கத்தி லேதொழில் ஊக்கத்திலே— புய
வீக்கத்தி லேஉயர் நோக்கத்திலே
காக்கத் திறல்கொண்ட மல்லர்தம் சேனைக்
கடலினி லேஉயர் நாடு"

என்றும் புகழ்ந்து பாடினார். இதனை நினைவூட்டும் வண்ணம் சுவாமி விவேகானந்தர் கூறுகிறார், "முன்னே செல்! மனித குல முன்னேற்றத்திற்கான திட்டத்தை நமது மூதாதையர் மிக உத்தமமான முறையிலே வகுத்து வைத்துள்ளார்கள். நடைமுறையில் அதனை நிறைவேற்றுவதற்காக வேலை செய்து அதனைப் பூரணமாக்கு!"

விவேகானந்தரின் இந்த வேண்டுகோள் இளைஞர் சமுதாயத்திற்கு நல்லதோர் படிப்பினை. அதற்கு இளைஞர்கள் எடுத்த செயலை அடுத்து முடிக்கும் ஆற்றலைப் பெற வேண்டும்; தளரா ஊக்கத்தோடு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உழைக்க வேண்டும்; தன்னம்பிக்கை குன்றாது முன்னேற முனைய வேண்டும். பொதுவாக ஒவ்வொரு பணியும் மூன்று நிலைகளைக் கடந்து நிகழ்தல் வேண்டும். ஏளனம், எதிர்ப்பு, பிறகு கடைசியில் ஏற்றுக் கொள்ளப் படுதல் ஆகிய மூன்றும் கடந்தாக வேண்டும். அதற்கு உறுதி கொண்ட நெஞ்சும், தூய சிந்தையும், ஆழ்ந்த நம்பிக்கையும் வேண்டும். இவற்றைக் கடைப்பிடித்தால் தடைகள் எல்லாம் கதிரவனைக் கண்ட பனிபோல் மறைந்து விடும்.

உலகெங்கும் சுற்றி இந்து மதத்தின் அருமை பெருமை களைப் பற்றிப் பேசிய சுவாமிகள் கூறுகிறார்: ''உலகம் முழுவதும் சுற்றி வந்தேன். மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகை யில் இந்நாட்டு மக்கள் ஆழ்ந்த தமோகுணத்தில் (மந்த நிலையில்) ஆழ்ந்துள்ளதைக் காண்கிறேன். வெளித் தோற்றத்தில் சாத்துவிக நிலையில் (அமைதியும் சமசித்த மும் வாய்ந்து) இருப்பது போலப் பொய்ப் பாசாங்கு பண்ணுகிறார்கள். ஆனால் உள்ளுக்குள்ளே ஜடவஸ்துக் களையும் கல்லையும்போல அடிமட்டமான மந்தத்தன்மை யுள்ளது. இப்படிப்பட்ட மக்களால் என்ன காரியம் செய்யமுடியும்?

இதுபோன்று மந்தமான, சோம்பேறிகளான புலனுணர்ச்சியில் மூழ்கிய மக்கள் உலகில் எத்தனை நாள் வாழ முடியும்? முதலில் மேல்நாடுகளைச் சுற்றிப் பார்த்து விட்டு வந்த பிறகு என் வார்த்தைகளை மறுத்துப் பேசுங்கள். மேலைநாட்டு மக்களின் வாழ்க்கையில் எவ்வளவு துணிச்சல், வேலையினிடம் பக்தி, எவ்வளவு உற்சாகத் துடிப்பு, ரஜோ குணத்தின், பிரத்தியட்ச தரிசனம் தெரிகின்றது?''

அன்று கூறிய விவேகானந்தரின் இந்த உபதேசம் இன்றைக்கும் பொருந்துகிறதல்லவா? இதைத்தான் மகாகவி பாரதியாரும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அச்சம் தவிர்
ஆண்மை தவறேல்
வெடிப்புறப் பேசு
ரௌத்திரம் பழகு

—எனப் புதிய ஆத்திசூடியில் புகன்றுள்ளார்.

சீர்திருத்த விழையும் சிலர்களுக்கு எதைச் சீர்திருத்த எண்ணுகிறார்களோ அதில் இதயபூர்வமான ஈடுபாடும், பயன்கருதா மனப்பக்குவமும், இடைவிடா முயற்சியுடன் கூடிய தொண்டும் தேவை என்கிறார் சுவாமிகள்.

''மடுத்த வாயெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு டைத்து''

—என்ற குறட்பாவும் இதனை வலியுறுத்தும்.

தொண்டில் ஈடுபடும் தொண்டர்கள் வைராக்கியம் கொள்ளுதல் வேண்டும். நமது மனத்திலிருந்து வெறும் கடவுளர்கள் இப்பொழுது மறைந்து போகட்டும். நமது சொந்த மக்களினமாகிற கடவுள் மட்டும்தான் இப்பொழுது விழித்துக் கொண்டிருக்கிறார். எங்கு நோக்கினும் அவரது கைகள்; எங்கும் அவரது திருவடிகள்; எங்குமே அவரது காதுகள். எல்லாவற்றையும் வியாபித்து மூடி அவர் நிற்கிறார். நம்மைச் சூழ்ந்து காணப்படும் விராட புருஷனை வழிபடாமல் வீணான மற்ற தெய்வங்களின் பின்னால் ஏன் போக வேண்டும்? இந்தத் தெய்வத்தை வழிபட்டால், மற்றெல்லாத் தெய்வங்களையும் வழிபடமுடியும்.

'சித்த சுத்திதான் தேவை. அதாவது உள்ளத் தூய்மை. அது எப்படி வரும்? அதனை எய்துவதற்காக எல்லா வழிபாடுகளுக்கும் முதலில் செய்ய வேண்டியது விராட் புருஷன் என்ற கடவுள் வழிபாடாகும். அதாவது நம்மைச் சுற்றிலும் உள்ளவர்களை வழிபட வேண்டும். இந்த மக்களும், பிராணிகளும் நமது தெய்வங்களாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாம் முதலில் வழிபட வேண்டிய கடவுள் நமது நாட்டு மக்களே ஆவர்.'

சுவாமி விவேகானந்தரின் இந்த நெடிய அறிவுரையைப் பொதுநலத் தொண்டில் ஈடுபடும் ஒவ்வொருவரும் மேற் கொண்டொழுகினால் சுயநலமிகள் இனங் கண்டு கொள்ளப்பட்டு ஒதுக்கப்படுவார்கள். பொதுநலத் தொண்டர்கள் மிகுவார்கள். சுயநலமிகளும் மனந்திருந்திப் பொதுநலத் தொண்டராகலாம். இன்றைய நமது பாரதத் திருநாட்டில் எத்தனையோ நல்ல பல தொண்டு நிறுவனங் கள் செயல்பட்டாலும் அவற்றிலுள்ள. அனைத்துத் தொண்டர்களும் விவேகானந்தரின் இந்த நற்சிந்தனை களை நெஞ்சிலிறுத்த வேண்டும். அவர்கள் மட்டுமன்றி ஆட்சிபுரிவோரும், பொதுத்தொண்டில் ஈடுபடும் அனைவருமே விவேகானந்தரின் இந் நல்லுரையை ஏற்று நடந்தால் அவர்தம் தொண்டு மேன்மை அடையும்.

நீங்கள் முத்துச் சிப்பியைப் போல இருக்க வேண்டும். பாரத நாட்டில் அழகான ஒரு கற்பனைக் கதை உள்ளது. அதாவது சுவாதி நட்சத்திரம் உச்சமாக இருக்கும் பொழுது மழை பெய்து, அதிலிருந்து ஒரு மழைத்துளி சிப்பிக்குள் விழுந்தால் அந்த மழைத்துளி முத்தாக மாறி விடுமாம். முத்துச் சிப்பிகளுக்கு இது தெரியும். சுவாதி நட்சத்திரம் பிரகாசிக்கும் பொழுது அவை மேலே வருகின்றன. அரியதான அந்த மழைத்துளியைப் பிடித்து வைத்துக் கொள்ள அன்று காத்திருக்கின்றன. அவற்றுக் குள்ளே ஒரு நீர்த்துளி விழுந்ததும் முத்துச் சிப்பிகள் தமது ஓடுகளை அக்கணமே மூடிக்கொண்டு கடலின் அடிமட்டத் துக்குப் பாய்ந்து சென்று விடுகின்றன. அங்கே அந்த நீர்த்துளியைப் பொறுமையுடன் முத்தாக வளர்க்கக் காத்திருக்கின்றன.

நாமும் அதுபோலவே இருக்கவேண்டும். முதலில் செவிகளால் கேட்கவேண்டும். பிறகு புரிந்து கொள்ள

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேண்டும்; அதன் பின்னர் அலைக்கழிக்கின்ற எல்லாக் காரியங்களையும் கைவிட்டு விட்டு வெளிக் கவர்ச்சிகளால் பாதிக்கப்படாமல் மனக்கதவை மூடித் தாழிட்டு அந்தப் பேருண்மையை வளர்த்துக் கொள்வதில் முழுமனத்துடன் ஈடுபட வேண்டும். அப்போது முத்துப் போன்ற நல்ல சிந்தனைத் தெளிவுகள் கிடைக்கும். அவை தனிமனித னுக்கு மட்டுமேயல்லாமல் இந்தச் சமுதாயத்துக்கும் பயன் படும்.

''வெற்றி பெற வேண்டுமானால் உங்களுக்கு அபார மான விடாமுயற்சியும், அபாரமான மனவலிமையும் இருக்க வேண்டும். இடைவிடாது முயற்சி செய்கின்ற ஓர் ஆத்மா, 'நான் கடல் நீர் முழுவதையும் குடித்துவிடுவேன். எனது மனோ வலிமையால் மலைகளைப் பொடிப் பொடியாக்கிவிடுவேன்' என்று கூறுகிறது. அத்தகைய சக்தித் துடிப்பும், அத்தகைய மனோ சக்தியும் பூணுங்கள். கடினமாகப் பணிபுரியுங்கள்; நீங்கள் குறிக்கோளைக் கண்டிப்பாக அடைந்து விடுவீர்கள்.''

''விழித்துக் கொள்ளுங்கள், எழுந்திருங்கள், காரியம் வெற்றியடையும்வரை அயராது பாடுபாடுங்கள்''— இவை சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள் அவற்றை நன்மொழிகளாக ஏற்றுச் செயல்பட்டால் நானிலத்தில் மேனிலை அடையலாம்.

சோம்பேறியான வழிப்போக்கன் ஒருவன் ஒருநாள் வீதிவழியே மெல்லப் போய்க் கொண்டிருந்தான். ஒரு முதியவர் தம் வீட்டு வாசலில் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். உடனே அங்கு நின்று அவரிடம் ஒரு குறிப்பிட்ட கிராமம் எவ்வளவு தூரத்திலிருக்கிறது என்று தயங்கியவாறே கேட்டான், 'பெரியவரே இன்ன கிராமம் எவ்வளவு தூரத்திலிருக்கிறது?'

பெரியவர் அதற்குப் பதில் அளிக்கவில்லை. பல தடவை அதே வினாவைத் திரும்பத் திரும்பக் கேட்டான். பிறகும் பதில் அளிக்கவில்லை. அலுத்துப் போய் அவன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தன் வழியே நடக்கத் தொடங்கினான். உடனே முதியவர் எழுந்து நின்று அவனைக் கூவி அழைத்து. 'நில். நீ கேட்கிற கிராமம் இங்கிருந்து ஒரு மைல் தூரத்திலிருக்கிறது' என்றார். உடனே வழிப்போக்கன், 'ஏன் இதற்கு முன்னர் நான் பலமுறை கேட்டபோது நீர் ஏன் பேசவில்லை' என் வினவினான். அதற்கு அவர், 'அப்போது தயங்கித் தடுமாறிக் கொண்டு அந்த ஊருக்குப் போவது பற்றி அக்கறையின்றி நீ காணப்பட்டாய். ஆனால் இப்பொழுது நல்ல உறுதியுடன் காணப்படுகிறாய். பதில் பெறுவதற்கு உனக்கு உரிமையுண்டு' என்றார்.

'என் மகனே! இக்கதையை நீ நினைவிற் கொள்வாயா? வேலை செய்யப் போ. மற்றவை எல்லாம் வரும்.'

''என்னைத் தவிர வேறு எதனையும் எண்ணாமல் என்னிலே உறைந்து என்னையே சார்ந்து வாழ்கிறவனுக்குத் தேவைப்படுகிற அனைத்தையும் நான் அளித்து விடுகிறேன்''— என்ற கீதையின் அருள்மொழி இதுதான் என்கிறார் விவேகானந்தர்.

'முத்துச் சிப்பியாய் இருங்கள்!' என வேண்டுகோள் விடுத்த சுவாமி விவேகானந்தர் தனது வாழ்க்கையில் முத்துச் சிப்பியாய் வாழ்ந்து காட்டி எண்ணிறந்த முத்துக்களை விளைத்து இந்து சமயம் ஏற்றம் பெறவும்; இந்தியா புது எழுச்சியும், புத்தம் புது மலர்ச்சியும் பெறத் தந்துள்ளார். அம் முத்துக்களாகிய நற்சிந்தனைக் கொத்துக்கள் மனிதனை மாண்புடையவனாக்கும் இனிய நல் வித்துக்கள்! இளைஞர்களுக்கு வழிகாட்டும் ஒளி விளக்குகள்! ஆன்மீகச் செல்வர்களுக்கு அருங்கனிகள்! சமுதாயத் தொண்டர்களுக்கு உரமூட்டி, ஊக்கப்படுத்தும் கிரியாவூக்கிகள்! இந்திய மக்கள் ஒவ்வொருவர் நெஞ்சிலும் நிலையாக விளங்கி ஒளிரும் மாணிக்கங்கள்! அவற்றை நாளும் கற்று நற்றொண்டர்களாக மிளிர்வோமாக!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

8

திரையில் தூது

ஒருவர் மற்றொருவரிடம் ஒரு பொருளைப் பெற்று வரவோ, ஒரு செய்தியைச் சொல்லி அனுப்பவோ, உற்ற காதலைத் தெற்ற உரைத்துப் பிணக்கம் தவிர்த்து. இணக்கம் பெறவோ மற்றொருவரை இடையே அனுப்பி அதன் பயனை எதிர்நோக்கும் பெருவழக்கு மக்களிடையே தொன்று தொட்டு இன்றுவரை இருந்து வரும் ஒருவகைப் பழக்கமாகும். அதனை இலக்கிய வழக்கு ஏற்றது; 'தூது' எனப் பெயரும் வழங்கியது.

மக்களில் ஒருவரையாவது, விலங்கு பறவை முதலான அஃறிணைப் பொருள்களில் ஒன்றினையாவது காற்று, மேகம் முதலான இயற்கை நிகழ்வுகளையாவது தூது விடுப்பதாகக் கலிவெண்பாவால் பாடப்படுதல் மரபு. தூது செல்பவரின் இலக்கணத்தைப் பத்துப் பாடல்களில் பாங்குடன் விளக்குகிறார் திருவள்ளுவர்.

ஒருவர் கூறுவனவற்றை அறிந்து மற்றொருவர்க்கு உணர்த்தும் ஆற்றல் வாய்ந்த மக்களைத் தூது விடுதல் இயல்பு.

"அன்புஅறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

—என்பார் திருவள்ளுவர். அவ்வாறு எடுத்துரைக்கும் ஆற்றல் இல்லாத அஃறிணைப் பொருளையும் இயற்கை நிகழ்வுகளையும் தூது விடுத்ததாகக் கூறுதலைப் பல பாடல்கள் சான்று பகர்கின்றன.

அன்னம், மயில், கிளி, மேகம், நாகனவாய்ப் பறவை, குயில், நெஞ்சு, தென்றல், வண்டு, தோழி என்னும் பத்தும் தூது விடுவதற்கு உரியனவாகச் சொல்கிறது இரத்தினச் சுருக்கம் எனும் நூல். நண்டைத் தூது விடும் பாட லொன்று அகநானூற்றில் உள்ளது.

தூதுப் பொருள்கள் பத்து என்னும் வரையறைக்குட் படாமல், பணவிடு தூது, நெல்விடு தூது, துகில்விடு தூது, புகையிலைவிடு தூது, வனசவிடு தூது, மான்விடு தூது, காக்கைவிடு தூது, விறலிவிடு தூது, தமிழ்விடு தூது, நெஞ்சுவிடு தூது முதலாகப் பலவாகின்றன.

தூதுப் பொருள்கள் அந்தந்தக் கவிஞர்களின் கற்பனைக்கேற்பவும், தூது விடப்படும் பொருளுக்கு ஏற்பவும், அந்தக் காலத்துக்கேற்பவும் இடத்துக்கு ஏற்பவும் மாறுபடுகின்றன. கற்பனைச் சிறப்பும், கருத்துச் செறிவும், நடைத் தெளிவும் மிகுதியும் காணப்படுவது தலைவன் தலைவியர் விடுக்கும் தூதுப் பொருள்கள் குறித்த பாடல்களில்தான் எனில் மிகையன்றே! அதிலும் குறிப்பாகத் தலைவன் தலைவியர் உயர்திணைப் பொருளைத் தூது விடாமல் அஃறிணைப் பொருள் களையே தூது விடுதற்குக் காரணம் காதலர்களின் மனக்கலக்கமேயாகும். அவர்களின் எதிர்பார்ப்பினையும், ஏக்கத்தினையும் போக்க எழுந்த உன்னத உத்தியே தூது. அகத்தில் ஆழ்ந்து கிடக்கும் துயரத்தை எடுத்துரைத்து நெஞ்சுக் கனத்தைக் குறைக்கக் கையாண்ட நூதன முறையே இந்த 'தூது' விடுதல்.

இந்தத் தூது உத்தியைச் சங்கப் பாடல்கள் மட்டு மன்றி, பக்தி இலக்கியங்களும், சிற்றிலக்கியங்களும், தனிப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாடல்களும் எடுத்தாள்கின்றன. தமிழ் இலக்கியத்தில் ஆய்ந்து தோய்ந்த திரையிசைக்கவிஞர்களும் இந்தத் தூது உத்தியைக் கற்பனைத் திறத்தோடும், கவின்மிகு வனப் போடும் பொற்புறக் கையாண்டுள்ளனர். அந்தப் பாடல்கள் அனைத்தும் பன்முறைப் படித்து மகிழத் தக்கன.

பூனைவிடு தூது!

விழி இழந்த பெண்ணொருத்தி அவளது காதலனுடன் பன்முறைப் பேசியிருக்கிறாள். அவனது உதவும் மனப் பாங்கும், அன்பு பாராட்டும் விரிந்த உள்ளமும், ஆன்ற அறிவும், இனிய சொல்லும், அவளை மிகுதியாக ஈர்த்து இசைவிக்கின்றன. அவனது கள்ளமில்லா வெள்ளைக் சிரிப்பும், வெகுளிப் பேச்சும் அவளைப் பலமுறை மயக்கத்தில் ஆழ்த்துகின்றன. அவரது பழகும் பண் பாலும், பரிவு ததும்பும் அன்பாலும் அவரது உள்ளம் இனிய வெல்லக்கட்டி போன்றது என உணர்கிறாள். ஆனால் இத்தகைய நற்பண்புகளின் இருப்பிடமான நாயகனின் அழகைக் கண்ணாரக் கண்டு மகிழ விழியில் ஒளியில்லாததால் மனம் மிக வருந்துகிறாள். அவனது பேரழகைக் காண இயலாவிடினும் அது பற்றிக் கேட்கத் துடிக்கிறாள். பெற்றோரிடம் அது பற்றிக் கூற இயலாது. அதனால் எண்ணிய கருத்தும் ஈடேறாது. எனவே தனது வீட்டில் வளர்க்கும் பூனையைத் தலைவனிடம் தூதுவிடத் துணிகிறாள். ஏனெனில் பூனை இருட்டிலும் இரை தேட வல்ல ஒளிமிகு கண்களை உடையதாகையால் அதனால் அவளது காதலனின் அழகை வருணித்துச் சொல்ல முடியும் என எண்ணிப் பூனையிடம், 'பூனைக்குட்டி! என் அத்தானின் பழகும் பண்பால் அவரது மனது வெல்லக் கட்டி என அறிவேன். ஆனால் அவரது அழகை நீதான் சொல்ல வேண்டும். பொன்னிறமுடையவரா? பளபளக்கும் அழகு முகம் முல்லை மலர்போல் மலர்ந்தும், சந்திரனைப் போல் ஒளி மிகுந்தும் காணப்படுமா? மிதந்த ஆவலினால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கேட்கிறேன். எனது மனநிலையைப் புரிந்து கொண்டு உடனடியாகச் சென்று அவரைப் பார்த்துவிட்டு எனக்குச் சொல்வாயா?' எனக் கேட்கிறாள்.

மியாவ் மியாவ் பூனைக்குட்டி
வீட்டைச் சுத்தும் பூனைக்குட்டி
அத்தான் மனது வெல்லக் கட்டி— அவர்
அழகைச் சொல்லடி செல்லக்குட்டி (மியாவ்)

அங்க மெல்லாம் பளபளக்கும்
தங்க நிறம்போல்
அவரின் திருவுருவம்
தகதகன்னு ஜொலிக்குமா ?
அந்தி முல்லை சந்திரனை
உவமை சொல்வது போல்
யாரும் ஆசை கொள்ளும் வண்ணம்
மலர்முகம் இருக்குமா ? (மியாவ்)

செங்கரும்பாய் இனிக்கும் அவர்
சொல்லும் எனை மயக்கிடுதே
சிரிப்பும் அதைப் போலே
ஆளை மயங்கச் செய்யுமா ?
பொங்கி எழும் ஆவலினால்
மங்கை நான் கேட்கிறேனே
புரிந்து கொண்டு பதிலை
எனக்குச் சொல்ல உனக்குத் தெரியுமா ? (மியாவ்)

(படம்: குமுதம், பாடலாசிரியர்; மருதகாசி)

இந்தப் பாடலின் கவிஞர் மிகச் சிறந்த புரட்சிக் கருத்தைக் கூறியுள்ளார். பூனை குறுக்கே போனால் சகுனம் என்ற மூடப்பழக்கம் மிகுதியாக இருந்த காலத்தில் அந்தப் பூனையைத் தூதுப் பொருளாகப் பயன்படுத்தி யுள்ளார் கவிஞர். இலக்கியங்களில் பூனையைத் தூது விடுத்ததாகச் செய்தி தெரியவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விழியிழந்த பெண்ணுக்கு உலகம் முழுவதும் இருட்டாகத்தான் தெரியும். ஆனால் இருளிலும் வெளிச்சம் தெரியக் கூடிய பிராணிகள் இரண்டு உண்டு. ஒன்று ஆந்தை; மற்றொன்று பூனை. ஆந்தை வீட்டில் வளர்க்கும் பிராணியன்று. பூனை வீட்டில் வளர்க்கும் பிராணி. எனவே பூனைக் குட்டியை விழியிழந்த பெண்ணுக்குத் தூதுப் பொருளாகப் பாடியுள்ளார் கவிஞர்.

மூடப் பழக்கத்தை முறியடிக்கும் புரட்சி நோக்கும், புதிய தூதுப் பொருளை அறிமுகப்படுத்திய புதுமைப் போக்கும், பண்பைப் பழகுவதிலும் பேசுவதிலும் அறியலாம். ஆனால் அழகைக் கண்டுதான் உணர முடியும் என்று உய்த்துணர வைத்த கவித்துவ மேன்மையும் மிகுந்தவர் கவிஞர் என்பதை இப்பாடல் நன்கு பறைசாற்றுகிறது.

மலர்விடு தூது!

காதலனைப் பிரிந்து வாடும் காதலி மனம் கலங்கி, உளம் வருந்துகிறாள்; உடல் மெலிகிறாள்; உள்ளத்தை எடுத்துரைக்க வழியின்றித் தவிக்கிறாள். அவளது இறுகிய கைவளைகள் கழன்றுவிட்டன; கண்கள் துயில மறுக்கின்றன; நினைவுகள் நெஞ்சைப் பிளக்கின்றன. உள்ளத்தின் வேதனையை உரியவனிடம் உரைக்கவல்லது மலரே என முடிவு செய்கிறாள். ஏனெனில் மலரும் இவளைப் போல் மென்மையானது, சூடியவருக்குப் பெருமை தருவது; மணமும், மகிழ்வும் ஊட்டுவது.

அதனால் மலரிடம், 'மலரே! எனது மனநிலையை உன்னால் புரிந்திருக்க முடியும். என்னுடைய துன்பங் களை நீ அறிவாய். அதேபோல் உனது நிலையையும் நானறிவேன். காதலன் இங்குவரின் நீ அவனிடம் எனது நிலையைக் கூறு! நான் அவனில்லாமல் படும் வேதனை யைச் சொல்லு! நாடகத்தில் காட்சிகள் மாறுவது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போன்று காலம் மாறும்; காலங்களாலே வாழ்க்கை செல்லும் பாதை மாறும்; ஆனால் எது மாறினாலும் எந்தன் இதயம் மாறாது; காதலனுக்காகக் காத்திருக்கும் என் நிலையும் மாறாது; நெஞ்சில் நிறைந்த அவரைச் சேரும் திருநாளான மணநாளை எதிர்நோக்கி யிருக்கிறேன். இந்தக் கருத்தை மறவாது எனது காதல னிடம் சொல்லு!' என வேண்டி மலரினைத் தூது விடுகிறாள். இப்பாடல் கவியரசர் கண்ணதாசனின் கற்பனைத் திறனுக்கோர் எடுத்துக்காட்டு.

மலரே மலரே தெரியாதோ
மனதின் நிலைமை புரியாதோ— எனை
நீ அறிவாய் உனை நான் அறிவேன்
காதலர் தன்னைக் காண வந்தால்
நிலையைச் சொல்வாயோ— என்
கதையைச் சொல்வாயோ ?
(மலரே)

காட்சிகள் மாறும் நாடகம் போலே
காலமும் மாறாதோ
காலங்களாலே வாழ்க்கை செல்லும்
பாதையும் மாறாதோ— யார்
மாறிய போதும் பாவை எந்தன்
இதயம் மாறாது!— என்
நிலையும் மாறாது!
(மலரே)

கண்களில் தோன்றும் காட்சியில்
ஒன்றாய் கலந்தே நின்றாரே!
நினைவுகள் தோன்றும்
நெஞ்சில் என்றும்
நிறைந்தே நின்றாரே!— இனி
அவருடன் வாழ்வில் ஒன்று சேரும்
திருநாள் வாராதோ ?— என்
மணநாள் வாராதோ ?
(மலரே)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொதுவாகக் காதல் வயப்பட்டுப் பின் பிரிந்த காதலி தான் அடைந்த பிரிவுத் துயரங்களைத் தலைவனிடம் தெரிவிப்பதற்காக அன்னம், நாரை, புறா, கிளி முதலான வற்றில் ஏதேனும் ஒன்றினைத் தூது போகும்படி வேண்டுவதாகப் பாடுவது கவிஞர்களின் வழக்கு. ஆனால் இங்கு ஒரே பாடலில் கடல், அலை, காற்று, சந்திரன் மூன்றினையும் தூதுப் பொருள்களாகக் கையாளும் கவிஞரின் கற்பனைத்திறம் ஏற்றிப் போற்றத்தக்கது.

அலைவிடு தூது!

அலை பாயும் கடலின் ஒரு கரையில் இருந்து கொண்டு காதலி அந்தக் கடலின் மறு கரைக்குச் சென்றுள்ள காதலனுக்குத் தூதுவிடத் துணிகிறாள். துள்ளி வரும் வெள்ளலையைப் பார்த்து, 'நீ எனது காதலனிடம் எனது நிலையைக் கூறுவதற்காகத் தூது செல்ல மாட்டாயா?' என வேண்டுகிறாள். அக்கரையிலிருக்கும் காதலனும் அதே போல தத்தி வரும் வெள்ளலையை வேண்டுகிறான்.

காற்றுவிடு தூது!

வாழைத்தண்டு போன்று மெல்லிய உடலையும், எலுமிச்சம் நிறம் கொண்ட கொடி போன்ற இடையையும் உடைய தலைவியின் ஆசையை நிறைவு செய்வேன் எனச் சொன்ன தலைவன், தலைவியை இப்படி ஆசையில் தவிக்கவிட்டு ஓரிடத்தில் சென்று விட்டான். 'ஊரெல்லாம் உறங்கினாலும். ஓசையெல்லாம் அடங்கினாலும் எனக்கு மட்டும் உறக்கம் வரவில்லை. ஆசை அடங்கவில்லை. எனது இந்த நிலையைத் தலைவனிடம் கூறுவாயாக' என வேண்டுகிறாள் காற்றினை.

மறுபக்கம் தலைவன், கருமேகக் கூந்தலில் மின்னலென வகிடு எடுத்து, வேகமாய் தலைமுடித்து, பின்னல் போன்று சடை போட்டு, மீன் பிடிக்க வந்தவள் என் மனதை எடை போட்டதோடு என்னையும் அறிந்து கொண்டாள். மையெழுதிய அவளின் விழிகளாலேயே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருமணத்திற்கும் மொய் எழுதிப் போய் விட்டாள். அப்படிச் சென்றவளிடம் போய், 'காற்றே! அவளது பேரழகில் முதலில் ஆசை வைத்தேன். எதனையும் எடை போட்டு அறியும் அவளது துல்லிய மனத்தை நேசித்தேன். அதன் பின்தான் காதலித்தேன் என்ற விவரத்தையும் கூறிவிடு' என்கிறான்.

நிலவுவிடு தூது!

படகோட்டும் தலைவன் மீன் பிடிக்கும் தலைவியைக் காதல் கொள்ளுகிறான். இது ஏழைக் காதலர்களின் எளிய சங்கமம். அதில் மனதைக் கொடுத்தேன். உடலாக நான் இங்கிருக்க, என் நெஞ்சம் மட்டும் அவனைத் தேடி அங்குச் சென்றுள்ளது என்கிறாள் தலைவி.

தலைவன் சூரியனைப் போன்று ஒரு பக்கமும், தலைவி தாமரை மலரைப் போன்று மறுபக்கமும் இருக்கின்றனர். சூரியனின் வருகைக்காகத் தாமரை மலர் போல் காத்திருக் கிறாள் தலைவி இவர்களின் நிலையை உணர்த்தவல்லது நிலவே என எண்ணிய தலைவன் சந்திரனைத் தூது செல்ல மாட்டாயா? என வேண்டுகிறான்.

காதலி : பாட்டுக்கு பாட்டெடுத்து— நான்
பாடுவதைக் கேட்டாயோ ?
துள்ளி வரும் வெள்ளலையே !— நீ போய்
தூது சொல்ல மாட்டாயோ ?

காதலன் : கொத்துங்கிளி இங்கிருக்க
கோவைப்பழம் அங்கிருக்க
தத்திவரும் வெள்ளலையே— நீ போய்
தூது சொல்ல மாட்டாயோ ?
(பாட்டுக்கு)

காதலி : இளவாழைத் தண்டாக
எலுமிச்சைக் கொடியாக
இருந்தவளைக் கைப்பிடிக்க
இரவெல்லாம் கண்முடி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இல்லாத ஆசையிலே
என்மனசை ஆடவிட்டான்
ஆட விட்ட மச்சானோ
ஓடம் விட்டுப் போனானே
ஓடம் விட்டுப் போனானே
ஊரெல்லாம் தூங்கையிலே
உள்மூச்சு வாங்கையிலே
ஓசையிடும் பூங்காற்றே!
நீ தான் ஓடிப்போய் சொல்லிவிடு!

காதலன் : மின்னலாய் வகிடெடுத்து
மேகமாய் தலைமுடித்து
பின்னலாய் சடைபோட்டு
என்மனசை எடைபோட்டு
மீன்பிடிக்க வந்தவளை
நான் பிடிக்கப் போனேனே
மையெழுதும் கண்ணாலே
மொய்யெழுதிப் போனாளே!
ஆசைக்கு ஆசைவச்சேன்
அப்புறம்தான் காதலிச்சேன்
ஓசையிடும் பூங்காற்றே!— நீதான்
ஓடிப்போய் சொல்லிவிடு!

காதலி : வாழைப் பூ திரியெடுத்து
வெண்ணெயிலே நெய்யெடுத்து
ஏழை மனக் குடிசையிலே
ஏத்தி வச்சான் ஒருவிளக்கை
என் மனசை நான் கொடுத்தேன்!
நெஞ்சு மட்டும் அங்கிருக்க
நான் மட்டும் இங்கிருக்கேன்!

காதலன் : தாமரை அவளிருக்க— இங்கே
சூரியன் நானிருக்க
சாட்சி சொல்லச் சந்திரனே!
நீபோய் தூது சொல்ல மாட்டாயோ?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தப் பாடலில் ஒரு சிறப்பு என்னவெனில் காதலர்கள் இருவரும் தூதுப் பொருள்களை ஒரே மாதிரித் தேர்ந்தெடுத்ததால் இருவரும் ஒத்த மனமுடையவர் என்பதைக் கவிஞன் காட்டுகிறான். தூதுப் பொருள் களைத் தேர்ந்தெடுத்த விதமும் அருமை. முதலில் வெள்ளலை. அதன் வேகம் காற்றினும் குறைவுதான். எனவே அலையை அடுத்து வேகமாய்ச் செல்லும் பூங்காற்றினைத் தூது விடுகின்றனர். அதனினும் வேகமாகச் செல்வது சந்திரன் ஒளியல்லவா? ஆகவே மூன்றாவதாக சந்திரனைத் தூது விடுகின்றனர். மேலும் தலைவி அலையைத் தூதனுப்ப அந்த அலை அனுப்பிய செய்தியைத் தலைவன் ஏற்றுக் கொண்டு அவனது பதிலுரையை அதே அலையிடம் திரும்பக் கூறி அனுப்புவதாக அமைக்கும் கவிஞனின் திறம் போற்றத் தக்கது.

பொதுவாகக் காதலர்கள் தூதுப் பொருள்களிடம் புலம்புவதையே பார்க்கலாம். இதில் நேர்மாறாகச் செய்திப் பரிமாற்றமாகவும், மகிழ்வூட்டும் செய்தியாகவும் உள்ளது. மேலும் அதில் குறிப்பாக,

"மை யெழுதும் கண்ணாலே
மொய் யெழுதிப் போனாளே!"

என்ற தொடரில் கவிஞன் தமிழ்ப் பெண்ணின் பண்பாட்டை உணர்த்துகின்றான். காதலன் வேட்கை மிகுதியால் காதலியைக் கைப்பிடிக்க முனைகிறான். அவளோ அது திருமணத்திற்குப் பின்தான் என்பதை விழிகளால் சொல்லாமல் சொல்லுகிறாள். ஆனாலும் அவர்கள் காதல் உறுதியாகிக் கடிமணத்தில் நிறைவேறும் என்பதற்கு அச்சாரம் கொடுப்பது போல் விழிகளால் பேசிவிட்டாள் என்று பாடும் கவிஞர் வாலியின் கவித்துவத்தைப் பாராட்டாமலிருக்கலாமா?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேகம்விடு தூது!

இளம் காதலர்கள் தம் உள்ளக் கருத்துக்களைப் பரிமாறுவதற்காகப் பயன்படுத்தும் தூதுப் பொருள் களுள் மிக இன்றியமையாதது மேகமே! வான வீதியில் நகர்ந்து செல்வன மேகங்கள். எனவே அந்த மேகங் களையே தூதாக அனுப்புவது காதலர்களின் கைவந்த கலை. அதிலும் கவிஞர்கள் மேகங்களைத் தூதாக அனுப்பும் போது தம் கற்பனைத் திறனையெல்லாம் அற்புதமாகப் பொதிந்துள்ள பாடல்களிலேயே வழங்குவர். இதற்கு இலக்கியங்கள் சான்று காட்டுகின்றன. கற்பனை யில் விற்பன்னராகத் திகழ்ந்த காளிதாசர் மேகம் தூதம் என்னும் காவியத்தையே இயற்றியுள்ளார். மேகத்தைத் தூதாக அனுப்புவதில் திரையிசைக் கவிஞர்களும் தவறவில்லை.

பொதுவாக ஒருவரையொருவர் அறிந்த பின்னர், ஒருவர் தம் உள்ளக் கருத்தை மற்றொருவருக்கு அறிவிப்பதற்காகத் தூதனுப்புவர். ஆனால் இங்கு வித்தியாசமான இரு உள்ளங்கள் தத்தம் துணைவர் களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை ஆண்டவனிடம் ஒப்படைத்து விடுகின்றனர் காரணம் இருவருமே இறையுணர்வு மிக்கவர்கள்; அனைத்துச் செயல்களும் இறைவனால்தான் நிகழ்கின்றன என்ற நம்பிக்கை கொண்டவர்கள்; தமக்கு எது நடக்கவேண்டும் என்பதைத் தம்மைக் காட்டிலும் இறைவனே நன்கு அறிந்திருப்பான் என்பதில் உறுதியான நம்பிக்கை உடையவர்கள்.

அத்தகைய நாயகனும், நாயகியும் வானவீதியில் குளிர் மிகுந்த வாடைக் காற்றாகிய தேரில் பவனிவரும் மேகங்களைப் பார்த்து, 'மேகங்களே! விரைந்து ஓடாதீர்கள்! கொஞ்சம் நில்லுங்கள்! எனக்கு உகந்த தலைவன் யார் என்பதை அன்னை வேளாங்கண்ணியிடம் கேட்டு மறவாது உடனே சொல்லுங்கள்!' என்கிறாள் தலைவி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதே நேரத்தில் மற்றொரு பக்கம் தலைவனும், 'மேகங்களே! எனக்கு ஏற்ற தலைவி யார்? என்பதை வேளாங்கண்ணி மாதாவிடம் கேட்டுச் சொல்லுங்கள்!' என வேண்டுகோள் விடுக்கிறான்.

பெண் : வான மெனும் வீதியிலே
குளிர் வாடை யெனும் தேரினிலே
ஓடிவரும் மேகங்களே!
கொஞ்சம் நில்லுங்கள்!
என் உறவுக்கு யார் தலைவன் என்று
கேட்டுச் சொல்லுங்கள்!— மாதாவைக்
கேட்டுச் சொல்லுங்கள்!

ஆண் : வான மெனும் வீதியிலே
குளிர் வாடை யெனும் தேரினிலே
ஓடி வரும் மேகங்களே!
கொஞ்சம் நில்லுங்கள்!
என்உறவுக்கு யார் தலைவி என்று
கேட்டுச் சொல்லுங்கள்!— மாதாவைக்
கேட்டுச் சொல்லுங்கள்!

இப்படித் தலைவியும் தலைவனும் விடுத்த வேண்டுகோள்களின்படி மேகமும் வேளாங்கண்ணி மாதாவிடம் தூது சென்று தலைவன் யார்? தலைவி யார்? என்பதைக் கேட்டுச் சொல்லிவிட்டதாம். அதனால் இரு தெய்வீகக் காதலர்களும் சோலையிலே சந்திக்கின்றனர். அப்போது தலைவி, 'கதிரவனைக் கண்ட தாமரை, இதழ்களை விரியச் செய்து மலர்ச்சியோடு காணப்படும். அதுபோல என்னைச் சந்தித்து என் கரம் பற்றுவதற்காக வந்திருக்கிறாயோ மன்னவனே?' என முகமலர்ச்சியுடன் கேட்கிறாள்.

தலைவன், 'யாருக்கு யார் என்று சேர்த்து வைப்பதில் வல்லவனான இறைவன் நீ தான் எனக்கு உரிமை உடையவள் என்று எனது மனத்திற்குச் சொல்லிவிட்டான்' என்கிறான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'இறை உணர்வோடு தட்டினால் தேவன் குடிகொண்டிருக்கும் கோயில் கதவு திறக்கும். அதேபோல் பாவை நீ என் எதிர்ப்பட்டு என் சிந்தனையைத் தட்டியதால் இன்று என் மனக் கதவும் திறந்துவிட்டது' என்று தலைவியிடம் கூறுகிறான் தலைவன்.

அதற்கு அவள், 'யான் பன்முறைப் படித்த வேதங்களைக் கேட்டு மனமுருகியே மாதா எனக்குத் தகுந்த துணைவரைத் தேடி தந்திருக்கிறாள்' என மனம் பூரித்துச் சொல்லுகிறாள்.

பெண் : தாமரையின் இதழ் படர
காலை வரும் கதிர் போலே
பூமகளின் கரம் தழுவ
சோலை வந்த மன்னவனே !

7759

ஆண் : யாருக்கு யார் என்று
சேர்த்துவைக்கும் தேவன் இன்று
நீ எந்தன் உரிமை என்று
நெஞ்சோடு சொன்ன தென்ன ?

ஆண் : தட்டினால் திறப்ப தன்றோ
தேவன் கோயில் மணிக்கதவு !
தட்டினாள் பாவை இன்று
திறந்த தம்மா மனக்கதவு

பெண் : நான் படித்த வேதமெல்லாம்
வான் மறையில் கேட்டதனால்
தாய் மனது இரங்கி வந்தாள்
தக்க துணைத் தேடித் தந்தாள் !
(வானமெனும் வீதியிலே...)

இவ்வாறு அன்னை வேளாங்கண்ணியின் அருளினால் இணைந்த இருவரும் சேர்ந்து, மாதாவிடம் தமக்காகத் தூது சென்ற மேகங்களுக்கு நன்றி கூறியதோடு, 'மேகங்களே! நாங்கள் இருவரும் நல்லுறவு கொண்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நலமாக வாழ்வதற்கு மனம் நிறைந்த வாழ்த்துக்களைக் கூறுங்கள்!' என்று வேண்டுகின்றனர்.

''வான மெனும் வீதியிலே
குளிர் வாடையெனும் தேரினிலே
கூடிவரும் மேகங்களே! கொஞ்சம்
நில்லுங்கள்! எங்கள் உறவு
என்றும் வாழ்க! என்று
வாழ்த்துச் சொல்லுங்கள்!— நெஞ்சார
வாழ்த்துச் சொல்லுங்கள்!''

(படம் அன்னை வேளாங்கண்ணி இயற்றியவர்— வாலி)

இந்தப் பாடலில் கவிஞர் மிக அற்புதமான உத்தியைக் கையாண்டுள்ளார். அதாவது தூது அனுப்பியதோடு அமையாது, அதன் பலனையும் அதே பாடலில் பாடி விட்டார். கால இடைவெளி நடைமுறையில் இருந்தாலும், சுற்பனையில் அதனைக் குறைத்துவிட்டார். அதோடு தூதினால் பயன் அடைந்த காதலர் மனமொத்த வர்கள் என்பதை அவர்தம் வேண்டுதல் மூலம் உணர்த்தியுள்ளார். முதலில், ஓடிவரும் மேகங்களே! என விளித்த தலைவனும் தலைவியும் கூடி வரும் மேகங்களே! என இறுதியில் அழைப்பதன் மூலம் தாங்களும் கூடி மேகங்களைப் போலவே இணைந்துவிட்டோம் என்பதைக் குறிப்பாகக் கூறுகின்றனர். இத்தகு கற்பனைச் சிறப்போடும், கவின்மிகு வனப்போடும் பொற்புறப் பாடிய கவிஞரைப் போற்றத்தான் வேண்டும்!

இரயில்விடு தூது

தூதுப் பொருள்கள் காலத்துக்குக் காலம் வேறுபடுகின்றன. ஒரு காலத்தில் மிகுதியும் பயன்பட்ட நாரை இன்று அதிகமில்லை. அறிவியல் முன்னேற்றத்திற் கேற்பத் தற்பொழுது. தூதுப் பொருள்களை மாற்றியுள்ளனர் கவிஞர்கள். 'சான்றாகக் காதலி பட்டணம் போயிருக்கும் தலைவனிடம் தூதனுப்ப யாரைச் சொல்ல

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லாம் என எண்ணும்போது, அவன் பயணம் சென்ற புகைவண்டி மீண்டும் அவள் ஊருக்கு அவனின்றி வருவதைப் பார்க்கிறாள். அந்த ரயிலையே தூதுவிடத் துணிகிறாள்.

தூதுபோ ரயிலே! ரயிலே!
துடிக்குதடி குயிலே! குயிலே!
என்னென்னவோ என் நெஞ்சிலே
பட்டணம் போனா பாப்பாயா?
பார்த்தொரு சங்கதி கேட்பாயா?
கிழக்கே போகும் ரயிலே நீதான்
எனக்கொரு தோழி தூதுபோ வாயோ?

நடப்பதோ மார்கழி மாசம்
தையிலே நிச்சய தார்த்தம்
நாதஸ்வரம் மேளம் வரும்
நெதமும் நெல்லு சோறாக்கி
நெத்திலி மீனைக் கொழம்பாக்கி
மச்சான் வந்தா ஆக்கிக் கொடுப்பேன்
மாரிலே சாய்ஞ்சி புதையல் எடுப்பேனே

நாளெல்லாம் ஏங்கிக் கிட்டிருக்கேன்
சாமிக்கு வேண்டிக் கிட்டிருக்கேன்
தூக்கமில்லை ராத்திரிக்கே
வீரபாண்டிக் கோயிலிலே
வருகிற தையிப் பொங்கலிலே
வேண்டின படியே பொங்கலும் வெச்சிக்
கேட்டதையெல்லாம் கொடுக்கிறேன் சாமிக்கு

தூதுபோ ரயிலே! ரயிலே!
துடிக்குதடி குயிலே! குயிலே!

இப்பாடல் மூலம் தலைவி தலைவனைப் பிரிந்துள்ளதால் தூக்கமில்லை நாள்தோறும் தலைவனின் வருகைக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறாள். ஏக்கத்தைப் போக்கும் வகையில் நிச்சயதார்த்த நாளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதனைச் சொல்லுவதற்காக ரயிலைத் தூதனுப்புகிறாள். மேலும் அவள் தலைவனுக்குப் பிடித்த உணவு சமைப்பதாகவும், அவனை மனம் மகிழ வைப்பதாகவும், இருவரும் வேண்டிக்கொண்டபடி வீரபாண்டிக் கோயில் பொங்கல் வைத்துப் பூசனை செய்வதாகவும் உறுதி கூறுகிறாள்.

கிராமத்துப் பெண், பட்டணத்துக்குச் சென்றுள்ள தலைவனுக்கு ரயிலைத் தோழியாகப் பாவித்துத் தூது போகச் செய்த கவிஞர் கங்கை அமரன் பாராட்டுக்குரியவரே! அறிவியல் வளர்ச்சிச் சாதனங்களில் ஒன்றான ரயிலைத் தூதாகத் தேர்ந்தெடுத்த புதுமை நோக்கு கவிஞரிடம் பளிச்சிடுகிறது. அதோடு கிராமத்துப் பெண் பேசும் மொழியிலேயே பாடலை எழுதியிருப்பதும் சிறப்புக்குரியதே!

ரயிலைப் போன்று, அண்மையில் பத்திரிகையையும், ஆகாய விமானத்தையும் தூதனுப்பும் உத்தி வளர்ந்து வருகிறது. வருங்காலத்தில் விண்கலங்களையும், செயற்கைக் கோளையும், அக்னியையும் தூதுப் பொருளாகக் கவிஞர்கள் கையாண்டாலும் வியப்பில்லை!

திரைப்படப் பாடல்களில் இடம்பெற்ற தூதுப் பாடல்களில் மிகச் சிலவே ஈண்டு எடுத்துரைக்கப் பட்டுள்ளன. இவை போன்று இன்னும் பல பாடல்கள் உள்ளன. அவையனைத்தும் கற்பனை நயம் மிகுந்தன! கருத்துவளம் செறிந்தன! பலமுறைப் பாடி மகிழத்தக்கன!

★

"FORWARDED FREE OF COST
AND WITH THE COMPLIMENTS OF
THE Dept OF Edn. Govt. OF INDIA
NEW DELHI"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேயோன் படைப்புக்கள்

1. தாலாட்ட மறந்த
   தமிழ்க் கவிஞன் — கட்டுரைத் தொகுப்பு நூல்
2. இளமையின் குரல் ,,
3. புலமைப் புறா ,,
4. காவியமும் ஓவியமும் ,,
5. மனத்தை உழுத மகான் ,,
6. அம்மா எப்ப நீ
   பாட்டியாவ? — நாடகத் தொகுப்பு நூல்
7. திருவள்ளுவர் ஆத்திசூடி — மூலமும் உரையும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar